JL
M211, N30
N60.30.52
158641

# சுதேசமித்திரன்

31-1-1960

262 60
MADRAS
43



25
காசு

7-2-60

மித்திரன் வாரப்பதிப்பு
இதழில்

சாண்டில்யன்

எழுதும்

"வசந்தகாலம்"

ஆரம்பமாகிறது

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

ஜயன்




—Mohan Bros.

# பொருளடக்கம்

Vol: XXXI No 52
விகாரி-தை 18, ஜனவரி 31, '60

தரம் கெடுவது எதனால்? 3
மக்கள் மன்றம் 5
அரசியல் துக்கடா 7
காற்றுவாக்கிலே —ஆரட்டை 9
விமர்சனம் —சாண்டில்யன் 11
நாடகமும் நாட்டியமும் —ஸஞ்சாரி 13
தாய்ப்பாசம்
—எஸ். லட்சுமி சுப்ரமணியம் 15
நிழலாட்டம் —ஜி. எஸ். மணி 21
அப்பாவி —ப. ராதாகிருஷ்ணன் 33
சாவின் சந்நிதியில் —'ரஜனு' 41
மூடிக்கிடக்குதே உன் நெஞ்சம்
—தமிழ்வாணன் 44
மருந்து எதுக்கடி? —கல்யாணம் 53
மாதர் மகாசபை —குங்குமம் 60
உள்உணர்வு —'ஸ்ரீவத்ஸன்' 65
துப்பறியும் டைகர் —சந்தனு 70
அணைத்த கை —'ஆருத்ரா' 72
நான்கு கடிதங்கள்
—ரா. வேங்கடசாமி 81
திறந்த கூண்டு
—ஜி. கே. பொன்னம்மாள் 87

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளி வரும் கதைகளில் பெயர்கள், சம்ப வங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வாழிய செந்தமிழ் — சுதேசமித்திரன் வாரப்பதிப்பு — வாழ்க நற்றமிழர்

☆

# தரம் கெடுவது எதனால்?

மாணவர்களிடை கிளர்ச்சி, ஒழுங்கீனங்கள் அதிகரித்து வருவதன் காரணங்களை மத்திய விஞ்ஞான—கலாசார இலாகா மந்திரி ஜனப் ஹுமாயூன் கபீர் கல்கத்தா சர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் ஆராய்ந்துள்ளார். மாறி வரும் ஒரு சமுதாயத்தில் அம்மாறுதலின் எதிரொலி யாக மாணவர்களும் கிளர்ச்சியுறுவது சகஜமே; அதைத் தவிர்க்க முடியாது; உண்மையில் அது விரும்பத்தக்கதே என்று அம்மந்திரி குறிப்பிட்டுள்ளார். உறங்கிப் பொழுது போக்கும் சோம்பேறியைவிட, சுறுசுறுப்பாக நல்லதோ, கெட்டதோ ஏதோ ஒரு காரியம் செய்துகொண்டிருப்பவன் மேல். அதிலும் சமுதாயத்தில் பல்வேறு சக்திகள் தலை யெடுத்துள்ள நிலையில், நமது இளைஞர்களிடை துடிப்புக் காண்பது முற்றிலும் வரவேற்கத்தக்கதுதான். ஆனால், அதை நல்ல வழியில் திருப்புவது கல்வி நிலையங்களிலுள்ள ஆசிரியர்களின் பொறுப்பு. சமுதாயத் தலைவர்களும் அதற் கேற்றவாறு நடந்துகொள்ள வேண்டும். ஆனால், தற்போது மாணவர்களின் துடிப்பு அல்லது கிளர்ச்சி சமுதாயத்திற் குத் தீங்கு விளைக்கும் துறையில் திரும்பியிருக்கிறது.

இந்நிலைக்கு முக்கிய காரணம், மாணவர்கள் கவனம், கல் விக்கு நேரடியான சம்பந்தமில்லாத பல சமுதாய அல்லது அரசியல் பிரச்னைகளில் திருப்பப்படுவதுதான். அவர்கள் தம் படிப்பு பூர்த்தியானபின், அத்தகைய பிரச்னைகளில் நேரடியாக ஈடுபடுவதை யாரும் ஆட்சேபிக்கப்போவதில்லை. அதற்கு முன்னதாக அவர்கள் தங்கள் துடிப்பு முழுவதை யும் அறிவைப் பெருக்கிக்கொள்வதில் பயன்படுத்துவது தான் பொருத்தம். ஆனால், பல இடங்களில் கல்வி நிலையங் களுக்கு அல்லது சமுதாய மாறுதலை நோக்கமாகக்கொண்ட

கட்சித் தலைவர்கள் அதற்கு இடங் கொடுப்பதில்லை. மாணவர்களைத் தங்கள் இயக்கங்களில் சேர்த்துக்கொண்டு அமளி விளைப்பதன்மூலம் எளிதாகத் தங்கள் நோக்கத்தைச் சாதித்துக்கொண்டு விடலாமென எண்ணுகின்றனர். இவர்கள் மாணவர்களைக் கெடுப்பது ஒருபுறமிருக்க, ஆசிரியர்களிலேயே சிலர் தங்களுக்குப் போதிக்கும் பொறுப்பைவிட, மாணவர்களை உடனடியாக அரசியல் அல்லது சமுதாயச் சீர்திருத்த–இயக்கங்களில் திருப்பும் பொறுப்புதான் அதிகம் என்று எண்ணுகின்றனர். பயிரை அழிக்கும் வேலியைப் போன்ற இவர்களால் மாணவர்களின் நல்வாழ்வுக்கு ஏற்படும் கேடு இன்னும் அதிகம். கல்வி நிலையங்களுக்குள்ளே இத்தகைய ஆசிரியர்களின் கைங்கரியம் ஒருபுறம். வெளியிலுள்ள அரசியல் அல்லது சமுதாயச் சீர்திருத்தத் தலைவர்கள், இளைஞர்களைத் தவறான வழிகளில் செலுத்த பல இடங்களில் மாணவர்கள் சங்கங்கள் வாய்ப்பளித்து வருகின்றன. உண்மையில் இவையனைத்தையும் கலைத்துவிட்டாலேயே மாணவர்களின் நடைமுறை திருந்தக்கூடும் என்று சமீபத்தில் ஒரு சர்வகலாசாலையின் உப அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

மாணவர்களிடை ஒழுங்கீனங்கள் அதிகரிக்க இன்னொரு முக்கிய காரணம், குறிப்பாக கல்லூரிகளில் உயர்தரப் படிப்பில் உண்மையில் சிரத்தை அல்லது அதற்கு இலாயக்கில்லாத மாணவர்களும் இடம்பெற்றிருப்பது. கல்விக்கு நேரடியான சம்பந்தமற்ற விஷயங்களில் தாங்களும் ஈடுபட்டு, அவ்வாறு செய்ய மற்ற மாணவர்களையும் நிர்ப்பந்திப்பவர்கள் இவர்கள்தான். இந்நிலையில் கல்வியின் தரம் வரவர கெட்டு வருகிறதென்றால், அது வேறெவ்விதமாக இருக்க முடியும்! உயர்தரப் படிப்பில் அக்கறையில்லாத மாணவர்கள் கல்லூரிகளில் இடம் பெறாதபடி செய்ய வேண்டுமென்று மத்திய மந்திரி கூறுகிறார். ஆனால், மேல் படிப்புக்கான பரீட்சைகளில் குறைந்தபட்சம் வாங்க வேண்டிய மார்க்குகளை மேன்மேலும் குறைக்கவேண்டுமென மாணவர்களிடை கிளர்ச்சி நடந்து வருகிறது. இதை அரசியல் காரணங்களுக்காக ஆதரிக்கும் 'தலைவர்'களும் இருக்கின்றனர். படிப்பின் தரம் வரவரக் குறைவதால் நாட்டின் எதிர்காலம் என்னாகுமென்பதைப்பற்றி அவர்களுக்கு கவலையில்லை. உடனடியாக தங்கள் கட்சி பெறக்கூடிய லாபம்தான் அவர்களுக்குப் பெரிது. கல்வி பற்றி மேற்குறித்த பல தரப்புகளின் தற்போதைய மனோபாவம் அடியோடு மாறினாலன்றி, கல்வித் தரச் சரிவை எவ்வாறு தேக்க முடியும்?

58641

# மக்கள் மன்றம்



17–1–60 சுதேசமித்திரன் வார இதழ் கண்டேன்; அக மிக மகிழ்ந்தேன்; ஓவிய மன்னர் ஸ்ரீ கே. மாதவன் அவர்களின் அட்டைப் பட ஓவியம் இதழுக்கு அழகு ஊட்டுகிறது எனில் அது மிகையன்று; பொங்கல் பொன்னாளில் தமிழர் வாழ்வில் இன்பம் பொங்கிட விழையும் தங்கள் மேலான எண்ணத்துக்குச் சான்றாகத் திகழ்கிறது தங்களது தலையங்கம்.

ஸ்ரீ ஜி. எஸ். மணி அவர்களின் 'நிழலாட்டம்' வாசகர்களின் உள்ளத்தை உலுப்பிவிடுகிறது. நெஞ்சங் கவர்ந்த நிழலாட்டம் நீள்கதையின் ஆரம்பம் உள்ளத்தை ஈர்த்துவிட்டது!

சி. முத்துக்குமரன்,
திருநாகேஸ்வரம்.

உங்கள் 17–1–60 பொங்கல் மலரைப் பார்த்தேன். கண்ணனின் குழலோசையின் மகிமையை எடுத்துக் காட்டியுள்ள அட்டைப் படம் மிகமிக நன்றாக அமைந்துள்ளது. ராதை குழலோசையால் எப்படி மெய்மறந்து கண்ணன் வசப்பட்டாள் என்ற படம் தத்ரூபமாக அமைத்துள்ள நம் ஓவியர் அவருக்கு என் நன்றி. இவ்வாரம்முதல் ஆரம்பித்துள்ள 'நிழலாட்டம்' என்ற கதையை நான் படித்தேன். கதை ஆரம்பத்திலேயே விறுவிறுப்பாக இருக்கிறது. புரட்சி எழுத்தாளர் கதை என் மனதைக் கவருகிறது.

ஆர். மீனாக்ஷிமூர்த்தி,
சிதம்பரம்.

ADDISON
"Hallmark of Quality"
ஆபீஸ் மற்றும் வீட்டிற்கான
ஆல் - ஸ்டீல்
உபகரணங்கள்

ட்யூபுலர் மேஜை:
டீக்கான தோற்றம். வேலை செய்ய சௌகரியமானது. ஆபீஸ்களுக்கு உபயோகமானது.

ஸ்டாண்டர்ட் பீரோக்கள்:
ரம்மியமான கலர்களில் கிடைக்கும். சாமான்களை சுத்தமாகவும், பத்திரமாகவும் இருக்க உதவுகிறது

மடக்கும் நாற்காலி:
அழகானது. சுலபமாக மடக்கக்கூடியது. மற்றும் உறுதியானது.
அடிஸன் & கோ. (பிரைவேட்) லிமிடெட்
மதராஸ் — பெங்களூர்

17–1–60 மித்திரன் மலரில் குறு நாவல் இல்லாமல் ஏமாற்றமடைந்த எங்கள் நெஞ்சிற்கு பி. கோதண்டராமன் எழுதியிருக்கும் 'எங்கள் பிரிவு' மகா இதமாக இருந்தது. 'நிழலாட்டம்' ஜி. எஸ். மணி அவர்களின் புதிய தொடர் கதை (எடுத்த எடுப்பிலே) ஆரம்பத்திலேயே அனைவர் உள்ளத்தையும் பரிசாக வாங்கிவிட்டது. புரட்சி எழுத்தாளரின் 'மூடிக் கிடக்குதே உன் நெஞ்சம்' பலே ஜோர். முடிவை அறிய மனம் துடிக்கும் அளவிற்கு அருமையாக இருக்கிறது.

கோதை,
போரூர்

ஃ ஃ ஃ

சுதேசமித்திரனில் வரும் தொடர் கதையான மூடிக் கிடக்குதே உன் நெஞ்சம் என்ற தொடர் கதை, சுதேசமித்திரனுக்கே மிக பொலிவுடன் விளங்குகிறது. இந்தமாதிரி வேறு கதைகளை தாங்கள் வாரப்பதிப்பில் வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

வி கோவிந்தராகவன்,
கோயமுத்தூர்-2.

ஃ ஃ ஃ

நான் தங்கள் சுதேசமித்திரன் வார இதழை சமீபத்தில்தான் படிக்கத் தொடங்கினேன். என்றாலும், தங்கள் இதழ் என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. தங்கள் பொங்கல் மலரைப்பற்றி இரண்டு வார்த்தை: 'பொங்கல் மலர்' என்று அதிக ஆசையுடன் எடுத்துப் பார்த்தேன். ஏமாந்தேன். இதில் கவர்ச்சி மிக்க ஒன்றையும் காணவில்லை என்றாலும், 'மைத்ரேயன்' அவர்கள் எழுதிய 'வழித்துணை' என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. ஆசிரியரின் கற்பனையும், கதாபாத்திர அமைப்பும் கனஜோர்.

என். எஸ். சுப்பிரமணியம்,
கள்ளிக்கோட்டை.

ஃ ஃ ஃ

தங்கள் பொங்கல் மலர் (17–1–60) கிடைக்கப் பெற்றேன். 'ரஷ்யாவின் புதுக் காதல்' கார்டூன் பிரமாதம். 'துப்பறியும் டைகர்' சித்திரத் தொடர் கதையும் 'நிழலாட்டம்' தொடர் நாவலும் முதல் தரமாக இருக்கிறதெனில், மிகைப்படுத்திக் கூறுவதாக எண்ணக் கூடாது. 'குரல் கட்டியது' சிறு கதை பொங்கல் மலருக்குத் தனி மதிப்பைக் கொடுக்கிறது.

எம். வி. சத்தியமூர்த்தி,
மதுரை.

ஃ ஃ ஃ

வாரத்துக்கு வாரம் பத்திரிகை ஏன் இப்படித் தேய்பிறைபோல வளர்ந்து வருகிறது? பொங்கல் மலர் நுனிக் கரும்புபோல இருக்கிறது. சிறு கதைகள் வரவர சாரமில்லாமல் இருக்கின்றன. சுவாரஸ்யமான கட்டுரைகள் எதுவும் இல்லை. தொடர் கதை என்ற பெயரில் வரும் கதைகள் உப்புச்சப்பில்லாமல் இருக்கின்றன. சினிமாப் பகுதியில் வரும் படங்களையும் நிறுத்திவிட்டீர்கள். உங்கள் போட்டிப் பகுதிக்கு விஷயம் இல்லையோ என்னவோ? அட்டைப் படமும் மட்டரக பேப்பரில் வர ஆரம்பித்துவிட்டது. இன்றைய மார்க்கெட்டில் நாலணா விலைக்கு வரும் பத்திரிகைகளுள் தாழ்ந்த தரத்தில் மட்டமாக வெளிவருவது 'மித்திரன்' தான். ஏன் இப்படி ஆயிற்று?

ஆர் பட்டாபிராமன். சென்னை-25

*



பெரியவர்:—தீபாவளி கழித்தும்கூட இவ்வளவு துணி வந்திருக்கிறதா?
டைலர்: பல்லைப் பிரித்து தைக்க வந்திருக்கிறது!!!



# அரசியல் துக்கடா

இந்திய தேசீயக் காங்கிரஸின் 65-வது மகாநாடு இன்று ஒரு நாள் முன்னதாகவே முடிவுற்றது.

—சதாசிவ நகர் செய்தி.

இந்த ஆண்டு, காங்கிரஸ் மகாசபை, தான் மேற்கொள்ளும் எல்லாக் காரியங்களையும், சுறுசுறுப்புடன், குறித்த காலத்துக்குள் முடித்துவிடுமென்பதற்கு இது ஒரு சூசகம் என்கிறார் ஒரு காங்கிரஸ்காரர்.

ஃ ஃ ஃ

திராவிட நாடு பிரித்துக் கொடுப்பதாக இருந்தால், தான் காங்கிரஸில் சேரத் தயார் என்று தி. மு. க. தலைவர் திரு. அண்ணாதுரை கூறினார்.

—திருச்சி செய்தி.

முதலில் அவர் காங்கிரஸில் சேர்ந்துவிடட்டும். பிறகு அவர் திராவிட நாடே வேண்டாம் என்று சொல்லக் கூடும்!

ஃ ஃ ஃ

கல்வியில் நல்ல தேர்ச்சி பெற்றவர்கள் எழுதும் புத்தகங்களையே மாணவர்கள் படிக்க வேண்டும். அரை குறையாகப் படித்தவர்கள் எழுதும் புத்தகங்களை அவர்கள் படிக்கக் கூடாது.

—ராஜாஜி

மாணவர்கள் ஒரு புத்தகமும் படிக்க வேண்டியதில்லை என்பதைத்தான் ராஜாஜி இப்படிக் கூறுகிறார் என்று நினைக்கிறோம்!

ஃ ஃ ஃ

மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளித்ததால் ரூ. 23 கோடி செலவு ஏற்பட்டுள்ளது. அதை ஓரளவு ஈடு செய்யவே தபால் கார்டின் விலையை உயர்த்துகிறோம்.

—ஸ்ரீ சுப்பராயன்

மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு இன்னமும் வேலை அதிகரிக்கவேயொழிய [illegible] தவிர, ஊதியம் உயரவில்லை என்கிறார் விஷயமறிந்த ஒருவர்.

ஃ ஃ ஃ

மாடு பிடி விழா அடிதடியில் முடிந்தது.

—ஒரு செய்தித் தலைப்பு.

'சண்டைக்கு எடுபிடி மாடுபிடி' என்ற வசனம் பொய்யாகுமா?

ஃ ஃ ஃ

கேரளாவில் தேர்தல் முடிந்தவுடன் காங்கிரஸ்காரர்கள் சுணங்கிவிடாமல் தொடர்ந்து உற்சாகத்துடன் வேலை செய்து வர வேண்டும்.

—நேருஜி.

கேரளா தேர்தல்களில் தோற்றுவிட்டால்தானே 'தொடர்ந்து உற்சாகத்துடன் வேலை செய்ய வேண்டும்?' நாம் தான் வெற்றியடையப்போகிறோமே என்கிறார் ஒரு காங்கிரஸ்காரர்.

ஃ ஃ ஃ

வன்னியகுல க்ஷத்திரியர்கள் சுதந்திரக் கட்சியில் சேர முடிவு செய்துள்ளனர்.

—கடலூர் செய்தி.


காங்கிரஸ்காரர்கள் எப்பொழுது வன்னியர்களுக்கு அன்னியர்களாகி விட்டார்களோ அப்பொழுது சுதந்திரக் கட்சியில் சேர வேண்டியது தான்!

ஃ ஃ ஃ

சிறந்த ஜனநாயகம் என்றால் நாம் பிறர் கையை எதிர்பார்க்காமல் இருக்க வேண்டும்.

—நேருஜி.

வோட்டுப் போடும் பொது மக்களின் கையைக்கூடவா?



கரு மீன் அபாயம்

# காற்று வாக்கிலே!

## கனவு பலிக்குமா?

பங்களூரில் பிரமாதமான மகாநாடு. நாட்டில் நெருக்கடியான கட்டத்தில் காங்கிரஸ் மகாசபைக் கூட்டம். பல வருஷங்களுக்குப் பிறகு காங்கிரஸ் தலைமைப் பதவி ஒரு தென்னிந்தியருக்குக் கிடைத்ததால் தனிச் சிறப்பு பெற்ற மாநாடு. 25 லட்சம் ரூபாய் செலவில் ஆர்ப்பாட்டமான, ஆடம்பரமான வைபவம். லட்சம் லட்சமாக வார்த்தைகளை அள்ளி வீசி அலங்காரப் பேச்சுகள்; அறைகூவல்கள், எல்லாம் இருந்தது. பொதுமக்கள் கூட்டம்மட்டும் காணவில்லை. மூன்று நாட்கள் திட்டமிட்ட மகாசபையை இரண்டே தினங்களில் அவசர அவசரமாக முடிக்க நேர்ந்த அவல நிலை. மூவாயிரம் தொண்டர்கள் பவனி வந்தனர். ஆனால், மகாநாட்டைப் பார்வையிடவும், அருமைத் தலைவர்களது அருள் வாக்கைக் கேட்கவும் அதிகம் ஜனங்கள்கூடத் திரளவில்லை. எத்தனையோ காரணங்கள்; எவ்வளவோ மழுப்பல்கள், ஜனங்களைச் சொல்வானேன்? நாலாயிரம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தும் அவர்களில் பாதிப் பேர்களே வந்திருந்தனர்.

நல்லபடி செயலாற்ற உருவான திட்டங்களை எதிர்பார்த்த வேளையில் வழக்கமான தீர்மானங்கள். வெறும் கோஷங்கள் என்று மேலிடத்தாரே இதுவரை ஒதுக்கி வைத்திருந்த விஷயங்களில் திடீர் மோகம். மக்களின் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தட்டியெழுப்பக்கூடிய எந்த அம்சத்தையும் தீர்மானங்களில் காணவில்லையே என்று திட்ட உதவி மந்திரியே அங்கலாய்த்தார். மற்றும் பல அமைச்சர்களுக்கும் அதிருப்தி; அவநம்பிக்கை. இருந்தாலுமென்ன? தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

காங்கிரஸ் ஜீவனுள்ள ஸ்தாபனமாக நீடிக்க வழி வகைகளில் கவனம். கட்சியில் காணப்படும் கட்டுப்பாடின்மையும், கோஷ்டிப் பூசல்களும் கண்டு பெருந் தலைவர்கள் கலக்கம். ஆரம்ப அங்கத்தினர்கள் சேர்ப்பதில் போலிக் கணக்குகள், பெரும் மோசடிகள்; தலைமைப் பீடம் நியமித்த ஆய்வுக் குழுவே 'நற்சாட்சி' பத்திரம் வழங்கியுள்ளது. ஸ்தாபனத் தூய்மையின் அவசியத்தைப் புதுத் தலைவரும் வற்புறுத்தினர். காங்கிரஸ்காரர்கள் நாணயமாக நடப்பதோடு, பொதுஜன நம்பிக்கைக்கும் பாத்திரமாக வேண்டும் என்று உருக்கமாகக் கேட்டுக்கொண்டார்.

எண்ணற்ற உத்தமர்கள் உயிரைக் கொடுத்து வளர்த்த ஸ்தாபனம், அருந் தியாகங்களால், பெரும் போராட்டங்களால் வளர்ந்த ஸ்தாபனம். இன்று கறை படிந்து, களங்கமுற்று விளங்குவதேன்? அன்று திடசங்கல்பம் இருந்தது. லட்சியத்தில் உறுதி இருந்தது. தன்னலம் கருதாத பரிபக்குவம் இருந்தது. மக்கள் மனதைக் கவரும் ஆற்றலும் இருந்தது. இன்று எல்லா அம்சங்களிலும் பூஜ்யம், மகாசபை அக்கிராசனரே தமது தலைமையுரையில் வேதனையுடன் வர்ணித்தார். காங்கிரஸ் ஸ்தாபனத்தில் ஒழுங்கீனமும், கட்டுப்பாடின்மையும் மலிந்துவிட்டன. தாயாதிக் காய்ச்சலையும் மிஞ்சும் கோஷ்டிப் பூசல்கள்; அடக்குவாரின்றித் தலைவிரித்தாடும் ஊழல்கள். தியாகம், தன்னலமற்ற சேவை போன்ற பழைய லட்சியங்கள் மறைந்து அதிகாரம், அந்தஸ்து, பதவி ஆகியவற்றை நாடி ஓடும் நிலைமையே ஏற்பட்டுள்ளது. மக்களுடன் தொடர்பு அறுந்துவிட்டது. சமூக நிலவரத்தைப் புரிந்துகொள்ளாத போக்கே சகஜமாகிவிட்டது. இந்த நிலையில் ஸ்தாபனத்தில் கட்டுப்பாட்டை நிலை

நாட்டி, கட்டுக்கோப்பை வளர்த்து, காங்கிரஸ் மீண்டும் தெம்புடன் இயங்க வழி வகுக்க விரும்புகிறார் புதுத் தலைவர். கனவு பலிக்குமா? நல்ல பெயர் சம்பாதிக்கவும், எதிர்க் கட்சியினரிடமும் நல்ல பெயரெடுக்கவும் காங்கிரஸ்காரர்கள் முயற்சிக்க வேண்டுமென்கிறார், காதில் விழுமா?

நிலையான கட்டுப்பாடும், தரம் குறையாத நிலையும் தேவை. காந்திஜி தலைமையில் காங்கிரஸ்காரர்கள் பொது வாழ்விலும், தனி வாழ்க்கையிலும் உயர்ந்த தரத்தைப் பராமரித்து வந்தவர். இன்று முற்றிலும் மாறுபட்ட நிலை. பெரும் புள்ளிகள்மீதும் ஒழுங்கு நடவடிக்கையெடுக்க அன்று மேலிடம் சற்றும் தயங்கியதில்லை. இன்று ஸ்தாபனத்தில் ஒழுங்கும் இல்லை; தட்டிக் கேட்க தைரியமும் இல்லை. முன்னாள் நிதி மந்திரியாகவும், தற்போது சர்வகலாசாலை மான்யக் கமிஷன் அக்கிராசனராகவும் பொறுப்பு வாய்ந்த பதவியிலுள்ள பிரமுகர் உயர் மட்டத்திலுள்ள பலர்மீது அடுத்தடுத்துக் குற்றஞ்சாட்டியுள்ளார். அவர்களது லஞ்ச ஊழல்கள்பற்றி விசாரித்தறிய தனி நீதி மன்றம் நியமிக்க வேண்டுமென்று பன்முறை கோரியுள்ளார். ஆனால், அந்த யோசனையை நமது மதிப்புக்குரிய பிரதம மந்திரியவர்கள் பிடிவாதமாக நிராகரித்துள்ளார். அவர் வாதத்திலும் நியாயம் இருக்கிறது. ஆனால், மக்களது அச்சம் அகல வேண்டாமா? அக்குற்றச்சாட்டுகள் குறித்துப் பிரதம மந்திரியும், காங்கிரஸ் மேலிடத்தாரும் மனப்பூர்வமாக விசாரித்து முடிவு கூறினாலும்கூட பொது ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படுமா? விசாரணைக்கு ஏற்பாடு செய்ய மறுப்பதால் இப்போது கொஞ்சநஞ்சம் உள்ள மதிப்பும், மரியாதையும் காற்றில் பறந்துவிடும் என்பது விளங்கவில்லையா? தென்னாட்டில் தோன்றியுள்ள புதுக் கட்சி இவை இதைத்தானே தினந்தினம் சொல்லி குத்திக் காட்டும்? காங்கிரஸ் மந்திரிகள் தாங்களாகவே தங்கள் சொத்து விவரங்களை அவ்வப்போது வெளியிட வேண்டுமென்று ரொம்பவும் தயவுபண்ணி முடிவு செய்திருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்களை யாராவது நம்புவார்களா? காங்கிரஸ்காரர்கள் நாணயமுள்ளவர்களாக இருந்தால்மட்டும் போதாது; பிறர் அதை உணருமாறு நடந்துகொள்ளவும் வேண்டும் என்கிறார் ஸ்ரீ சஞ்சீவ ரெட்டி. கடுமையான குற்றச்சாட்டுகள் அனைத்தையும் தீர விசாரித்துத் தீர்வு காண வேண்டுமென்று வற்புறுத்துகிறார். சொன்ன சொல் செயலில் பரிமளிக்க உருவான ஏற்பாடு செய்யக் கூடாதா?

திரும்பத் திரும்ப நிறைவேறி வரும் தீர்மானங்களை நடைமுறையில் கொண்டு வருவதே தமது ஆசை என்றார் புது அக்கிராசனர். பாக்கிப் பேர்கள் முயன்று மூக்குடைபட்ட காரியத்தில் நமது தென்னாட்டுத் தலைவர் வெற்றி பெற்றால் நமக்கெல்லாம் பெருமைதான்.

—ஆரட்டை.




"எங்க ஊரில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு குடம் தண்ணீர் ஒரு ரூபாய்க்கு விற்கப்பட்டது...?

"பூ இதென்னயா இங்கே ஓட்டல் பையெல்லாம் காபீங்கற பேரிலே ஒருகப் இரண்டரையணுவிற்கிறதே..."



**விமர்சனம்:** 'சாண்டில்யன்'

# ஜெமினியின் 'இரும்புத் திரை'

வெள்ளித்திரை வானில் ஜொலிக்கும் பிரபல நக்ஷத்திரங்கள் தோன்றும் ஜெமினியின் 'இரும்புத்திரை' உண்மையில் ஒரு திரை இன்பம். படத்தின் பெரும் பகுதியை மிக இன்பமாகவே பார்க்கிறோம். சுவையான கதை ஓட்டமும், சிறந்த கருத்துகளும் நிறைந்த ஜெமினியின் இரும்புத்திரை தமிழ்ப் பட உலகுக்குப் பெருமை தரக்கூடிய ஒரு சிறப்புத் திரையாகவே அமைந்திருக்கிறது.

கதை, முதலாளி—தொழிலாளி போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. ரங்கபுரம் மில் முதலாளிக்கும் அந்த மில்லில் புதிதாக வேலைக்குச் சேர்ந்த மாணிக்கம் என்ற முற்போக்கு வாலிபனுக்கும் நேர்ந்த லக்ஷியப் போராட்டத்தையும், மில் முதலாளியின் பகிரங்க மகள் மாலதிக்கும் ரகசிய மகள் ஜெயந்திக்கும் மாணிக்கத்தின் விஷயமாக ஏற்பட்ட காதல் போராட்டத்தையும் மையமாகக் கொண்டு புனையப்பட்ட இந்தக் கதையில் காதல், வீரம், தயை, கோபம் முதலிய பல ரஸங்கள் பிரவாகிப்பதைப் பார்க்கிறோம்.

ரங்கபுரம் மில் முதலாளி முதலில் ஒரு ஏழையை மணந்து அவள் மூலம் ஜெயந்தி என்ற மகளைப் பெறுகிறார். பிறகு ஏழையை அலையவிட்டு பணக்காரி யொருத்தியை மணந்து மாலதி என்ற மகளைப் பெறுகிறார். இந்த இரண்டு பெண்களும் ஒரே பள்ளியில் படிக்கிறார்கள். விதிவசத்தால் இருவரும் மாணிக்கம் என்ற ஒரே புருஷனைக் காதலிக்கிறார்கள்.

மாணிக்கம் ஏழையாயிருந்தாலும் ஓழிந்த வேளையில் ரிக்ஷா இழுத்து சம்பாதித்து மற்ற வேளையில் தொழிற் பள்ளியில் படித்துத் தேறுகிறான். அவன் அண்ணன் சரவணன் ரங்கபுரம் மில்லில் ஒரு தொழிலாளியாதலால், அந்த ஊருக்கு மாணிக்கம் செல்லுகிறான். மில்லில் யந்திரத்தின் சக்கரம் உடைந்து போனபோது, அதை ரிப்பேர் செய்ததாலும் முதலாளி பெண் மாலதியின் மனத்தையும் கவர்ந்ததாலும் அவனுக்கு அந்த மில்லில் மெகானிக் வேலை கிடைக்கிறது. மாலதி அவனுக்கு மாத்திரம் வேலை வாங்கிக் கொடுத்திருந்தால்



தகராறு ஏற்பட்டிருக்காது. தன் [illegible] காள் என்று தெரியாமலே ஜெ[illegible] கும் மில்லில் டைபிஸ்ட் வேலை வ[illegible] கொடுக்கிறாள். மாலதியால் உ[illegible] யோகம் பெற்ற இந்த இருவரும் கா[illegible] உத்தியோகத்தில் இறங்கவே, சிக்கல் ஆரம்பமாகிறது.

ஜெயந்தியை வேலையைவிட்டு நீக்க ஏற்பாடு செய்கிறாள் மாலதி. மில் முதலாளி ஒரு மாத போனஸ் கொடுத்து மூன்று மாத போனஸுக்குக் கையெழுத்து வாங்கியதால், மாணிக்கத்

ளுக்கும் முதலாளிக்கும் தகராறு ஏற்படுகிறது. மில்லில் கடைசியாக வேலை நிறுத்தம் நடக்கிறது. மாணிக்கத்தின் யூனியன் நடவடிக்கைகளின் காரணமாக, மாணிக்கத்தின் சகோதரன் குடும்பம் பெரும் துன்பத்துக்குள்ளாகிறது. ரங்கபுரம் மில் முதலாளியின் குரூரத்தை உணர்ந்த ஜெயந்தி, மில்லில் உள்ள பஞ்சுக்குத் தீ வைக்க முயல்கிறாள். அவளைத் தடுத்த மாணிக்கம் தான் செய்யாத ஒரு குற்றத்துக்காக சிறைப்படுகிறான். கோர்ட்டில் உண்மை அம்பலமாகிறது. ஜெயந்தி தன் சகோதரி என்பதை உணர்ந்த மாலதி மாணிக்கத்தை அவளுக்கே விட்டுக் கொடுக்கிறாள். முதலாளி, தொழிலாளி சமரசத்துடன் படம் முடிகிறது.

இந்தக் கதையை மிக நன்றாக எடுத்திருக்கிறார் ஸ்ரீ வாஸன். முதலாளி வர்க்கத்தின் தவறுகளை எடுத்துக் காட்டும்போது, அந்த வர்க்கத்தைப்பற்றி எந்த வித துவேஷமும் ஏற்படாத முறையிலும், முற்போக்கை வலியுறுத்தும் முறையிலும் கதையைத் திரையில் ஓட்டியிருக்கிறார். வசனங்களை மிகச் சிறப்பாக எழுதியிருக்கிறார் கொத்தமங்கலம் சுப்பு. வசனங்கள் காந்தீயத்தையும் அஹிம்சையையும் வலியுறுத்துகின்றன. ஆனால், முதலாளித்துவத்தை இகழவில்லை, யார் மீதும் வசை பாடவில்லை. அதற்காகக் குற்றங்களைக் குறைத்துக் காட்டவும் முயற்சி செய்யப்படவில்லை. கக்ஷியும் பிரசாரமும் எப்படியாவது படங்களில் நுழைக்கப்படும் இந்தக் காலத்தில், பிரசார நோக்கமில்லாமல் சம தர்மத்தையும் இதர நன்னெறிகளையும் போதிக்கும் வண்ணம் வசனங்களை எழுதிய சுப்புவையும், அத்தகைய உயர்ந்த முறையில் படமெடுத்த டைரக்டர் வாஸனையும் நாம் பாராட்டத்தான் வேண்டும்.

இந்தப் படத்தில் கதா நாயகன் மாணிக்கமாகத் தோன்றும் சிவாஜி கணேசன் பிரமாதமாக நடித்திருக்கிறார். ஆனால், அவரையும்விடப் பிரமாதமாக நடித்திருக்கிறார் சரவணன் வேஷம் தாங்கிய எஸ். வி. சுப்பய்யா. முதலில் முதலாளியிடம் இழைந்து குழைந்து நெளியும் சுப்பய்யா, முதலாளியின் யோக்கியதை தெரிந்ததும் வேங்கையாக மாறி 'இது மாணிக்கம் இல்லையா முதலாளி! இது சரவணன்' என்று கொதித்து எழும் கட்டத்தில் மயிர்க்கூச்செறிகிறோம். குண சித்திர நடிப்புக்குத் தமிழ் நாட்டில் பஞ்சமில்லை என்பதையும் உணர்ந்து கொள்கிறோம்.

ரங்கபுரம் மில் முதலாளி ரங்காராவின் தோற்றமே அவரை முதலாளியெனச் சொல்கிறது. நடிப்பு அதை வலியுறுத்துகிறது. இந்தப் படத்தில் அவர் முதலாளியாக வாழ்கிறார்.

இப்படத்திற்கு இரண்டு கதாநாயகிகள். அந்தப் பாத்திரங்களை ஏற்ற இருவரும் பல படங்களில் கதாநாயகிகளின் பாத்திரங்களை ஏற்று புகழ் பெற்றவர்கள். இந்தப் படத்திலும் புகழ் மங்காவண்ணமே நடித்திருக்கிறார்கள். ஆனால், ஒன்று சொல்லவேண்டும். இதில் ஜெயந்தியாகத் தோன்றும் வைஜயந்திமாலாவுக்கு நடிப்பு சந்தர்ப்பங்கள் அதிகம். சரோஜாதேவிக்கு அத்தனை சந்தர்ப்பங்கள் இல்லை. மற்றபடி இருவர் நடிப்பும் ஒரே சீர்.

கொட்டை முத்துவாக நடிக்கும் தங்கவேலும் பாப்பாவாகத் தோன்றும் வனஜாவும் சுமாராக நடித்திருக்கிறார்கள்.

காட்சி ஜோடனைகளைப்பற்றி எதுவும் சொல்லத் தேவையில்லை. ஜெமினி படம் என்றாலே அதில் காட்சி ஜோடனைகள் பிரமாதம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

பொதுவில் ஜெமினியின் இரும்புத் திரை தமிழ் நாட்டில் வெளிவந்த சிறந்த படங்களில் ஒன்று. தற்சமயம் நாடு சமாளிக்க முயன்றுகொண்டிருக்கும் முக்கிய பிரச்னையான முதலாளி, தொழிலாளி சிக்கலை அடிப்படையாகக் கொண்ட படம் இது. அந்தச் சிக்கலை அவிழ்க்க சுமுகமான வழியையும் இப்படம் காட்டுவதால் நாட்டுக்கு மிகவும் தேவையான, மக்கள் வரவேற்க வேண்டிய அவசியமான படமென்றும் இதைச் சொல்லலாம். ■

# நாடகமும் நாட்டியமும்

## இரு மைனர்கள்

சாந்தி ஆர்ட்ஸ் தியேட்டர் குழுவினர் நடித்த 'இரு மைனர்கள்' நாடகத்தில் கதை அம்சம் மிக மிகக் குறைவு; ஆனால், தமாஷ் எக்கச்சக்கம். பி. ஏ. ராஜன், 'லேடி டைபிஸ்ட்' ஜகதீசன் இருவரும் பிரதான பாகங்களில் தோன்றி, பல சொரூபங்கள் எடுத்து நகைப்பூட்டினர். ஓட்டம் ஓட்டமான நடிப்பு; அதற்குச் சரியாக உரையாடல்களில் ஓட்டம் இல்லை.

'நடராஜ முதலி'யாராக ரெக்ஸ் ஓ. ரோஸ் நல்ல நிதானத்துடன் பாகத்தை உணர்ந்து நடித்தது பாராட்டுக்குரியதே.

குமாரிகள் சாந்தியும், வசந்தியும் துடிதுடிப்பாக பேசினார்களேயொழிய, நடிப்பில் அந்த அளவுக்கு மெருகு ஏறவில்லை. அனுபவ ஆற்றலுடைய அவர்கள் பாத்திரத்தோடு பாத்திரமாக ஒன்றி நடிக்க முழு கவனம் செலுத்த வேண்டும். 'வீட்டுக்காரர்' நாராயணன் பாகம் சுமாராக இருந்தது.

ஜகதீசன், ராஜன் இருவருமே கூட்டாக கதை, வசனங்களை எழுதியிருக்கின்றனர். குறிப்பாக 'இரு மைனர்'களுக்கும் 'மேக்கப்' பரவாயில்லை.

நாடகத்தில் 'ராக் அண்ட் ரோல்' ஆட்டம் அதன் அபிமானிகளை ஒரே மூட்டாக சொக்க வைத்ததெனலாம். அத்தகைய டான்ஸை அறவே வெறுக்கும் சினிமாப் புகழ் சௌகார் ஜானகி அந்நாடகத்தைப் பார்க்க நேர்ந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

சென்னை சமூக, கலாசார அகடமியின் ஆதரவில் செயிண்ட் மேரீஸ் ஹாலில் ஜனவரி 17-ந் தேதி அந்நாடகம் நடைபெற்றது.

ஜப்பான் சென்று திரும்பிய சௌகார் ஜானகியை அன்றைய தினம் பாராட்டி கௌரவித்தது மேற்படி அகடமி. அப்பாராட்டு விழாவுக்கு நடிகை ராஜசுலோசனா தலைமை வகித்தார்.

## மனோரதம்

காலஞ்சென்ற ஸ்ரீ டி. கே. கோவிந்தன் உருவாக்கியதும், மிகப் பிரபலமானதுமான 'மனோரதம்' நாடகத்தை லாயிட்ஸ் பாங்கி பொழுது போக்குச் சங்கத்தினர் அண்ணாமலை மன்றத்தில் இம்மாதம் 15-ந் தேதி நடித்துக் காட்டினர்.

எஸ். ஜே. சுகவனம், எம். வி. தியாகராஜன், வி. எல். கிருஷ்ணன், டி. என். பதமநாபன், ஆகியோர் தம் தம் பாகங்களை திறம்பட செய்தார்களென்றே சொல்ல வேண்டும்.

டி. நடராஜன், என். சாம்பசிவ ராவ் நடிப்பு சுமார்.

'மனோரஞ்சித'மாகத் தோன்றிய ஆர். ராமநாதன் ரஞ்சகமாக நடித்தார். நாணிக் கோணியதோடு நில்லாமல் அவர் அடிக்கடி தலையை ஒரேயடியாகக் கீழே தொங்கப்போட்டது பொருத்தமாக இல்லை.

'ஜயந்தி'யாக குமாரி சரோஜா பட்டிக்காட்டுப் பாத்திரத்தாற்போல் நடித்தார். 'புஷ்பா' குமாரி சகுந்தலா, 'பட்டாபி' ஏ. ரங்கநாதன், டி. எம். ஜம்புலிங்கம், எஸ். பாபு, ஆர். வெங்கடநாராயணன் முதலியவர்கள் நாடகச் சிறப்புக்கு ஒத்துழைத்தனர். மாஸ்டர் பி.

ஜானகிராமனும் அழகாக பேசர் விற்றன்.

வி. வி. ஜெயராமனின் இன்னிசை நாடகத்துக்கே அலாதி களையூட்டியது. குமாரி டி. கே. ராதா அவருடன் இசைந்து பின்னணி கீதங்கள் பாடினர்.

அனுபவம் முதிர்ந்த ஸ்ரீ டி. எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார் டைரக்ஷன் பொறுப்பேற்றிருந்தார்.

## டாக்டர் கைராசி

வி. ஆர். கோபாலகிருஷ்ணன் எழுதியுள்ள 'டாக்டர் கைராசி' என்கிற நாடகத்தை மயிலாப்பூர் கஸ்தூரிபா சங்கத்தின் சார்பில் அச்சங்க சிறுவர்கள் சென்ற வாரம் ஒய். எம். ஐ. ஏ. மண்டபத்தில் நடித்தனர்.

கூடியிருந்தவர்கள் மனதை மிகவும் கவரும் வகையில் சம்பத் குமார், மாஸ்டர் பாஜி ஆகிய இருவரது நடிப்பும் அமைந்திருந்ததாம். 'பரிமளா'வாக வந்த ராமகிருஷ்ணன், அருணாசலம், 'ராஜாபாதர் முதலியார்' ஏகாம்பரம் ஆகிய மூவருக்கும் வேஷங்கள் நன்கு பொருந்தியிருந்தனவாம். நகைச் சுவையூட்டிய சீனுவும் சீராக நடித்தானும்.

தலைமை வகித்த ஸ்ரீ டி. எஸ். ராமஸ்வாமி அய்யரும், உரை நிகழ்த்திய டாக்டர் கிருஷ்ணனும் சிறுவர்களின் நடிப்புத் திறனை வெகுவாகப் புகழ்ந்தார்கள். நாடகத்தையொட்டி குமாரிகள் லக்ஷ்மி, ரத்னங்கி, கமலா, ராதா ஆகியோர் இன்னிசை விருந்துமளித்தனராம்.

## கௌதம புத்தர்

ஔவைத் தமிழ்ச் சங்கத்தின் நூலக உதவி நிதிக்காக சமீபத்தில் எழும்பூர் மியூசியம் தியேட்டரில் நடத்தப்பட்ட 'கௌதம புத்தர்' நாடகத்தில் பரணி நண்பர்கள் பங்கு கொண்டனர்.

'டாக்டர் வசந்தா', 'வாழ்வின் லட்சியம்' முதலிய நாடகங்களை எழுதியுள்ள ஸ்ரீ குலா இந்நாடகத்துக்கும் கதை, வசனங்களை அமைத்துள்ளார்.

சித்தார்த்தர் (புத்தர்) பாகம் ஏற்றிருந்த பரணி கிருஷ்ணமூர்த்தி, நாகர் சீனு, எஸ். எஸ். மணி, டி. கே. ராஜேஸ்வரி, ஆர். காந்திமதி முதலியவர்கள் சிறப்புற நடித்தார்களாம்.

இலக்கிய அறிவு வளர்ச்சியைப் பெருக்கும் நோக்கத்துடன் தமிழ் மொழிக்கு நல்ல தொண்டாற்றி வரும் ஔவைத் தமிழ்ச் சங்கம் ஏழாண்டுகளுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டதாகும். விமர்சகப் பேராசிரியர் ஸ்ரீ ரா ஸ்ரீ. தேசிகன் அதன் கௌரவத் தலைவராவர். 1500க்கு மேற்பட்ட புத்தகங்களைக்கொண்டுள்ளது சங்க நூல் நிலையம்.

—ஸஞ்சாரி.

---

## புலிகேசி

உதய ஜோதி நாடக மன்றத்தார் பொங்கலன்று 'புலிகேசி' என்னும் சரித்திர நாடகத்தை தி. நகர் கிருஷ்ண கான சபையில் இராம. அரங்கண்ணல் தலைமையில் சிறப்பாக நடித்தார்கள். இந்த நாடகத்தின் கதை, வசனத்தை மதுரை இராசநாதன் அமைத்துள்ளார்.

---

## திருத்தம்

சென்னை வித்வத் சபை சங்கீத விழாவில் பண்டித ரதன்ஜங்கர் நிகழ்த்திய ஹிந்துஸ்தானி சங்கீதக் கச்சேரியில் பரூர் ஸ்ரீ அனந்தராமன் பக்க வாத்தியமாகப் பிடில் வாசித்தார். ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் என்று வெளியானது தவறு.



# தாய்ப்பாசம்

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

நள்ளிரவில் கண் விழித்துக் கொண்டு குழந்தை பெரிதாக அழ ஆரம்பித்துவிட்டது. அயர்ந்து போய்த் தூங்கிக்கொண்டிருந்த மனைவை உசுப்பி எழுப்பினன் பாலு.

'மனு! மனு!' குழந்தையைக் கவனி. அழுகிறது பார்! இவ்வளவு நேரமும் படித்துவிட்டு கோபு இப்போதுதான் படுத்துக் கொண்டிருக்கிறன். விழித்துக் கொள்ளப் போகிறன்.'

மனுவுக்கு அரைத்தூக்கம். உடைகளை சரி செய்தபடி குழந்தையை மடியில் எடுத்துக்கொண்டாள். எரிச்சலோடு 'என்ன பண்ணச் சொல்கிறீர்களாம்? குழந்தை என்றால் அப்படித்தான் இருக்கும்' என்று விளக்கைப் போட்டாள்.

கோபு தூங்கவே ஆரம்பிக்கவில்லை, விழித்துக்கொள்வதற்கு. கண்ணை அழுத்தும் தூக்கத்தைவிடத் துயரம் அவன் நெஞ்சைப் பாறையாக அழுத்தியது. மன்னி ஏன் இப்படிப் பேசுகிறள்? ஏன் அவளுக்குத் திடீரென்று தன்னைக் கண்டால் பிடிக்காமல் போய்விட்டது? அன்புக்கும் அலுப்புதட்டிப் போய்விடுமோ?

அடுத்த அறையிலிருந்து அரைகுறையாக வெளிச்சம் உள்ளே விழுந்தது. ஜன்னலுக்கு அப்பால் அண்ணு எழுந்து நின்று அவனைக் கவனிப்பது தெரிந்தது. அவன் விழித்துக் கொள்ளவில்லையா என்று அவன் அக்கரையோடு பார்க்கிறன். அண்ணுவுக்கு மட்டும் பாசம் விடவில்லையோ? கண்ணில் ஈரம் கசியும்போல இருந்தது. புரண்டு படுத்துக்கொண்டான்.

'கோபு! எழுந்திரு. கோபு!'

அண்ணுதான் எழுப்புகிறன். எழுந்து உட்கார்ந்தான். 'ஏன் பால் சாப்பிடாமல் படுத்துக் கொண்டாய்? நெஞ்சு வறளப் படிக்கிறவன் ஒரு வாய் பால் சாப்பிடக்கூடாது? அவள் குழந்தைக்காகப் பால் எடுக்கும்போதுதான் தெரிந்தது. அவள் மறந்து போனாலும் நீ கேட்டு வாங்கி

சாப்பிட வேண்டாமா? இந்தா குடி!’

பால் நெஞ்சில் சுருட்டிக்கொண்டதுபோலத் தத்தளிப்பு. வெறுப்பு நினைவில் மிதந்தது. மன்னி அவன் படிக்கும்போதே தம்ளரில் பால் கொண்டு வந்து மூடிவைப்பது வழக்கம். இரண்டு நாட்களாக அது இல்லை. அண்ணாவும் அதைக் கவனிக்கவில்லை. தானாகக் கேட்கவேண்டும் என்று மன்னி எதிர்பார்த்தாளோ? இப்போது அண்ணாவே தம்ளரும் கையுமாக வந்து நிற்கிறான்.

ஏன் இந்த மாறுதல்? மன்னி எப்போதும் இப்படியா இருந்தாள்? அவன் தாய் இறந்து போனபோது அவனுக்கு ஆறு வயது. அவள் முகம்கூட சரியாக ஞாபகம் இல்லை. ஆனால் மன்னி அடிக்கடி சொல்வாள். ‘சாகும்போது அம்மா உன்னை என் கையைப் பிடித்துக் கொடுத்து விட்டுப் போனாள். ‘நீதான் இனி மேல் அவனுக்குத் தாய். பெறாவிட்டாலும் அவன்தான் உன் பிள்ளை. அவன் கண்ணைக் கசக்காமல் நீதான் பார்த்துக்கொள்ள வேணும் மீனா!’ என்று சொல்லிவிட்டுக் கண்ணை மூடினாள். ‘மன்னி அந்த வார்த்தைகளை ஓரிரு தடவைகள் சொன்னபோது அவன் விழிகளில் படர்ந்த பசுமையைப் பார்த்து அவளும் வேறு எங்கேயோ பார்ப்பது போல முகத்தைத் திருப்பிக் கொள்வாள். அவன் மனம் சங்கடப்படக்கூடாதே என்று அவளுக்கு.

அப்போது மன்னிக்குப் பதினாறு வயது இருக்கலாம். கலியாணமான மறு வருஷம். வாழ்க்கையின் இன்பதுன்பங்களின் நிழல் படியக்கூட ஆரம்பிக்கவில்லை. அவனைப்போலவே அவளுக்கும் அனுபவமில்லை. அதனால் தானோ என்னவோ அவனுக்கு அவளிடம் விவரிக்கமுடியாத பற்றுதல். அவளுடைய திருப்திக்காக எதுவும் செய்வான். அவள் பேச்சைத் தட்டமாட்டான். அவளுடைய அன்பில் அவன் மனம் அளவில்லாத ஆறுதல் அடையும். அண்ணாவிடம் சொல்லாமல் மறைத்ததைக்கூட அவளிடம் ஒப்புக்கொள்வான்.

அண்ணா சிலசமயம் அவனை அடித்ததுண்டு. அவள் அவனைக் கடிந்துகொண்டதுகூட இல்லை. சிலசமயம் அவன் பிடிவாதம் பிடித்து சாப்பிடாமல் இருந்திருக்கிறான். அவளும் சாப்பிடாமல் அவனுக்காகக் காத்துக் கொண்டிருப்பாள். கடைசியில் தணிந்துபோய் கலத்தில் உட்காரும்போது, அவனுடைய மனச்சாட்சியே முள்ளாக உறுத்தும். ‘என் முதுகில் இரண்டு வையேன் மன்னி! உன்னுடைய அன்பையும் பரிவையும் என்னால் தாங்கமுடியாதுபோல இருக்கிறதே!’ என்பான். அதற்கும் அவளிடமிருந்து வருவது புன்சிரிப்புதான். ‘நினைத்துப் பார் கோபு! அம்மா இருந்தால் உன்னை இன்று அடித்திருப்பாளா? அவளுக்கு இல்லாத உரிமை எனக்கு மட்டும் ஏது?’ கோபு தலைநிமிராமல் கண்ணீர் பெருக்குவான்.

அவ்வளவு அன்பும் ஆதரவுமாக இருந்தவள், மாறிவிட்டதாகத்தான் அவனுக்குப்பட்டது. இரண்டு வருஷங்களாகவே அவள் முன்போல இல்லை. அவளுடைய பத்து வருஷ இல்வாழ்க்கையில் அந்த வீட்டில் ஒரு குழந்தை சிரித்து விளையாடியதில்லை. அவர்கள் இருவருக்கும் அவன்தான் குழந்தை. அவர்களுடைய அன்பும் பரிவும் கண்டிப்பும்



கோபமும், எல்லாம் அவன் ஒருவனுக்குத்தான் சொந்தம். அப்படியே இருந்திருக்கும். அப்போதுதான் மன்னி தாய்மை அடைந்தாள்.

பத்து வருஷங்களாக இல்லாத புது அநுபவம். பிறக்கப்போகும் குழந்தையைப் பற்றிய கற்பனைகள். அண்ணாவுக்கு ஒருபுறம் தலைமயிர் நரைக்கக்கூட ஆரம்பித்துவிட்டது. தகப்பனாகப் போகும் அவன் முகத்தில் சொல்லமுடியாத சங்கோஜம். இளமையின் எல்லைக்கோட்டை நெருங்கிவிட்ட மன்னிக்குத் திடீரென்று பூத்துக் காய்த்துக் கனியத் தொடங்கிவிட்ட இல்வாழ்க்கை, அதிர்ச்சியைத்தான் கொடுத்திருக்கும். ஆனால், எதிர்பாராமல் வந்தாலும் அதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கத்தான் செய்தது. அவர்களுடைய வாழ்க்கையில் அந்த நிறைவு இல்லாவிட்டாலும் முழுமையான திருப்தி இருக்கத்தான் செய்தது. கவர்ச்சியை மீறியது அவர்களுடைய தொடர்பு. இருந்தாலும் அந்த அனுபவம், அந்தத் தொடர்பை வலுப்படுத்தும் வகையில் வந்து சேர்ந்தது என்னவோ உண்மை.

அவனுக்கும் அதில் மகிழ்ச்சிதான். ஆனால், அன்றையிலிருந்து மன்னி அவனிடம் நடந்துகொள்வதில், ஒரு மாறுதல் ஏற்பட்டுவிட்டதுபோன்ற எண்ணம் அவன் மனதில் விழ ஆரம்பித்துவிட்டது. எவ்வளவோ சமாதானம் செய்துகொண்டாலும் அவனால் அதை அகற்ற முடியவில்லை. அவனிடம் அவள் காட்டிவந்த அக்கறை, அவனுடைய தேவைகளைக் கவனிப்பதில் காட்டிய சிரத்தை, திடீரென்று மங்கிவிட்டதுபோலத்தான் தோன்றியது. சில சமயம் அவன் மேல் எரிந்து விழக்கூட ஆரம்பித்தாள். அது தாய்மையினால் ஏற்பட்ட தள்ளாமை, பலவீனத்தினால் உண்டாகும் பொறுமையின்மை என்றெல்லாம் சொல்லி



அவன் தன்னையே தேற்றிக்கொள்வான். ஆனாலும் அவன் மனம் அமைதி அடையவில்லை. போற்றி வந்த பொருள் அவனையும் மீறி, நழுவிக்கொண்டே போவதைப்போல அவன் ஏங்கினான்.

ராமு பிறந்துவிட்டான். வீட்டில் புதுமையான மகிழ்ச்சியும் பிறந்துவிட்டது. அமைதியாக இருந்த வீட்டில் கலகலப்பும் சிரிப்பொலியும் குடியேறத் தொடங்கிவிட்டன. குழந்தையைக் கவனிப்பதற்கு மன்னிக்கு ஒருநாள் முழுவதும் கிடைத்தாலும் போதாது. அண்ணாவுக்கும் இது ஒரு புது கவர்ச்சி. பின்னால் வளைய வளைய வந்துகொண்டிருப்பான். குழந்தையைத் தூக்கத் தெரியாமல் திண்டாடுவான். அவன் கொஞ்சம் அழுக்குப் பண்ணிவிட்டால் சீறிவிழும் அண்ணாவா அவன்?

கோபு ஒதுங்கிக்கொண்டான். அந்த வீட்டில் அவன் அனுபவித்து வந்த உரிமை இனிமேல் அவனுக்கு இல்லை. அவனுடைய முக்கியத்துவம் சட்டென்று பின்னுக்குப் போய்விட்டது போலத்தான் தோன்றியது. அவனால் அந்த ஏக்கத்தை வெளியில் சொல்லிக்கொள்ள முடியவில்லை. அதை என்னவென்று சொல்வது? விளையாட்டு மனப்பான்மை மறைந்து பொறுப்புணர்ச்சி தோன்றாத பருவம். மனதில் முதிர்ச்சி இன்னும் ஏறவில்லை, பக்குவமடையாத கனியைப் போல, இனம் தெரியாத அதன் சுவையைப்போல, அந்த உள்ளத்திலே கொந்தளிக்கும் எத்தனையோவித உணர்ச்சிகள். விவரிக்கமுடியாத தடுமாற்றம். திடீரென்று அவனுக்கும், அந்த குடும்பத்துக்கும், நடுவே ஒரு திரை விழுந்து அவனைத் தனியாக்கிவிட்டதைப் போன்ற ஒரு தவிப்பு.

'நான் ஹாஸ்டலில் இருந்து கொள்ளலாமென்று பார்க்கிறேன் அண்ணா!' என்று சொன்னான் கோபு. பாலு அதை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

'என்னடா திடீரென்று? என்ன நடந்தது?'

'ஒன்றுமில்லை அண்ணா! தினம் இருபது மைல் ரயிலில் போய்விட்டு வந்து படிக்க முடியவில்லை. பரீட்சைக்கு இரண்டு மாதங்கள்கூட இல்லை. என் சிநேகிதன் ஒருவன் அறையில் இடம் கொடுக்கிறேன் என்கிறான். சாப்பாட்டுக்கு மாத்திரம் கொடுத்துவிட்டால் போதும்.'

'உன் மன்னியையும் கேட்டுச் சொல்கிறேன்' என்று பாலு அவனை அனுப்பிவிட்டான். ஹாஸ்டலில் அவனைத் தனியாகச் சேர்த்தால் அவனுக்காக மாதம் ஐம்பது ரூபாய் ஒதுக்கவேண்டும். மூன்று மாதத்து உபயோகத்துக்காக வாங்கியிருந்த ரயில் பாஸ் வீண், ஏற்கெனவே வீட்டுச் செலவு பிடிபடாமல் போய்க் கொண்டிருந்தது.

'அந்த சாப்பாடு அவனுக்கு ஒத்துக்கொள்ளுமா? பால், தயிர் குறைந்தால், எண்ணெய் முறை தப்பினால், கோபுவுக்கு உடம்பு சூடு பிடித்துக்கொள்ளுமே? பரீட்சையும் அதுவுமாகக் கண்ணை விழித்துக்கொண்டு படித்து உடம்புக்கு வந்துவிட்டால் என்ன செய்கிறது?' என்று கவலைப்பட்டாள் மீனா.

'அவன் இன்னும் குழந்தையா என்ன? உடம்பைக் கவனித்துக் கொள்ளமாட்டானா?'



'உங்களுக்குத் தெரியாது!' அவள் குரல் கம்மியது.

'நீ ஒரு பைத்தியம் மீனா!'

'சரி! அவன் படிப்புத்தான் முக்கியம். சேர்த்துவிடுங்கள். எப்படியோ பல்லைக் கடித்துக் கொண்டு தள்ளிவிடலாம். அப்புறம் பார்த்துக்கொள்கிறது!'

அவன் ஹாஸ்டலுக்குப் போகக் கூடாது என்று, மன்னி நிச்சயம் தடுப்பாள் என்று கோபு எதிர்பார்த்தான். அவள் சம்மதித்துவிட்டது அவனுக்கு ஏமாற்றம் தான். அத்தனை நாட்களுக்குப் பிறகு அவன் வேண்டாதவனாகிவிட்டான். அன்புக்கும் உரிமைக்கும் பாத்தியதை கொண்டாட குழந்தை பிறந்துவிட்ட பிறகு, அவனை லட்சியம் செய்ய யாருமில்லை. போகட்டும். எப்படியோ அவர்கள் நிம்மதியாக இருக்கட்டும். அவர்கள் மனம்போல இருப்பதற்கு அவன் இடைஞ்சலாக அங்கே இருக்க வேண்டாம்.

ஹாஸ்டல் வாசம் புதுமையாகத்தான் இருந்தது. படிப்பதற்கு எந்த இடையூறும் இல்லை. கூடக் கலந்து படிப்பதற்கும் வேண்டிய நண்பர்கள். அவனிடம் இல்லாத புத்தகங்களை இரவல் வாங்கிக்கொள்ளவும் சௌகரியமாக இருந்தது. நடுநடுவில் வீட்டு ஞாபகம் வரும். சாப்பிடும்போது மன்னியின் சமையல் ஞாபகத்துக்கு வரும். விடியற்காலையில் எழுந்திருக்கும்போதுகூட அண்ணா அலாரத்தை அணைத்துவிட்டு அவனை எழுப்புவதுபோல ஒரு பிரமை. மனதை எப்படியோ உறுதிப் படுத்திக்கொள்வான்.

பரீட்சை மும்முரம். வீட்டுக்குக் கடிதம்கூட எழுதவில்லை. பரீட்சை முடிந்துவிட்டது. எல்லோரும் விடுமுறைக்குக் கிளம்பிவிட்டார்கள். அவன் இருந்த அறையில் கூட இருந்த நண்பன், பங்களூரிலிருந்து வந்தவன், விடுமுறைக்கு அவனோடு வரச் சொல்லி வருந்தி வருந்திக் கூப்பிட்டான். வீட்டுக்குப் போய் அண்ணாவிடம் சொல்லிவிட்டுப் போக வேண்டியதுதான். மேலே ஒரு வேலை தேடிக்கொள்ள வேண்டியதுதான். அதுவரையில் கொஞ்சம் ஒதுங்கி இருப்பதே நல்லது.

குழந்தை ராமுவுக்கு ஒரு கண் சிமிட்டும் விளையாட்டுப் பொம்மை வாங்கிக்கொண்டான். பெட்டி, படுக்கையோடு வீட்டுக்குப் போய்ச் சேரும்போது இரவு மணி ஏழு.

வாசல் மூளியாகக் கிடந்தது. முன்பக்கம் விளக்கு வைக்கவில்லை. வீட்டில் யாருமே இல்லாததுபோன்ற நிசப்தம். நடையின் கால் செருப்பைக் கழற்றிய ஒலி எதிரொலித்தது.

'யாரது?'

அண்ணா கேட்கிறான். வராந்தாவில் சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டிருக்கிறான். ஒரு இருமல். அண்ணாவுக்குக் குரல் ஏன் இப்படிக் கம்மிப் போய்விட்டது?

'நான்தான் அண்ணா!'

'வா!'

பெட்டி, படுக்கையை இறக்கிக் கூலி கொடுத்து அனுப்பிவிட்டுக் கேட்டான்.

'மன்னி எங்கே?'

'உள்ளே இருக்கிறாள். இங்கே வா!'

'என்ன அண்ணா!'

'போய் தைரியம் சொல்லு. பாவம்…ஒடிந்…துபோய்க்…கிடக்…கிறாள்!'

'என்னது அண்ணா?'

'ராமு… குழந்தை… தவறிப் போய் பத்து நாளாகிறது… எங்கே உனக்கு எழுதினால்… பரீட்சையும் அதுவுமாய்…கலங்கிப்போய்…நீ படிக்க மாட்டாயோ என்று…எழுத வேண்டாமென்று… தடுத்து… விட்டாள்… பத்து நாளாய்…எழுந்திருக்கவே இல்லை!' அண்ணா மேல் துண்டை வாயில் அடைத்துக்கொண்டு விசும்ப ஆரம்பித்துவிட்டான். அவன் அழு குரல் கேட்டால் மன்னியும் அழத் தொடங்கி விடுவாளோ என்று பயம்.

ஓட்டமும் நடையுமாகச் சமையலறையில் நுழைந்தான் கோபு. மன்னி வாசற் படிக்கட்டில் தலையை வைத்தபடி குப்புற விழுந்து கிடந்தாள். அவனைக் கண்டதும் நிமிர்ந்து பார்த்தாள். அழுது முகம் வீங்கிக் கிடந்தது. கண்களில் ரத்தச் சிவப்பு ஏறி இருந்தது.

'மன்னி! மன்னி! அழாதே மன்னி!' அவள் குலுங்கக் குலுங்க அழ ஆரம்பித்துவிட்டாள். 'கோபு! கோபு! நீ… நீயும்…என்னைவிட்டுப்… போய் விட…மாட்டாயே!'

'அம்மா!' என்று கதறியபடி அவள் காலடியில் உட்கார்ந்து கொண்டான் கோபு. அவன் மனம் ஆறிவிட்டது.

## வங்கத்திலே பொங்கல் !


வங்க நாட்டில் கல்கத்தாவிலிருந்து 15 மைல் தூரத்தில் உள்ள பாரக்பூர் ஹிந்துஸ்தான் விமான தொழிலாளர்கள் பொங்கல் விழாவை கொண்டாடினர்.

(பொங்கல்) அன்று காலை 4–30 மணிக்குப் பாக்டரி ஸூபரிண்டெண்ட் ஸ்ரீ பி. ஜி. விஸ்வநாதன் அவர்கள் கதிரவன் ஒளியாம் மங்களதீபம் ஏற்றி, விழாவைத் துவக்கி வைத்தார். மாலை 4–30 மணிக்கு மறுபடியும் ஸ்ரீ பி. ஜி. விஸ்வநாதன் தலைமையில் ஆரம்பமாகியது.



ஸ்ரீ பீதிவிச்வாஸ் நடனமும் ஸ்ரீ அனந்தராஜ் அவர்கள் மார்வாரி நடனமும் நடந்தன. இளைஞர் ஜாடுகர் திலீப்குமார் 'மாஜிக் ஷோ'வில் துணிகரமாக பல வேலைகளைச் செய்து, சபையோரை மகிழச் செய்தார். பின்னர் ஸ்ரீமதி நாராயணய்யர் தக்க பக்க வாத்யங்களுடன் கம்பீரமாக கர்நாடக சங்கீதம் பாடினார். கண்ணன் பார்ட்டியார் தாங்களே தயாரித்து அரங்கேற்றம் செய்த 'தியாகசுடர்' என்ற நாடகத்தை விருப்புடன் நடித்துக் காட்டினர். காரியதரிசி, மீனாக்ஷி சுந்தரம் வந்தனோபசாரம் கூறினர்.

*




6

ராமன் அண்டு ராமனுக்குள் ராகவனும், கிட்டனும் பிரவேசித்தார்கள்.

அழையாத வீட்டிற்குள் நுழையும் விருந்தாளியின் மனக்கஷ்டத்துடனே, பயந்துகொண்டே, உள்ளே புகுந்தான் ராகவன்.

கிட்டனோ சொந்த வீட்டிற்குள்ளே உரிமையுடன் புகும் எஜமானைப்போல அனாயாசமாகப் போனான்.

பணத்தை முதலீடாகப் போட்டுவிட்டு முதலாளி ஸ்தானத்தில் இருந்தவன் சிவராமன்; அத்துறையில் உள்ள வேலையின் நெளிவு, அழிவுகள் அனைத்தும் தெரிந்து தன் சாதுர்யத்தை முதலீடு செய்தவன் அடுத்த முதலாளி பலராமன்.

அவர்கள் போன சமயம் சிவராமனே, வழக்கம்போல் தன் ஆசனத்தில் அமர்ந்திருந்தான்.

'என்னடா தடிராமா! ஆள் அடையாளமே தெரியாமல் ஊதிக்கிடக்கிறாயே? பண முதலீட்டில் கொள்ளை லாபமோ!' என்று முகமன் கூறிக்கொண்டே திடுதிடுவென்று போய் அவன் எதிரில் உட்கார்ந்தான் கிட்டன்.

ராகவனையும் பக்கத்தில் உட்காரச் சொன்னான்.

தலைநிமிர்ந்து பார்த்த சிவராமனுக்கு ஒரே ஆச்சர்யம்!

'அட, கிட்டனடா! அசல் எமனேதாண்டா நீ! எமப்பயல்! இப்போதுதான் உன்னைப்பற்றி என்னவோ நினைத்துக்கொண்டேன். நீ என்னடா என்றால்— 'கூர்ச்சம்' மாதிரி வந்து நிற்கிறாய்!' என்று சொல்லி அவனும் வரவேற்றான்.

போடா முட்டாள்! பெரிய புஸ்தகக் கடையின் முதலாளி என்கிறாய்; ஆனால், அசட்டுப் பிசட்டென்று பேத்துகிறாயே? எமன் நீ நினைத்தவுடன் வந்து நிற்பானா? அப்படியே எமன் எதிர்வந்து நின்றாலும், உனக்குத்தான் பிடிக்குமா? உயிருக்குப் பயந்து எமனை விரட்டியடிக்கவல்லவா பார்ப்பாய்! எனக்கும் அதே கதிதானா?' என்று சரமாரியாகப் பொழிந்தான் கிட்டன்.

திக்குமுக்காடித் திணறிய சிவராமன், அசடு வழிய, 'சேச்சே! நான் அப்படிச் சொல்லவில்லையப்பனே— இருந்தாலும்— என்றைக்குமே நீ பெரிய வாயாடி. உன்னோடு பேசி ஜெயி

க்க எவராலுமே ஆகாது' என்று தோல்வியை ஒப்புக்கொண்டு விட்டான்.

'கிடக்கிறது விடு; அவன் எங்கே– அந்த சாப்பாட்டு ராமன்? உள்ளே புத்தகத்தைப் பிடித்துள்ள கரையான்களைத் துடைத்து சுத்தம் செய்து வைத்துக்கொண்டிருக்கிறானோ?' என்று தன் தோரணையை இம்மியும் விட்டுக்கொடுக்காமல் பேசினான் கிட்டன்.

'இதோ கூப்பிடுகிறேன்' என்று மேஜையிலிருந்த மணியைத் தட்டினான் சிவராமன்.

உள்பக்கமிருந்து பையன் ஒருவன் வந்து வணங்கி நின்றான்.

'பலராமனை வரச்சொல்' என்று சொன்னதும், அவன் மறுபடி உள்ளே போனான்.

'என்னடாது, வாசற் பக்கம் ஒரே ரகளையாகக் கேட்கிறதே என்று நானே பார்க்கத்தான் வந்துகொண்டேயிருந்தேன்– இந்தக் கோமாளி வந்துவிட்டானா! கோமாளி வந்தால் கும்மாளத்துக்குக் கேட்பானேன்?' என்று சிரித்துக்கொண்டே பலராமனும் வந்துகொண்டிருந்தான்.

'பார்த்தாயாடா? உனக்கும், அவனுக்கும் உள்ள வித்தியாசத்தை இப்போது நீயே தெரிந்துகொண்டிருப்பாய்! அவன் எத்தனை அழகாய் பேசுகிறான் என்று கேட்டாயா? நீ அத்தனையும் பண மூட்டை; அவன் அப்படியே பொய் மூட்டை!' என்று சிவராமனைப் பார்த்துக் கிட்டன் சொன்னதும், எல்லோருமாகச் சேர்ந்துகொண்டு ஒரே குரலில் சிரித்தார்கள்.

'எங்கிருந்து திடீரென்று முளைத்தாய்?' என்று விசாரித்தான் பலராமன்.

'அரோரா பேப்பர் மில்ஸ் இருக்கிறதே? அது 'அரோகரா' ஆகிவிடவில்லை–ரொம்ப ஜோராகத்தான் நடந்து வருகிறது— அதற்கு இந்தப் பக்கத்து 'ஸோல் ஏஜெண்டு' பொறுப்பை என் கழுத்தில் கட்டித் தொலைத்து விட்டார்கள்!' என்று ஆரம்பித்தான் கிட்டன்.

'உன்னை ஸோல் ஏஜெண்டாகப் போட்டு விட்டார்களல்லவா? ரொம்ப சரி; இனிமேல், சந்தேகமே இல்லாமல், 'அரோரா– அரோகராதான்!' என்று இடைவெட்டுப் போட்டான் பலராமன்.

'இருக்கட்டுமே? உங்களுக்கு என்ன கவலை? முதலும், தொழிலும் இணைபிரியாமல் இருக்கிறீர்கள். எப்படியும் பிழைத்துக்கொள்வீர்கள். அதனால்தான் முதலில் நானும் உங்களிடம் வந்து கேட்கவேயில்லை. ஆனால் 'சேஷு அண்டு சேஷு' கம்பெனி விஷயம் உங்களது மாதிரியில்லை பாருங்கள்? அவர்கள் உங்களுக்குப் போட்டியாகத் தங்கள் கம்பெனியை ஆரம்பித்திருந்தாலும், இந்தத் துறைக்குப் புதிது பாருங்கள்? அதற்காகவே முதலில் 'சேஷு அண்டு சேஷு'விடம் நான் போனது. அதில் அவர்களுக்கும் ஏதோ என்னாலான உதவி; 'அரோரா கம்பெனிக்கும் மொத்த அளவுக்கு நீடித்த ஒப்பந்தம். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்! இல்லையா? நான் செய்ததுபற்றி உங்கள் ஏகோபித்த அபிப்பிராயமும் சரிதானே?'

'நிஜமாகவாடா, கிட்டா!' என்று கேட்டனர் ராமன் அண்டு ராமன்; அவர்கள் முகம் விழுந்து விட்டது.

'இந்த அற்பத்துக்கு நீங்கள் ஏண்டா கவலைப்பட்டுச் சாகிறீர்கள்? பணத்துக்கே பஞ்சமில்லை உங்களுக்கு– கேவலம்– 'பேப்பருக்கா பஞ்சம் வந்துவிடப்போகிறது?' என்று அடுத்த வீச்சையும் எறிந்தான் கிட்டன்.

'என்னடா கிட்டா? நாங்கள் உன்னிடம் என்னவோ கேலிக்காக ஏதாவது பேசினால்–நீ உன் கைவரிசையைக் காட்ட முனைந்து விடுகிறாயே? எங்களைவிட உனக்கு நேற்று வந்த 'சேஷு அண்டு சேஷு' உயர்ந்து விட்டான்களாக்கும்? நாங்கள் உன்னிடம் அதிகச் சலுகையுடன் நீடித்த 'ஆர்டர்' கொடுக்க மாட்டோமா?' என்று தவித்தான் சிவராமன்.

'அவசியம் வேண்டுமென்றால் வாங்கிக்கொண்டு தொலையுங்களேன்டா! அதற்காக இப்படித் தவிப்பானேன்?' என்று பளிச்சென்று சொல்லி விஷயத்தை முடித்துவிட்டான் கிட்டன்.

அப்புறம்தான் 'ராமன் அண்டு ராமனுக்கு முகம் மலர்ந்து விளங்கியது.

சற்று தள்ளி அப்பால் அமர்ந்திருந்த ராகவனிடம் அவர்கள் கண்ணோட்டம் பாய்ந்தது– 'ஓ! நீங்களா, மிஸ்டர் ராகவன்! நாங்கள் கவனிக்கவேயில்லை–'

'நீங்கள் எதற்காக ராகவனைக் கவனிக்க வேண்டும்? நீங்கள் தான் ராமனும், ராமனும்! அவனோ ராகவன்! ராகவனும், ராமனும் ஒரே ஆசாமிதானே? ராமனுக்கு ராகவனைப் பிடிக்கவில்லை என்றால், இவனைத் தாங்குவதற்கு 'சேஷன் காத்துக்கொண்டு நிற்கிறார்!' என்று கிட்டாதான் இடைமறித்துப் பேசினான்.

'அட? உனக்கு ராகவனையும் தெரியுமாடா கிட்டா? இந்த விஷயம் நிஜமாகவே எங்களுக்குத் தெரியாதே? அவர்கூட உன் பெயரை எங்களிடம் பிரஸ்தாபித்ததே இல்லையே?' என்று அங்கலாய்த்துக் கொண்டனர் ராமனும், ராமனும்.

'என்னை அவர் மறந்து விட்டார்; அவரை நீங்கள் மறந்து விட்டீர்கள்?' என்று சிரித்தான் கிட்டன்.

'மிஸ்டர் ராகவன்! எங்களை மன்னிக்க வேண்டும்! நீங்கள் ஸ்ரீமான் கிட்டனுக்கு வேண்டியவர் என்பதை இப்போதுதான் தெரிந்துகொண்டோம்.'

'ரொம்ப சரி, தெரிந்துகொண்டாகி விட்டது; இனி நீங்கள் செய்யப்போவது?' என்று கேட்டான் கிட்டன்.

'உன் விருப்பப்படி செய்கிறோம்; என்ன வேண்டும்?'

'என் இஷ்டம் என்று இதில் ஒன்றுமில்லை. ராகவனின் விருப்பத்தை நீங்கள் ஏற்க மறுத்து விட்டதாக இப்போதுதான் அவனே என்னிடம் சொன்னான். அவன் எழுதி வைத்துள்ள கதை கட்டுரைகள் எதுவுமே உங்களுக்குப் பிடிக்கவில்லையாமே? நான் கூட இரண்டொன்றைப் படித்துப் பார்த்தேன்; நன்றாகத்தான் இருக்கின்றன. நீங்கள் சமீபத்தில் ஒரு புத்தகம் வெளியிட்டீர்களே– அதன் பெயர் என்ன?–மறந்து விட்டேனே?– வந்து...' என்று அந்தப் புத்தகத்தைப் பற்றி யோசிப்பவனைப்போலிருந்தான் கிட்டன்.

'அசத்து' எழுதிய 'குப்பையின் காதல்' என்ற புத்தகத்தைப் பற்றி சொல்லுகிறாயோ?' என்று எடுத்துக்கொடுத்தான் பலராமன்.

கிட்டன் சட்டென்று– 'ஆமாம் ஆமாம்! அதேதான்! அந்த அபத்

தக் கதையைவிட இந்த 'அசத்து' எழுதியிருக்கும் அபத்தம் எத்தனையோ உயர்தரமானதுதான்!' என்று சொன்னதும் ராகவன் உள்பட எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

'ஏண்டா கிட்டா? உனக்கும் கதை–கிதை எல்லாம் படித்துப் பார்க்கவும் நேரமிருக்கிறதாடா?' என்று சிவராமன் கிண்டல் பேசினான்.


'பின்னே? இரு தடிராமன்கள் ஒன்றுகூடிப் புஸ்தகம் போடுகிறான்கள்; ஒரு அப்பாவி ராகவன் பிழைக்க வழி தெரியாமல் எழுதி வைத்துக்கொண்டு திண்டாடி மண்டை கலங்குகிறான்—நான் அதையெல்லாம் படிக்காவிட்டால் சும்மா விட்டுத் தொலைப்பான்களா? நிஜமாகவே படிக்காவிட்டாலும்கூட—படித்துப் பார்த்தேன்; இதைவிட உயர்தரமான அபத்தம் வேறு இருக்கவே முடியாது' என்று சொல்லித் தொலைத்தால்தான் நானும் பிழைக்க முடியும்? கதை எழுதும் ஆசாமிகளும், புத்தகம் போடும் பேர்வழிகளும்– எப்போதுமே பித்தலாட்டம் செய்பவர்கள்தானே? அவர்கள் சேர்க்கை எனக்கும் இருந்தால், நானும் பொய்யனாக இருந்தால் தானே தப்பிப் பிழைப்பேன்?'



மீண்டும் சிரிப்பொலி கிளம்பியது.

'நல்லது, மிஸ்டர் ராகவன்! உங்கள் கையெழுத்துப் பிரதிகளைக் கொண்டு வந்திருக்கிறீர்களா? எங்களிடம் கொடுத்துவிட்டுப் போங்கள்' என்று கேட்டான் பலராமன்.





ராகவன் கொண்டுவந்தவற்றை அவனிடம் கொடுத்தான்.

'ஏண்டா, சாப்பாட்டு ராமா! 'கொடுத்துவிட்டுப் போ' என்று வாங்கி வைத்துக் கொண்டு வெறுங் கையுடன் அவனை அனுப்புவது? எதிர் மரியாதை என்ன? உனக்குச் சாப்பாட்டுக்குக் கவலையில்லை– ஆனால் இவன் மண்ணையா தின்பான்?' என்றான் கிட்டன்.

'ராயல்டியா அல்லது காபிரைட்டா? எது உங்களுக்குச் சம்மதம்'? என்று ராகவனைப் பார்த்துக் கேட்டான் சிவராமன்.

ராகவன் பதில் சொல்ல நினைப்பதற்குள் கிட்டன்தான் மீண்டும் குறுக்கிட்டான். 'அட ராமா, ராகவா! அந்த எழவைப் பற்றியெல்லாம் அப்புறம் பேசி முடித்துக் கொள்ளுங்களேன்? இப்போது அட்வான்ஸாக எதையாவது கொடுத்துத் தொலையேன்! ராயல்டியும் வேண்டாம், காபிரைட்டும் வேண்டாம்–இப்போது இவனுக்கு உடனே வேண்டியது பணம், பணம், பணம்! அதை முதலில் கொடுத்துத் தொலை!'

கிட்டனின் பேச்சை வெகுவாக ரசித்துக்கொண்டே சிவராமன் மேஜை டிராயரைத் திறந்தான். அதிலிருந்து பத்து ரூபாய் நோட்டுகளாகச் சிலவற்றை எண்ணியெடுத்து 'இற்

தாருங்கள், நூறு ரூபாய்! வைத்துக்கொள்ளுங்கள்; இப்போதைக்குப் போதுமல்லவா?' என்று கேட்டான்.

'ரொம்ப ரொம்ப அதிகம்! அவன் ஆயுள் பூராவுக்குமே இந்தத் தொகை போதுமே!' என்று கிட்டன்தான் அப்போதும் பதில் சொன்னான்.

பணத்தைப் பெற்றுக்கொள்ளும்போது ராகவனின் கைகள் நடுங்கின. நடப்பதை நம்பவே முடியாத ஒரு தோற்றம் அவன் முகத்திலே காணப்பட்டது.

'ஏண்டா பழி! எனக்குக் கமிஷன் என்னடா கொடுக்கப்போகிறாய்?' என்று ராகவனைக் கேட்டான் கிட்டான்.

ராகவனுக்குப் பேச்சே எழும்பவில்லை. உணர்ச்சி மிகுதியால் அவன் உதடுகள் துடித்தன.

'சரி, சரி! அழ ஆரம்பித்துவிடாதே! பணத்தைக் கொண்டுபோய் உன் பெண்டாட்டியிடம் கொடுக்கும்வரையில் ஜாக்கிரதையாக இரு; அந்தக் குறுக்கெழுத்துப் போட்டிக்காரன் உன்னிடம் பணம் துள்ளுவதைக் கண்டுவிட்டானோ— அதைப் பிடுங்கிக்கொள்ளும் வரையில் விடாமல் துரத்துவான்! போ, போ! அப்புறம் வந்து பார்க்கிறேன்' என்று வழி அனுப்பிவிட்டான் கிட்டன்.

## 7

வீட்டுக்குத்தான் திரும்பி நடந்துகொண்டிருந்தான் ராகவன்.

ஏதோ—ஒன்றுமே புரியாத கனவு லோகத்திலே சஞ்சரிப்பவனைப்போலே போய்க்கொண்டிருந்தான்.

அன்று அவன் அடைந்த அனுபவம் முற்றிலும் புதுமையானது; அதற்குமுன் அவன் சற்றும் உணராதது; 'இப்படியும் நடக்கக்கூடும்' என்று அவன் கனவு கூடக் கண்டதில்லை.



அன்றுவரை முழுசாக முப்பது ரூபாய்களை அவன் சேர்ந்தாற்போல் கண்டதில்லை. இப்போதோ நூறுரூபாய்கள் அவன் பைக்குள்ளே பூத்துக் குலுங்குகின்றன.

ஆனால்—அது அவனே சம்பாதித்ததில்லை.

மற்றொருவன் தயவிலே அவன் பெற்ற பணம்!

அப்படி நினைத்தபோது ராகவனின் உள்ளமும், உடலும் அவமானத்தால் குன்றி விட்டன.

தானே சம்பாதிக்க அவனுக்குத் துப்புக் கிடையாதா?

கிட்டனிடம் அப்படி என்ன அபூர்வ வித்தை மண்டிக் கிடக்கிறது? அவன் பேச்சிலே பிறர் எதைக் கண்டு அப்படி மயங்குகிறார்கள்? தன் காரியத்தை அவன் எவ்விதம் அவ்வளவு எளிதில் சாதித்துக்கொள்ளுகிறான்?

கிட்டனோடு கூடவே போய்ப் பார்த்து அவன் நாலு பேர்களிடம் பழகிய தோரணையைக் கவனித்தும்கூட ராகவனுக்கு அந்தப் போக்குப் பிடிபடவில்லை; புரியவுமில்லை.

அவன் என்ன பேசினான்? என்ன செய்தான்?

யோசித்துப் பார்த்தால் உருப்படியாக ஒன்றுமே இல்லை.

அந்தமாதிரி பேசவும், பழகவும் ராகவனால் முடியுமா?

முடியவே முடியாது என்றுதான் தோன்றியது.

பின்? ராகவனால் என்னதான் முயன்றும், சாதிக்க முடியாததைக் கிட்டன் ஒரே கணத்தில் அனாயாசமாக சாதித்து விட்டானே? அது எப்படி?

அதுதான் போகட்டும்; இப்போது கிட்டனுடைய சாதுர்யத்தால் ராகவனுக்குப் பணம் கிடைத்து விட்டது. இந்தத் தொகை பூராவும் செலவாகி விட்ட பின்னர்—? மேற்கொண்டு பணம் வேண்டியிருக்குமே? அப்போது மறுபடியும் கிட்டனைத் தேடிக்கொண்டு போவதா? கிட்டனுக்காக ராகவனை அப்போது ஆதரித்த 'ராமன் அண்டு ராமன்' தொடர்ந்து அப்படியே செய்து வருவார்களென்பது என்ன நிச்சயம்?...

இப்படியெல்லாம் யோசித்துக் கொண்டே வரும்போது, ராகவனுக்கு மீண்டும் மனம் குழம்பி விட்டது.

சுயமுயற்சியில் சம்பாதித்ததா இப்போதுள்ள இந்த நூறு ரூபாய்?

இல்லை— கிட்டனின் தயவுக்காக 'ராமன் அண்டு ராமன்' ராகவனிடம் தூக்கி எறிந்த பிச்சைக் காசு! ஆமாம்; பிச்சைக் காசுதான்!

நினைக்க—நினைக்க— ராகவனுக்குச் சொல்ல முடியாத வெறுப்பே ஓங்கி வளர்ந்தது. கிட்டனிடமும் வெறுப்பு; ராமன் அண்டு ராமனிடமும் வெறுப்பு! தன்னிடமே தீராத வெறுப்பு!

நேரிய முறையில் சம்பாதிக்கவோ அல்லது மற்றவர்களைப் போல் சூதாடவோ அவனுக்குத் தகுதியில்லையா?

எதற்காக இந்த மானங்கெட்ட பிழைப்பு?

நோட்டுக்கள் வைத்திருந்த பையை அவன் கைகள் இறுகப் பிடித்தன. அந்தப் பணத்தைத் திருப்பிக் கொண்டுபோய் ராமன் அண்டு ராமனிடமே வீசி எறிந்துவிட்டுத் தன் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பி வாங்கிக் கொண்டுவந்து விடலாமா— என்று யோசித்தான் ராகவன்.

அதுதான் சரியென்று தோன்றியது.

அதே வேகத்துடன் மறுபடி திரும்பி 'ராமன் அண்டு ராமனை' நோக்கி விடுவிடென்று நடந்தான்.

ராகவன் அங்கு போய்ச் சேர்ந்த பொழுது சிவராமன் மட்டுமே, வழக்கம்போல், மேஜை எதிரில் உட்கார்ந்திருந்தான்.

பலராமனையோ, கிட்டனையோ அங்கு காணோம்.

ராகவன் திரும்ப வந்ததைக் கண்ணுற்ற சிவராமன் ஆச்சர்யமடைந்தான்.

'வாருங்கள், மிஸ்டர் ராகவன்! எதையாவது இங்கு வைத்து மறந்து போய்விட்டீர்களா என்ன?' என்று கேட்டுக்கொண்டே தானும் சுற்றுமுற்றும் பார்த்தான்.

'அப்படியெல்லாம் ஒன்றுமில்லை; இந்தாருங்கள்—உங்கள் பணம்! என் கையெழுத்துப் பிரதிகளை என்னிடம் திருப்பிக் கொடுத்து விடுங்கள்!' என்று சுற்றி வளைக்காமலே திடுமென்று சொல்லிவிட்டான் ராகவன்.

மூச்சே நின்றுவிடும் நிலையில் இருப்பவனைப்போலே, ராகவனை உற்று விழித்தபடியே அயர்ந்து விட்டான் சிவராமன்.

'உங்கள் பணத்தை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்; என் கதைகளைத் தந்துவிடுங்கள்' என்று மறுபடியும் வற்புறுத்தினான் ராகவன்.

'ஏன் என்ன விஷயம்?' என்று சிவராமன் தடுமாறினான்.

'உங்களிடமே மறுபடி வந்து நிற்க எனக்கு இஷ்டமில்லை; ஏற்கெனவே நீங்களேதான் வேண்டாமென்று சொன்னீர்கள்; இப்

போது மட்டும் என்ன வந்துவிட்டது?'

'ஏற்கனவே நடந்ததைப்பற்றியெல்லாம் எதுவும் வித்தியாசமாக நினைத்துக்கொண்டு வருத்தம் அடையாதீர்கள் ராகவன்; இப்போதுதான் நாம் நெருங்கி வந்து நண்பர்களாகி விட்டோமே?'

'இல்லை; எனக்கு இந்த பேரத்தில் இஷ்டமே இல்லை!'

'இதென்ன, மறுபடி, இப்படிப் பேசுகிறீர்கள் ராகவன்? நாம்தான் ஒப்புக்கொண்டு விட்டோமே; நாம் ஒப்பந்தத்தை ஊர்ஜிதம் செய்துகொள்ளவே அட்வான்ஸும் கொடுத்து முடிந்ததாகி விட்டது. திடீரென்று திரும்பி வந்து 'வேண்டாம்' என்றால், அது எப்படி முடியும்? முதலில் ஒப்பந்தத்தை முறித்துக்கொள்வதென்பது எங்கள் தொழிலுக்கே அழகல்லவே? அது மதிப்பைத் தருமா?'

'எழுத்தில் எழுதிக் கையெழுத்தாப் போட்டுவிட்டோம்? வெறும் வாய் ஒப்பந்தம்தானே? அது முறிந்தால் யாருக்கு என்ன மோசம் வந்துவிடும்?'

'எங்கள் தொழிலுக்கே அப்படி நடப்பது அவமானமாகும்; திருப்பித் தர நான் இனி சம்மதிக்கவே மாட்டேன்; ஒப்பந்தம் எழுதி கையெழுத்துப் போட்டு விட இப்போதும் நான் தயார்தான்; எழுதிக்கொண்டு விடலாமா?' என்று கேட்டான் சிவராமன்.

'எப்படி உங்கள் ஒப்பந்த வழக்கம்?'

'ராயல்டி முறை என்றால் நூற்றுக்குப் பதினைந்து; காபிரைட் மொத்தமாக விலை கொடுத்து வாங்கிக்கொள்கிறோம்; உங்களுக்கு எது தேவை?'

'காபிரைட்டுக்கே எனக்கு சம்மதம் என்றால், முடிவாக எவ்வளவுத் தொகை கொடுப்பீர்கள்?'

'உட்காருங்கள், மிஸ்டர் ராகவன்! நின்றுகொண்டேயிருக்கிறீர்களே? உட்காருங்கள்! எத்தனை கதைகள் கொடுத்திருக்கிறீர்கள்? இரண்டா?'

'ஆமாம்; இரண்டுதான்.'

'ஒவ்வொன்றும் சுமார் நூறு பக்கங்களுக்கு வரும்; சரி. எத்தனை கேட்கிறீர்கள்?'

'நீங்கள் எவ்வளவு கொடுப்பீர்கள்?'

சிவராமன் சற்றுத் தயங்கினான்; மலைத்தான்; ராகவனையே உற்றுப் பார்த்தபடி சில நிமிஷங்கள் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தான். ராகவனுடைய இந்த திடீர் மாற்றத்துக்கான காரணத்தை தன்னுடைய போக்கிலே நிச்சயப்படுத்திக் கொண்டு விட்டான்.

போட்டிக் கம்பெனிக்காரர்களான 'சேஷன் அண்டு சேஷனின்' தலையீடே ராகவனின் திருப்பத்துக்குக் காரணம் என்று தீர்மானித்துக்கொண்டு விட்டான்.

'சரி, மிஸ்டர் ராகவன்! இந்த இரண்டு கதைகளின் காபிரைட் உரிமை எங்களைச் சேர்ந்தது; அதற்காக இரண்டுக்குமாகச் சேர்த்து உங்களுக்கு ஐநூறு ரூபாய் கொடுத்து விடுகிறோம். சம்மதம்தானே?' என்று கேட்டான். ராகவனின் முகத்தில் பதித்த விழிகளைப் பெயர்க்கவேயில்லை.

ராகவனும் மலைத்துப் போய் விட்டான்; 'ஐநூறு ரூபாய்!-ஐநூறு ரூபாய்!'-உள்ளம் உருப்போடத் தொடங்கி விட்டது. நூறு ரூபாயைத் திருப்பிக்



கொடுக்க வந்த இடத்தில் ஐநூறு ரூபாய்!-

அதற்கும் அவன் மறுத்துப் பேசி தொகையை இன்னும் உயர்த்திவிடப் போகிறானே என்ற பயத்தில்- ராகவனை மேலே பேசவிடாதபடிக்கு- சிவராமன் அவசர அவசரமாக ஒப்பந்தக் காபிகளை எடுத்து, பரபரப்புடன் அதைப் பூர்த்தி செய்து, 'உம். இந்தாருங்கள் ராகவன்? கையெழுத்துப் போடுங்கள்' என்று சொல்லி அவன் எதிரில் நீட்டினான்.

ஒப்பந்தத்தைப் படித்துப் பார்க்காமலே ராகவன் கையெழுத்துப் போட்டு விட்டான்.

சிவராமன் அப்போதுதான் பெரிய பாரம் நீங்கினதைப் போன்ற பாவனையில், ஒப்பந்தத்தை எடுத்து பத்திரப்படுத்தி வைத்துவிட்டு, ராகவனைப் புன்சிரிப்புடன் நோக்கி- 'காரியம் முடிந்துவிட்டது; நூறு ரூபாய்கள் பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள்- பாக்கி நாநூறு ரூபாய்களையும் இரண்டு புத்தகங்களும் வெளியானவுடன் கொடுத்துவிடுகிறோம் என்ன? இப்போது திருப்திதானே?' என்றான்.

ஏதோ-ராகவனுக்கே பெரிய அனுகூலமாக யாவும் முடிந்து விட்டது போன்ற பாவனையில் சிவராமன் பேச்சு வந்தது.

'சரி, வருகிறேன்' என்று சொல்லிவிட்டு ராகவன் படி இறங்கி மீண்டும் தெருவில் நடக்கலானான்.

அவனுக்கும் அப்போது மன வேதனை ஓரளவு குறைந்துதானிருந்தது.

கிட்டன் ஆரம்பித்து வைத்ததுதான் என்றாலும், அப்போது அவனில்லாமலே நாநூறு ரூபாய் பெருகிவிட்டதே?

இனிமேல் கிட்டன் சிபாரிசினால் ராகவனுக்குப் பணம் கிடைத்தது என்று யாரும் பேச வதற்கு இடமில்லையல்லவா?

அவனால் கிடைத்த ரூபாய் வேண்டாமென்று திருப்பிக் கொடுக்கப்போன இடத்தில், அவனை அறியாமலே, இன்னும் நாநூறு சேர்ந்துகொண்டது.

அதில் சுயமுயற்சி ஏதும் இல்லையென்று உணர்ந்தபோதிலும், கிட்டன் தயவை நாடவில்லையே?- என்னும் திருப்தியே அப்போது ராகவன் மனதில் மேலோங்கி வந்தது.

## 8

வீடு திரும்பிய ராகவனை மைதிலி மௌனமாக இருந்துதான் வரவேற்றாள்.

அவன் சுபாவம் அவளுக்கு நன்கு தெரியும்.

சமீபகாலமாக அவனிடம் தோன்றியுள்ள பெரிய மாறுதலையும் அவள் உணர்ந்தேயிருந்தாள்.

வெகுவாக மனசு ஒடிந்து கிடந்த அவனிடம் ஏதாவது பேசினாலும் அவன் சரியாகப் பதிலளிக்கமாட்டான்; ஒன்று 'சள்'ளென்று எரிந்து விழுவான்; அல்லது 'உர்'ரென்று முகத்தை வைத்துக்கொண்டு , எதுவும் பேசாமலே இருந்துவிடுவான்.

பணம் இல்லையே என்று எதற்காக இப்படிப் பைத்தியம்மாதிரி நடந்துகொள்ள வேண்டும்? எத்தனையோ பேர்-ஒரு செல்லாத காசுக்குக்கூட வழியில்லாத எத்தனையோ பேர்-சிரித்துப் பேசி சந்தோஷமாக இருக்கவில்லையா? என்றுதான் அவள் நினைத்துக் கொண்டாள்.

அதைப்பற்றி ராகவனிடம் பேசிப் பயனேதும் ஏற்படாது என்பதையும் அவள் அறிவாள்.

ஆகவே மௌனமாக அவன் முகத்தைப் பார்த்தபடி நின்றாள்.

வழக்கத்துக்கு மாறாக அன்று ராகவன் முகம் சற்றே மலர்ந்திருப்பதுபோல அவளுக்குத் தோன்றியது. அது நிஜம்தானா? அல்லது வெறும் பிரமையா?

ராகவன் ஏதும் பேசாமலேதான் கொண்டு வந்திருந்த ரூபாய் நோட்டுக்களை அவளிடம் கத்தையாக நீட்டினான். அப்படி நீட்டியபோது அவன் முகத்தில் லேசாகப் புன்சிரிப்பு அரும்பியதையும் அவள் கவனிக்கத் தவறவில்லை.

அவன் கைநிறையப் பத்து ரூபாய் நோட்டுக்கள்!

மைதிலி அப்படியே ஸ்தம்பித்துவிட்டாள்!

'ஏது?…இவ்வளவு?…எத்தனை?' என்று கேட்கமுடியாமல் கேட்டுத் திணறினாள்.

'நூறு ரூபாய்! பத்து பத்து ரூபாய் நோட்டுக்கள்! பிடி!'

'நூறு ரூப்பாய்!' என்று மைதிலியும் நம்பமுடியாதவளைப்போலே திருப்பிச் சொன்னாள். 'ஏது இவ்வளவு பணம்?'

'கையில் பதினொரு அணாவுடன் சூதாடப் போகிறேன் என்று சொல்லிப் போனேன் அல்லவா? அதன் பலன்தான் இந்த நூறு ரூபாய்!' என்று சாதாரணமான குரலில் பேசினான் ராகவன்.

'சூதாடினீர்களா!'

'நான் ஆடவில்லை; எனக்குப் பதில் இன்னொருத்தன் ஆடினான்; அந்த இன்னொருத்தன் எனக்காக ஆடித் தேடிக்கொடுத்த பணம் வேண்டாம் என்று திருப்பிக் கொடுக்கப் போனேன்; அப்போது இன்னொரு நாநூறு ரூபாய்களும் சேர்ந்து வந்தது!' என்று சொல்லி வாய்விட்டுச் சிரித்தான் ராகவன்.

அவன் அப்படி மகிழ்ச்சியோடு சிரித்து அவள் கண்டதேயில்லை. காரண காரியங்கள் கொஞ்சமும் புரியாமல் அவள் மலைத்து விழித்தாள்.

'பசி வயிற்றைக் கிண்டுகிறது; சமைத்திருக்கிறாயா? சரி; சாதம் போடு! சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்' என்றான் ராகவன்.

மைதிலி உள்ளே ஓடி பரபரப்புடன் இலை போட்டாள்.

இலை எதிரில் அமர்ந்து கொண்டே ராகவன் 'இத்தனைக்கும் காலையில் ஹோட்டலில் வேறு வயிறு புடைக்கத் தின்றுவிட்டேன். அவன்தான் அந்த செலவும் செய்தான். இதோ—பார் காலையில் கொண்டுபோன அந்தப் பதினொரு அணாவும் அப்படியே மிச்சம்!' என்று பரம திருப்தியுடன் பேசிக்கொண்டேயிருந்தேன்.

அத்தனை சாதாரணமான குரலில் சந்தோஷமாக அவன் பேசி அவள் கேட்டதேயில்லை. இந்த அபூர்வமான மாறுதலுக்கு மூல காரணமான அவன் யார்? என்ன ஜாலம் செய்து இந்த சாதனை புரிந்தான் என்று தெரிந்து கொள்ள மைதிலிக்கு ஆர்வம் மிகுந்தது.

'இப்படி உங்களுக்கு உதவி செய்த அந்த ஆசாமி யார் என்பதை நீங்கள் இன்னும் சொல்லவேயில்லையே!' என்று ஆவல் மிகுந்து மைதிலி கேட்டாள்.

'அதுவா? அவன்தான் அந்தக் கிட்டன். திடீரென்று எங்கிருந்தோ என் எதிரில் வந்து நின்றான்; அசல் ஜாலவித்தைக்காரனைப்போலவே பேசி நடந்து கொண்டான்.'



மைதிலி ஒருகணம் குழம்பினாள்; ஏதோ யோசிப்பதுபோலே சற்று நின்றாள். 'கிட்டனா? எந்தக் கிட்டன்?…அதாவது…?'

'ஆமாம்! உன்னையும் என்னையும் பிரிக்கமுடியாமல் சேர்த்து விட்டானே, அந்தப் பாவிதான்!' என்று சிரித்தான் ராகவன்.

'அவன்தானா! அடேயப்பா! அவன் சாதுர்யம் யாருக்கு வரும்? சிரிக்கச் சிரிக்கப் பேசுவான்; மகாவாயாடி—ஆனாலும் யாரையும் மயக்கிவிடுவான்! அவனா…!'

உற்சாக மிகுதியால் தன்னை அறியாமல் பேசிக்கொண்டேயிருந்தாள் மைதிலி.

'கல்யாணத்தின்போது அவனைப் பார்த்தது; அப்புறம் எங்கே போனானோ? என்ன ஆனானோ? தகவலே இல்லை. திடீரென்று இங்கே எப்படி அவனை சந்தித்தீர்கள்?'

'ஆகாயத்திலிருந்து குதித்தவனைப்போலத்தான் காணப்பட்டான். விவரம் கேட்டதற்கு, அவன் வழக்கப்படி, என்னவோ அளந்தான்.'

'அளப்பதாவது? எனக்கு அவனை ரொம்ப நன்றாகத் தெரியும்! என்ன பேசினாலும் வெகு அழகாகப் பேசுவானே? அவன் செய்த உதவியை மறக்கமுடியுமா? என் கல்யாணத்துக்கு…' என்று மேலே ஏதோ பேச வாயெடுத்தவள் அப்போதுதான் ராகவனின் முகத்தைக் கவனித்தாள்; பேசுவதை 'டக்'கென்று அப்படியே நிறுத்திவிட்டாள்.

அவளை உறுத்தி விழித்த ராகவன், 'உம்? ஏன் நிறுத்திவிட்டாய்? அப்புறம் சொல்லேன்? உன் கல்யாணத்துக்கு?' என்று கோபத்துடன் கேட்டான்.

மைதிலி தயங்கிக்கொண்டே 'தயவுசெய்து என்னிடம் கோபித்துக்கொள்ளாதீர்கள். நம் கல்யாணத்தை அவன்தானே முடித்து வைத்தான் என்பது இந்த சந்தர்ப்பத்தில் எனக்கு நினைவு வந்தது. இப்போதும் அவனால்தானே இந்தப் பெருந்தொகை நமக்குக் கிடைத்துள்ளது? அதனால்தான் என்னை அறியாமலே பேசிவிட்டேன்' என்றாள் கெஞ்சும் குரலில்.

'அதற்காக? அவனுக்குக் கோயில் கட்டவேண்டும் என்கிறாயாக்கும்? அப்படி அவனே உனக்கு உயர்ந்தவனாகப்பட்டால் உன் மனக்கோயிலிலே அவனை வைத்துப் பூஜை பண்ணு; ஆனந்தப்படு; எனக்கு அவன் பெரிய உதவி எதையும் அன்றும் செய்யவில்லை. இன்றும் செய்யவில்லை. அவனைக் கண்டால் எனக்குப் பிடிக்கவுமில்லை' என்று படபடத்தான் ராகவன்.

'எதற்காக வீண் வார்த்தைகளை இப்படி வாரியிறைக்கிறீர்கள்? கிட்டன்தான் உதவி செய்தான் என்று நீங்கள்தானே சற்றுமுன் சொன்னீர்கள்?' என்று மைதிலியும் நிஷ்டூரமாகவே பேசினாள்.

'அவன் என்ன உதவி செய்துவிட்டானென்று உன்னிடம் வந்து சொன்னேன்? மகா உதவி செய்துவிட்டானோ? அவனால் எனக்குப் பெரிய உபத்திரவமாகத்தான் இருக்கிறது! அவன் இல்லாவிட்டால் நான் செத்தே போயிருப்பேன் என்று நினைத்து விட்டாயாக்கும்? நீ அவனால்தான் இன்னமும் வாழ்ந்து

கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது?'

'வரவர நீங்கள் நாக்கில் நரம்பில்லாமல்தான் பேசுகிறீர்கள்' என்று சொன்ன மைதிலி வெடித்துக்கொண்டு அழுதுவிட்டாள்.

'ஆமாம்; நான் அப்படித்தான் பேசுவேன். என்ன இருந்தாலும் உன் கிட்டனைப்போல் அவ்வளவு சாதுர்யமாகவும், அழகாகவும் மயக்கிப் பேச எனக்குத் தெரியுமா என்ன? நீ கிட்டனையே கல்யாணம் செய்துகொண்டிருந்தால்...?'

அந்த அபத்தப் பேச்சைக் கேட்கப் பிடிக்காமல் சரேலென்று அப்பால் போய்விட்டாள் மைதிலி.

உள்ளே போய் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு ஹிருதயமே வெடித்துவிட்டதுபோலே விம்மி விம்மி அழுதாள்.

மனைவியிடம் கணவன் பேசும் பேச்சா அது? அவள்தான் அப்படி என்ன தவறாகப் படும்படி பேசிவிட்டாள்? முதலில் நூறு ரூபாய் கிடைத்துவிட்ட சந்தோஷம்; மேலும் நானூறு வரப் போகிறது என்ற கவர்ச்சி வேறு; இதற்கு மூலகாரணம் கிட்டனே என்று ராகவனே தெரிவித்தான். அதன்பேரில் அவளுக்கு உற்சாகம் கரைபுரண்டுவிட்டது. பெற்றோருக்குப் பெரும் பாரமாக இருந்த தன்னை, ராகவனைக் கொண்டுவந்து கைப்பிடிக்க வைத்ததும் கிட்டனே என்பது அவள் நினைவிலே மிதந்து வந்தது. அந்த நன்றியுணர்ச்சியிலே அவள் ஒருகணம், தன்னை மறந்தது அத்தனை பெரிய குற்றமாகிவிட்டதா?

ஆயினும் ராகவனின் உணர்ச்சியை அவள் என்ன கண்டாள்? அவள் அப்படிப் பேசியபோது அவனுடைய மனநிலை என்ன? பொதுவாகப் பிறருடைய தயவில் அவன் வாழ்வதென்ற நினைப்பே விஷமாகப்பட்டது அவனுக்கு. கிட்டன் தயவில் கிடைத்தது என்பதற்காகவே அவன் வந்த பணத்தையும் திருப்பிக் கொடுக்கப் போனான். தானே சம்பாதிக்க அவனுக்குத் திறமை இருக்கிறதா – இல்லையா – என்பதை அறிந்துகொள்ளுமுன்னரே கிட்டன் என்ன, கேசவன் என்ன? என்றிருக்கும் நிலையில், மைதிலி, 'கிட்டன் உதவி, கிட்டன் கெட்டிக்காரன்–அவனால்தான் சகலமும் நடக்கிறது' என்ற பொருளில் உற்சாகமாகப் பேசியது அவனுக்குப் பொறுக்க முடியாத ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டுவிட்டது. வார்த்தைகளைக் கொட்டிவிட்டான்.

இந்த நிலையில் யாரிடம் தவறு?

தவறே இல்லை; அவரவர் உணர்ச்சிப்பெருக்கில்–இருவர் பேசியதும் சரியான பேச்சே! கணவன் மனைவி என்ற முறையில் அவரவர் உணர்ச்சிகள் விசித்திரமானதாக இல்லை? இந்த முரண்பட்ட நிலையில் அவ்விருவரும் எப்படி மனமொத்து வாழமுடியும்? இல்லறத்திலே எப்படி இன்பம் காண முடியும்?

மைதிலி பெருமூச்செறிந்தாள்—அது துக்க மயமானது.

ராகவனும் நெடுமூச்சுவிட்டான்–அது உஷ்ணத்திலே வெந்தது.

(தொடரும்)



கு மாஸ்தா கோபாலன் வெகு வ...யத்துடன் அக்கவுண்டண்ட் சுப்பிரமணியனை அணுகினான்:— 'ஸார், ஒரே நிமிஷம். இந்த லெட்ஜரில் டெபிட்டை எங்கே போடுவது, 'க்ரெடிட்'டை எங்கே போடுவது என்று மாத்திரம் காட்டித் த...ால் போதும்' என்றான்.



# அப்பாவி

## ப.ராதாகிருஷ்ணன்

''டெபிட்'டைத் தூக்கி நெருப்பில் போடும். 'க்ரெடிட்'டைக் கிணற்றில் வீசி எறியும். போம் இங்கிருந்து' என்று சீறி விழுந்தான் சுப்பிரமணியன். வீட்டில் மனைவியுடன் சண்டை போட்டுக்கொண்டு கிளம்பியிருந்த அவன் கோபம் ஆபீசிற்கு வந்தும் அடங்கவில்லை. அதிலும் அப்பாவிக் கோபாலன் வேறு வந்து மாட்டிக்கொண்டால் கேட்க வேண்டுமா?

தடித்த கணக்குப் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு முகத்திலோர் அசட்டுச் சிரிப்புடன் கோபாலன் நழுவினான். அங்கிருந்த இதர சிப்பந்திகள் அவனைப் பார்த்துச் சிரித்தனர்.

சுப்பிரமணியன் மட்டுமென்ன, அந்தக் காரியாலயத்திலேயே யாருக்குக் கோபம் வந்தாலும் கோபாலன்மீதுதான் காட்டுவார்கள். வசைமொழிகள், அதட்ட... கள், பரிகாசப் பேச்சு எல்லாவ... றையும் முகங்கோணாது பொறு... துக்கொள்வான் அந்தப் பா... சாது. தாம் செய்ய வேண்டிய வேலையை அவன் தலைமேல் கட்ட...

விட்டு 'ஹாய்'யாக இருக்கும் சிப்பந்திகளும் அங்கு உண்டு. இங்ஙனம் பொறுமையின் அவதாரமாக, உழைப்பின் உருவாக விளங்கிய கோபுவுக்கு நடராஜன் ஒருவனைத் தவிர வேறு நண்பர்கள் கிடையாது.

டைப்பிஸ்ட் நடராஜன் சற்று ரோஷக்காரன். நண்பனது பொறுமைக் குணத்தை அவன் வியந்து பாராட்டாதது இயற்கை. அடிக்கடி இத்தோழர்களிடையே காரசாரமான விவாதங்கள் நிகழும்.

'ஏண்டா கோபு, உனக்கு முதுகெலும்பு இருக்கிறதா, இல்லையா?' என்ற கேள்வியுடன் ஆரம்பித்து வைப்பான் நடராஜன்.

'இருக்கிறது அப்பனே இருக்கிறது. அது இல்லாவிட்டால் நான் நிமிர்ந்து நிற்பது எப்படி?' இது கோபு தரும் பதில்.

'உன் உடலின் முதுகெலும்பைப் பற்றி நான் கேட்கவில்லை. மனத்திற்குப் பின்பலமாக அமைய வேண்டிய ரோஷ உணர்ச்சியைத் தான் குறிப்பிடுகிறேன். இன்று ஹெட் கிளார்க் ராமசாமி உன்னை 'முட்டாள்' என்று வைதானே; உன் ஸ்தானத்தில் நான் இருந்தால் என்ன செய்திருப்பேன் தெரியுமோ?'

'தெரியும், அவன் பற்களைத் தட்டிக் கையில் கொடுத்திருப்பாய்; அல்லது நரசிம்மாவதாரம் எடுத்து அவனை இரண்டாகக் கிழித்தெறிந்திருப்பாய். ஆனால் நான் பின்பற்றும் முறைகள் வேறு, தம்பி. பொறுமையில் எனக்கு நம்பிக்கை உண்டு' என்றான் கோபு, தன் புகழ் பெற்ற அசட்டுச் சிரிப்புடன்.

'அந்தப் பொறுமையில் தீயை வை. ஏன்? கழுதைகூடத்தான் பொறுமையாக இருக்கிறது. மனிதனைப் பிறந்தால் தன்மானம் வேண்டுமடா, பாண்டியா ......' என்ற ரீதியில் தன் உபதேசங்களைத் தொடர்ந்தான் பாரதி பக்தனை நடராஜன். ஆயினும் என்ன பயன்? செவிடன் காதில் சங்கு ஊதுவதற்கும் இந்த முயற்சிகளுக்கும் அதிக வித்தியாசமில்லை!

ஃ ஃ ஃ

கட்டழகி லலிதா அக்காரியாலயத்தில் 'ஸ்டெனோ'வாக நியமனம் பெற்றாள். சிப்பந்திகளிடையே விவரிக்க இயலாத ஓர் பரபரப்பும் புத்துணர்ச்சியும் தோன்றிவிட்டன. காரியாலய அலுவல்களோ எப்போதையும் விடக் குறைந்த வேகத்தில் நடக்கத் தொடங்கின. பகல் முழுவதும் அவளழகைக் கண்டு ரஸிப்பதிலும் தம்முள் காதைக் கடித்துக் கொள்வதிலுமாக இருந்த சிப்பந்திகளுக்கு வேலையில் எவ்வாறு கவனம் செல்லும்?

எதிர்பார்க்கக் கூடியவாறே கோபாலனுக்குச் சோதனைகள் அதிகரித்தன. லலிதா பார்த்து ரஸிக்க வேண்டும், வியக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அவள் முன்னிலையில் ஒவ்வொருவரும் கோபாலனை அதிகாரம் செய்தனர், ஆட்டி வைத்தனர். உள்ளத்தைக் குத்தும் பரிகாசப் பேச்சுக்கள் வரையறையின்றி வீசப்பட்டன. சில்லரை வேலைகள் அபரிமிதமாக அவன் மீது சுமத்தப்பட்டன. ஒவ்வொரு சமயம் நடராஜனே அக்குழுவின் திருப்பணியில் பங்கு கொண்டு நண்பனுக்கெதிராக நின்றான்.

ஆனால் கோபுவோ? எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. 'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல' எல்லா இன்னல்களையும் பொறுத்தான். அதே அசட்டுச் சிரிப்புடன் தன் வேலையைச் செய்து கொண்டு போனான். லலிதாவின் எழிலுரு எவ்விதத்திலும் அவனைப் பாதிக்கவில்லையெனத் தோன்றியது.

ஃ ஃ ஃ

மானேஜர் சங்கரநாராயணன் முகத்தில் கடுமை, அவர் பேச்சில் கடுமை. உரத்த குரலில் அவர் பேசினார் :—'கோபு! இதற்கு என்ன பதில் சொல்கிறாய்? புஸ்தகங்களில் மசியைக் கொட்டிப் பாழடிப்பதற்காகவா உனக்குச் சம்பளம் கொடுத்து இங்கே வைத்துக் கொண்டிருக்கிறோம்? அடுத்த வாரம் ஆடிட்டர் வந்து கேட்டால் நாங்கள் என்ன கணக்கைக் காண்பிப்பது?'

'ஸார், மசியை நான் கொட்டவில்லை. இந்தப் புஸ்தகத்தையே நான் கையால் தொட்டு ஒரு மாதமாகிறது' என்றான் கோபு ஈனஸ்வரத்தில்.

'அப்படியானால் நான் சொல்வது பொய்யா? உன்னைத் தவிர வேறு யாரும் இதைச் செய்திருக்க முடியாது' என்று குறுக்கிட்டுச் சீறினான் அக்கவுண்டண்ட் சுப்பிரமணியன். புகாரை மானேஜரிடம் கொண்டு வந்திருந்ததே அவன்தான். மசிக்கறைகள் படிந்து உபயோகமற்றுவிட்ட 'லெட்ஜர்' மேஜைமீது பரிதாப நிலையில் காக்ஷியளித்தது.

மானேஜர் அறைக்கு வெளியே சிப்பந்திகள் தம் வேலையை அறவே நிறுத்திவிட்டு மேற்படி விசாரணையை ஒட்டுக்கேட்டவாறிருந்தனர். பழைய 'ஓநாயும் ஆட்டுக்குட்டியும்' என்ற கதையில் வருவது போன்ற ரீதியில் குற்றம் நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

'கோபு! தவறு செய்ததுமன்றியில் அதை ஒப்புக்கொள்ள மறுத்துப் பொய் வேறு சொல்கிறாய். உன் குற்றம் இதனால் இரட்டிப்பாகிறது. இவ்விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துவிட்டேன்' என்றார் மானேஜர்.

'நல்லது ஸார்' என்றான் கோபு ஒரே வார்த்தையாக. பயனற்ற பேச்சுவார்த்தைகள் நிகழ்த்துவது அவனுக்குப் பழக்கமில்லாத விஷயம்.

அந்நிலையில்தான் எதிர்பாராத அக்குறுக்கீடு நேர்ந்தது. 'ஸார். அவர் தவறும் செய்யவில்லை, பொய்யும் பேசவில்லை' என்றது ஓர் தீங்குரல். கதவருகே லலிதா நின்றாள்.

'லலிதா! நீயா?...உனக்கெப்படித் தெரியும்?' என்று கேட்டார் மானேஜர் ஆச்சரியத்துடன்.

'மசியைக் கொட்டியது குமாஸ்தா நாராயணன். அதை நான் கண்களால் பார்த்தேன், இன்னும் சிலரும் கவனித்தார்கள். அவர்களில் யாரும் உண்மையை உரைத்து நிரபராதியை விடுவிக்க முன்வராதபடியால் நான் அப்பணியைச் செய்ய வேண்டியதாயிற்று. இப்படிக் குறுக்கிட்டதற்காக என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்' என்றாள் லலிதா.

அக்கவுண்டண்ட் சுப்பிரமணியனின் முகத்தில் ஈயாடவில்லை. மானேஜர் சங்கரநாராயணனே ஓர் கணம் ஸ்தம்பித்துவிட்டார். எதையும் தீர விசாரித்துச் செய்யத் தனக்குத் திறனில்லையென்ற உண்மையையல்லவா இந்த அழகி அப்படிச் சுட்டிக் காண்பித்துவிட்டாள்?

அறைக்கு வெளியே கோபுவின் கண்கள் லலிதாவின் கயல்விழிகளைச் சந்தித்தன.

'மெத்த வந்தனம்' என்றான் கோபு. அதற்குமேல் தன் உணர்ச்சியை வெளியிட அவனுக்குச் சொற்கள் கிட்டவில்லை.

புன்முறுவலுடன் தலையசைத்தாள் அவ்வெழிற் செல்வி. அவளது நோக்கில் அன்பு இருந்தது, நன்மதிப்பு இருந்தது - ஆனால் இரக்கத்தின் சாயல்கூட இல்லை!

ஏன்?

அக்காரியாலயச் சிப்பந்திகளில் யாராலுமே உணர முடியாத ஒருண்மையை அவள் அறிந்திருந்தாள். பெண்மையின் நுண்ணறிவு அவளுக்குச் சொல்லியிருக்க வேண்டும் :— 'இந்தக் கோபாலனை அலக்ஷ்யமாக எண்ணாதே. நீறுபூத்த நெருப்பு இது' என்று!

ஃ ஃ ஃ

ஹெட் கிளார்க் ராமசாமியின் மேஜையைச் சுற்றிச் சிப்பந்திகளின் கூட்டம். ஆபீஸ் தொடங்க இன்னும் பத்து நிமிடங்கள் இருந்தன. அந்தப் பொழுதை வீணாக்காமல் அரட்டைக் கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கு விவாதிக்கப்படுவது சாதாரண விஷயமல்ல, ஒவ்வொரு முகத்திலும் ஆச்சரியக் குறி, அவநம்பிக்கை!

'போடா போ. உனக்குக் கோளாறு கண்களிலா அல்லது மண்டையிலா என்று தெரியவில்லை. யாரையோ பார்த்துவிட்டு வந்து உளறுகிறாய்' என்றான் ராமசாமி.

'நீ எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள். நான் கண்களால் கண்டதைத்தான் சொல்கிறேன். கைகோத்துக் கொண்டு போய் டாக்ஸியில் ஏறியது கோபுவும் லலிதாவும் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது' என்று 'ரிகார்டு கீப்பர்' தணிகாசலம் தீர்மானமாகச் சொன்னான்.

அரை டஜன் குரல்கள் ஏககாலத்தில் பேசின.

'என்ன அநியாயமடா இது! நாம் இத்தனை பேர் இருக்கிறோம். நம்மில் யாரையும் ஏறெடுத்துப் பார்க்காமல் இந்த அசட்டுப் பிச்சுவைப் போய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறாள் பாரேன். இத்தனை அழகாக இருந்து என்ன பிரயோஜனம்? பெண்களுக்கே விவேகம் கிடையாதென்று பெரியவர்கள் தெரியாமலா சொன்னார்கள்? போயும் போயும்...'

பேரொலி கிளப்பி ராமசாமியின் பிரலாபத்தைக் கலைத்தவாறு ஆபீஸ் வாசலில் வந்து நின்றது ஒரு ஆட்டோ ரிக்ஷா. அதிலிருந்து லலிதாவும் கோபுவும் இறங்கி உள்ளே நுழைந்தனர். பொறாமைக் கனல் வீசும் பல ஜோடிக் கண்கள் அவ்விருவரையும் விழுங்கி விடுவது போல நோக்கின.

'நான் சொன்னதை நம்ப மறுத்தீர்களே. இப்போது நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்' என்னும் பாவனையாகத் தலையை ஆட்டினான் தணிகாசலம்.

ஃ ஃ ஃ

'தயவு செய்து என்னைத் தொடாதீர்கள், மானேஜர் ஸார். உங்களை ஓர் கண்ணியமான மனிதரென்று நினைத்துத்தான் இந்நேரம்வரை ஆபீஸில் தனியே தங்கத் துணிந்தேன். வாஸ்தவமாகவே ஏதேனும் அவசர வேலை இருந்தால் கொடுங்கள், செய்கிறேன். இல்லாவிட்டால் என்னை வீடு செல்ல அனுமதியுங்கள்' என்றாள் லலிதா கடுமையுடன் சற்று மரியாதை கலந்த குரலில்.

பற்களெல்லாம் தெரியச் சங்கரநாராயணன் சிரித்தார். 'லலிதா! ஏன் உனக்கு இத்தனை கோபம் வருகிறது? சரிதான். நான் தொட்டால் உனக்குப் பிடிப்பதில்லை. ஆனால், ஒரு நாள் தவறாமல் அந்த முட்டாள் கோபுவின் கையைக் கோத்துக் கொண்டு உலவப் போகிறாய்.'

'ஆம். அந்த விஷயத்திற்காக நான் யாரிடமும் அஞ்சுவதில்லை. அவர் என் காதலர்: நீங்கள் யார்? மேலும் அவரை 'முட்டாள்' என்று குறிப்பிட உங்களுக்கு என்ன உரிமை?' என்று வெடுக்கெனக் கேட்டாள் அவள்.

'நல்லது. அவன் முட்டாள் அல்ல, பெரிய கெட்டிக்காரன் என்றே வைத்துக்கொள்ளலாம் லலிதா! நான் சொல்வதைச் சற்றுக் கவனி. எந்த நிமிஷம் நீ இந்தக் காரியாலயத்தில் பேட்டிக்காகக் கால் வைத்தாயோ, அந்த நிமிஷமே உன் அபூர்வ லாவண்யத்திற்கு என் உள்ளம் அடிமையாகிவிட்டது. வேறு பல மனுதாரர்களை நிராகரித்து



உனக்கே நான் இந்த உத்தியோகம் கிடைக்கச் செய்தேன். இந்த ஆறு மாத காலமாக நான் கண்டு வருவது ஒரே கனவுதான். உன்னை என் வாழ்க்கைத் துணைவியாகப் பெற வேண்டும். இன்பத்தில் திளைக்க வேண்டும். நீ ஒரு வார்த்தைச் சொல். உன்னையும் உன் குடும்பத்தாரையும் வறுமை நிலை நீங்கி நல்வாழ்வு பெறச் செய்கிறேன். லலிதா!...' அவள் காலடியில் மண்டியிடாத தோஷமாகக் கெஞ்சினார் சங்கரநாராயணன்.

லலிதா புரிந்த அலட்சியப் புன்னகை அவர் இதயத்தைக் குத்தியது. 'மானேஜர் ஸார். எனக்கு வேலை தந்ததற்காகத் தங்கள்பால் மிக நன்றியுடன் இருக்கிறேன். ஆனால், அவ்வுதவியின் நோக்கம் என்னவென்று எனக்குத் தெரியாது போயிற்று. இப்போது தெளிவாகச் சொல்லி விடுங்கள். தாங்கள் என்னை இக்காரியாலயத்தில் வைத்துக் கொண்டிருப்பது நான் செய்து வரும் பணிக்காகவா அல்லது கேவலம் என்மீது தங்களுக்குள்ள மோஹத்தினாலா?'

சங்கரநாராயணன் திணறிப் போனார். லலிதாவின் சொல்மழை தொடர்ந்தது: 'காரணம் பிந்தியதானால் இப்போதே நான் விலகி விடுகிறேன். எனக்காக முதலாளியின் பணத்தை நீங்கள் விரயம் செய்வது என் மனச்சாட்சிக்கு ஒவ்வாத விஷயம். இங்கில்லாவிடில் வேறெந்தக் காரியாலயத்திலேனும் சென்று உழைத்து என் குடும்பத்தைப் பராமரிக்கிறேன். அதற்காகத் தங்கள்போலொருவரை மணக்கும் உத்தேசமும் எனக்குக் கிடையாது. என் தன்மையை இப்போதேனும் உணர்ந்துகொள்ளுங்கள்.'

அவளுக்குப் பதிலளிக்க அவரால் எப்படி இயலும்? சங்கரநாராயணன் வாய் திறவாது நின்றார். லலிதா அங்கிருந்து நகர்ந்தாள்.

சில கண நேரத்திற்குக் குமுறிக் கிடந்த சங்கரநாராயணனின் உள்ளத்தில் பொறாமைத் தீ கொழுந்துவிட்டெரியலாயிற்று. காதலில் தன்னைத் தோல்வியுறச் செய்து அக்கட்டழகியின் அன்பைப் பெற்றுவிட்ட கோபுவின்மீது எவ்வாறேனும் பழி தீர்க்கும் உறுதி பூண்டார் அவர்.

* * *

முதலாளி சந்தானம் தமது முகவாய்க்கட்டையைத் தடவிக் கொண்டார். அவநம்பிக்கையால் அவரது கண்கள் அகல விரிந்திருந்தன.

'அப்படியா, மிஸ்டர் சங்கரநாராயணன்! இந்தக் கோபு ஒரு அசடு என்று நீங்களே பல தடவை என்னிடம் சொன்னதுண்டு. இவனா இத்தனை சாமர்த்தியமாக, துணிச்சலோடு திருட்டு வேலை செய்துவிட்டான்?' என்று வினவினார் அவர்.

'அசடா? அத்தனையும் வேஷமென்று இப்போதல்லவா விளங்குகிறது! இதுபோன்ற ஒரு சந்தர்ப்பத்துக்காகத்தான் வேஷம் போட்டுக்கொண்டு காத்திருந்திருக்கிறான் இந்த அயோக்யன். கண்ணிமைப் பொழுதில் ஐயாயிரம் ரூபாயை விழுங்கிவிட்டானே. 'போர்ஜரி' என்றாலும் எவ்வளவு நுணுக்கமான 'போர்ஜரி' பாருங்கள்.' என்று தம் குற்றச்சாட்டைச் சங்கரநாராயணன் தொடர்ந்தான். அடுத்த அறையிலிருந்த லலிதாவுக்கு அவ்வார்த்தைகளில் ஒவ்வொன்றும் தன் தலைமீது விழும் பேரிடியாகத் தோன்றியது. 'அவரா! இப்படியும் இருக்கக்கூடுமோ? அட தெய்வமே!'

முகத் தோற்றத்தில் உணர்ச்சி யெதையும் காண்பிக்காமல் மௌனமாக நின்றிருந்தான் கோபு.

'என்னப்பா சொல்கிறாய் நீ? போலீஸைக் கூப்பிடுவதற்கு முன்பு நீயே குற்றத்தை ஒப்புக்கொண்டு திருடிய பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டால் நல்லது' என்றார் முதலாளி.

'அது போதாது ஸார். போலீஸைக் கூப்பிட்டுத்தான் ஆக வேண்டும். இது சாதாரண விஷயமல்ல. இவனைத் தண்டிக்காது விட்டால் இதர சிப்பந்திகளும் நேர்மை பிசகுவதைத் தவிர்க்க முடியாது' என்று சங்கரநாராயணன் குறுக்கிட்டார்.

'நல்லது, போலீஸை அழையுங்கள். ஆனால், ஒன்று. அவர்கள் உங்களது கைகளிலேயே விலங்கு மாட்டுவதானால் நான் செய்யக்கூடியது எதுவுமில்லை' என்றார் முதலாளி.

'என் கைகளிலா? ஏன்?' சங்கரநாராயணன் விழித்தார்.

கணீரென்ற குரலில் முதலாளி பேசினார்:—'மிஸ்டர் சங்கரநாராயணன்! இந்தக் கோபாலன் ஐயாயிரம் ரூபாயை அமுக்கிவிட்டான் என்று நீர் சாட்டும் குற்றத்தை நான் நம்பவில்லை. ஆனால், நீர் இந்தக் காரியாலயப் பணத்தில் இருபதினாயிரம் ரூபாய்வரையில் கையாடியிருக்கிறீர் என்று அவன் சாட்டும் குற்றத்தை நம்புகிறேன்.'

சங்கரநாராயணனின் முகம் வெளிறிக் 'குப்'பென வியர்த்துவிட்டது. 'ஸார்! நானா?' என்று குழறினார்.

'நீரேதான். உம்மீது நம்பிக்கை வைத்து இக்காரியாலய நிர்வாகத்தை ஒப்படைத்தேன். எனக்கு நீர் செய்த கைம்மாறு இது. போனது போகட்டும். நீர் திருடிய பணத்தைக் கொடுத்துவிட்டு மரியாதையாக வெளியேறும். இல்லாவிட்டால் உம்மை நானே போலீஸில் ஒப்படைக்க நேரும். கோர்ட்டு, விசாரணை என்று வந்தால் ஒவ்வொரு தஸ்தாவேஜியும் உமக்கு எதிராகப் பேசும். அதற்கு இதோ நிற்கும் என் மருமகன் கோபாலன் பொறுப்பாளி. காரணமில்லாமலா இவன் இப்படி அசட்டு வேஷம் போட்டுக்கொண்டு ஒரு வருஷமாகக் காலம் தள்ளி வருகிறான்?'

கோபு ஓர் புன்னகை செய்தான். சங்கரநாராயணனால் அதன் தீட்சண்யத்தைத் தாங்கக்கூடவில்லை.




'மிஸ்டர் சங்கரநாராயணன். தங்களை வெகுளாக ஏமாற்றிவிட நேர்ந்தமைக்கு வருந்துகிறேன். என் மாமா ஏவினார், நான் கீழ்ப் படிந்தேன். அவ்வளவுதான் என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும்...செக் புஸ்தகம் கொண்டுவந்திருக்கிறீர்களோ?' என்று கோபு சம்பாஷணையில் பிரவேசித்தான்.

ஒரு தலையசைப்பு மறுமொழி யாகக் கிடைத்தது.

'நல்லது விழுங்கிய தொகைக்கு ஒரு 'செக்' எழுதிக் கொடுத்து விடுங்கள் விஷயம் தீர்ந்து விடும்.'

வாய் திறவாமல் உட்கார்ந்து 'செக்'கை எழுதினார் சங்கரநாராயணன்.

'நாளை நீர் வேலைக்கு வர வேண்டியதில்லை. இந்தக் காரியாலய அலுவல்களைக் கோபு கவனித்துக்கொள்வான்' என்றார் முதலாளி.

ஃ ஃ ஃ

இப்போது கோபுவுக்கு மூளை இருக்கிறதா, முதுகெலும்பு உண்டா என்ற பிரச்னைகளை அந்த ஸ்தாபனத்துச் சிப்பந்திகள் யாரும் அலச முற்படுவதில்லை. காரியாலயத்திற்கு அவன் உயிர்நாடியாக விளங்குகிறான் அவன் இல்லத்தை ஒளி செய்கிறாள் லலிதா.

★




"போன ஜென்மத்திலே, நாங்க ரெண்டு பேரும் ஒன்றாக இருந்தோம்!"
"அட, ஆச்சரியமான்னா இருக்கு?"
"போன ஜென்மம்ங்ற நாடகத்திலேதான்!"

## கல்கத்தா தென்னிந்திய பஜனை சமாஜம்

'மார்கழி மாதம் தினமும் அதிகாலை பஜனை முடிந்து, 10–1–60 அன்று ராதாகல்யாண மஹோத்ஸவம் சம்பிரதாயபூர்வமாக கல்கத்தா தென்னிந்திய பஜனை சமாஜத்தாரால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று மாலை, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்களால் அனுப்பப்பட்ட ஸ்ரீ ராமஸ்வாமி சர்மா, ஸ்ரீ சேதுமாதவ சாஸ்திரி இவர்கள், ஸ்ரீ பட்டாபிராம சாஸ்திரிகள் தலைமையில், ஆசார்யாள் ஸ்ரீமுகத்தையும், சால்வை, விருதுகள் முதலியவற்றையும் சமர்ப்பித்து, ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரி, ஸ்ரீ ராமச்சந்திரன் ஆகிய இருவர்களையும் கல்கத்தாவில் ஸ்ரீ மடத்தின் முத்ராதிகாரிகளாக நியமித்து பிரகடனம் செய்யப்பட்டது. சமாஜத்தின் தலைவர் ஸ்ரீ எஸ். கே. ராமசேஷய்யர் சமாஜத்தின் சார்பில் தங்கள் நன்றியைத் தெரிவித்து, வந்திருந்த ஸ்ரீ மடத்து வித்வான்களுக்கு, சால்வைகளையும் ஸன்மானமாக வழங்கினார்.'

ஆபீஸிலிருந்து அப்போதுதான் வந்து சட்டையைக் கழற்றிக் கொண்டிருந்த என்னை பரக்க பரக்க ஓடிவந்த மணி 'மாமா, மாமா' என்றான் மூச்சிரைத்துக் கொண்டே... ஓடி வந்திருக்கிறான்.

'என்னடா... என்ன தலை போற அவசரம்...?' என்



# சாவின் சந்நிதியில்...

ரஜனி

றேன்.

'பக்கத்துத் தெருவிலே இரண்டு மாடி வீடு கட்டிண்டு இருக்காளே...?'

'ஆமாம்... அதுக்கென்னடா இப்போ...?' விஷயத்தை 'சட்'டென்று சொல்லாதது எனக்கு எரிச்சலாக வந்தது.

'இல்லே மாமா, அங்கே மேலே மாடி எல்லாம் கட்டறத்துக்காக கம்பு எல்லாம் வச்சு பலகாணி மாதிரி கட்டிருக்கா பாருங்கோ... அங்கிருந்து யாரோ மனுஷன் கழுத்துலே கயத்தைக் கட்டிண்டு தொங்கறான்...?'

'என்ன...என்னடா அது...?'

'நிசம்மா...மாமா...எல்லோரும் அவன் தூக்கு போட்டுண்டு செத்துப் போயிட்டான்னு சொல்றா மாமா... ஒரே கூட்டம்...'

'இன்னும் இருக்கா...?' என்று கேட்டேன் கழற்றிய சட்டையை திரும்பமாட்டிக்கொண்டே. இது வரை தற்கொலையைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேனே யொழிய, நேரில் பார்த்ததில்லை— ஆவல் துடித்தது...கிளம்பி விட்டேன்.

'இந்தாங்கோ, இந்த காப்பியைச் சாப்பிட்டுவிட்டுப் போங்களேன்...'

'இரு இரு' என்று அதைக் கவனிக்காமலே படியிறங்கியாயிற்று.

எனக்கு முன்னால் இருவர் வேகமாகப் போய்க்கொண்டிருந்தார்கள்...

'யாரோ ஒரு கிழவன் பக்கத்துத் தெருவிலே தூக்குப் போட்டுண்டு போயிட்டானாமே...?' ஒருவர்.

'புது வீடு கட்ட ஆரம்பிக்கறத்துக்கு முந்தியே இப்படியா...? நல்ல ஆகி வந்த வீடு...!' இரண்டாமவர் ஹாஸ்யம் பேசிக்கொண்டு, தானே அதை ரசித்துக் கொண்டும் சென்றார்.

இவர்களைக் கடந்து விரைந்தேன். பக்கத்துத் தெரு முனையில் ஒரே கூட்டம்...கூட்டத்தை விலக்கிக்கொண்டு சற்றே முன்னேறி நிமிர்ந்து பார்த்தேன்...

அப்பா...ஒரே பயங்கரம்...சொல்லக்கூட என்னமோபோல் இருக்கிறது...

கருத்த ஒரு உடல் காற்றில் கம்புப் பரணியிலிருந்து தொங்கிக்கொண்டிருந்தது. தலை தொங்கிவிட்டது. நாக்கு சற்றே வெளியில் தள்ளிவிட்டது. உடம்பு ஒரே எலும்புக்கூடு. நல்ல கிழம்...தலை பஞ்சாக நரைத்திருந்தது. உடலை மூட ஒரு கந்தைத் துணிகூட இல்லை...பிறந்த மேனிக்குத் தொங்கியது.

கண்களை ஒருமுறை இறுக மூடித் திறந்தேன். பக்கத்தில் ஒருவர் வந்தார். 'யார் ஸார்... தமிழனா?' என்றார் மெதுவாக.

திரும்பிப் பார்க்கப் பிடிக்காமலேயே 'தெரியல்லே ஸார்...' என்றேன். எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது எனக்கு. யாரோ ஒருவன் வாழமுடியாமல் இறந்து தொங்கிக்கொண்டிருக்கிறான். அவருக்கு அங்கும் இனக் கவலை.

'தமிழனாத்தான் ஸார் இருப்பான்...வேறே யாரு இப்படிச் சாவான்...உயிரைவிட மானந்தான் பெரிசுன்னு மதிச்சு சாகத் துணிஞ்சுட்டான்...' என்று பெருமிதத்தோடு ஒரு குரல் பதிலளித்தது.

சற்றே நகர்ந்து கும்பலின் வேறு பக்கமாக வந்தேன். எங்கிருந்தோ 'களுக்'கென்று சிரிக்கும் சப்தம் கேட்டது.

நாலைந்து பெண்கள்...என்ன ஹாஸ்யம் அவர்களுக்குத் தெரிந்ததென்று எனக்குப் புரியவில்லை...

வெறுப்பு முட்டிக்கொண்டு வந்தது எனக்கு, வேறுபுறமாக நகர்ந்து வந்தேன். யாரோ ஒருவர் இரைந்து பேசினார் அனுபவத்தினால் கரகரத்திருந்தது அவர் குரல். நிதானமாக 'ஸார், நான் சொல்றேன், இது தற்கொலையே இல்லே ஸார். தற்கொலையே இல்லே...'

மேலே என்ன சொல்லப் போகிறாரென்று சிலர் அவரையே பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

'யாரோ கொலை பண்ணிமாட்டிப்பிட்டான். அவ்வளவுதான்...இதுபோலே எவ்வளவு கேஸ் தெரியுமா...?'

'எப்படி ஸார் நீங்க அப்படிச் சொல்லமுடியும்...?' திருவாளர் அனுபவத்திற்கு திரு 'சந்தேகம்' எதிர்க்குரல் கொடுத்தது.

'எப்படியா... உங்களுக்கென்ன ஸார் தெரியும்...? அந்த உடல் அங்கு தொங்கற பாணியிலேருந்து தெரிஞ்சுடுமே...இப்படித்தான் கோவில்பட்டியிலே...'

கோவில்பட்டிக் கேஸை கேட்க மனமோ, பொறுமையோ இல்லாமல் விலகி, ஒதுப்புறமாக வந்து நின்றுகொண்டேன்.

'எல்லாம் 'பெண்கள் விஷயம்' தான்! என்ன சண்டையோ என்ன நடந்ததோ...? உலகத்துலே நூத்துக்கு பாதிக்கு மேலே கொலை, தற்கொலையெல்லாம் இதுனாலே தான்...! எதாவது இரண்டு பேருக்கு போட்டியா இருந்திருக்கும், தீர்த்து மாட்டிட்டுப் போயிட்டான்...' முதல் 'அனுபவம்' பேசியதை இந்த 'முதிர்ந்த அனுபவம்' ஊர்ஜிதம் செய்ததுமல்லாமல் அதற்குக் காரணம் கொடுத்தது...

'யாரையா அது...! நாக்கிலே நரம்பு, கிரம்பு இக்குதாய்யா...கிழவன் சோத்துக்கில்லாமே தூக்கு மாட்டிக்கினு தொங்கறான்...உன் பாட்டுலே பேசிக்கினே போறியே...' 'முதிர்ந்த அனுபவம்' பேச வாயெடுத்தார். ஆனால், மறுப்புக் குரலின் உருவத்தைக் கண்டவுடன் நின்றுவிட்டார்.

'அடாடா, இவனா...! நேத்திக்குக் காலம்பறகூட எங்க வீட்டுக்கு பிச்சையெடுக்க வந்தான்...! அடடா...தட்டு நிறைய சோறு போட்டு அனுப்பிச்சேன்...' 'தாராளம்' அனுதாபப்பட்டது.

'என்ன! என்ன சொன்னீர்கள், பிச்சை எடுத்தானா...? அப்போது பசி...பட்டினி...பட்டினிச் சாவு... டேய், கண்ணா, உடனே 'நித்ய கண்டம்' நிருபரை வரச்சொல்லி 'போன்' பண்ணு...' ஒரு வாலிபன் துடித்துப் பேசினான்.

'சிரமம் வேண்டாம். செய்தி செவியுற்று நானே வந்துவிட்டேன்...நன்றி...' நித்யகண்டம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முன்னேறியது. சரியான போஸ் கிடைக்க வேண்டாமா போட்டோவிற்கு...! அந்த உடல் நகராதே...? இவர் நகர்ந்து சரிசெய்து கொண்டார்.

'ஆமாம் ஸார்...! மாலை 4 மணி வரையிலும் ஒன்றுமே இருந்ததாகத் தெரியவில்லையே...எல்லோரும் நடமாடும் போதா இப்படி நடந்திருக்கும்...? போலீசுக்கு செய்தி தெரிவித்தார்களா யாராவது...?' பொறுப்பான ஒரு ஆசாமி என்னிடம் வந்து கேட்டார்.

'போலீஸா... ஆ ம ா ம் ... போலீஸ்...' என்று பேசிக்கொண்டே கொஞ்சம் கூட்டம் நகர ஆரம்பித்தது.

திடீரென்று யாரும் எதிர்பாராமல்' பெரியோர்களே, உங்களுடன் ஒருகணம் நான் பேசவேண்டும்...என்னை எல்லோரும் மன்னிக்கவேண்டும்...'

பேஷ்...பொதுக்கூட்டமே ஆரம்பித்துவிட்டதா என்ன...? பேசுவது யார்...!

அதோ ஒல்லியாக, உயரமாக வாராத கிராப்போடு நிற்கிறானே அந்த ஆசாமிதான்...! ஜிப்பா... ஒரு பைஜாமா...! இறந்த மனிதன் ஆத்மாவிற்கு 'சாந்தி' வேண்டுவதற்கு வந்திருக்கிறான் போலும், பொதுநல அனுதாபி!

மேலும் தொடர்ந்தான்:—



'அகில இந்திய சிற்பக் கண்காட்சியில் நடக்கும் போட்டியில் கலந்துகொள்வதற்காக, வேதனையால் மடிந்து தொங்கும் ஒரு கிழவன் உருவம் செய்து வைத்தேன். அது ஓரளவிற்காவது உண்மையாக தோற்றம் அளிக்கிறதா என்று பார்ப்பதற்காக...இப்படி...ஒரு புது யோசனையைக் கையாள நேர்ந்தது...' எல்லோரும் சிரமத்திற்கு என்னை மன்னிக்கவேண்டும்...'

கூட்டம் ஒரு நிமிஷத்திற்கு 'கப்'பென்று அமைதியில் நின்றது. நான்கூட அசந்துவிட்டேன்.

'கோவில்பட்டி கேஸ் அனுபவமும்', 'தட்டு நிறைய சோறு போட்ட தாராளமும்' தலை நிமிராமல் நடந்தார்கள்.



# மூடிக்கிடக்குதே உன் நெஞ்சம்

## 18

மாணிக்கத்தின் கார் கோயம்புத்தூரை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருந்தது. காரின் பின்சீட்டில் காகிதத்தில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த புத்தம் புதிய பூச்செடிகள் காரின் விரைவைத் தாங்காமல் மெல்ல அசைந்துகொண்டிருந்தன. மாணிக்கம் மனத்திற்குள் எண்ணிக் கொண்டான்: 'நல்ல வேளையாக தேவமணி நம்மைக் கவனிக்கவில்லை! அவன் நம்மைப் பார்த்துவிட்டிருந்தால், அந்தச் சூழ்நிலையில் அவன் எப்படி நடந்துகொண்டிருப்பானோ?'

தனியாகக் காரில் உட்கார்ந்து காரை ஓட்டிச் செல்லும்போது சிந்தனையைத் தடை செய்ய முடியவில்லை. 'ஒருவேளை தேவமணியை நேருக்கு நேர் கண்டு அவன் துரத்திச் சென்ற பெண் எவள் என்பதைக் கேட்டுவிட்டிருந்தால் எல்லாம் தெளிவாகிவிட்டிருக்குமோ?' என்று எண்ணியது அவன் மனம். உண்மை எதுவும் தெரியாமல் ஊகம் செய்துகொண்டிருப்பானேன் என்று சிந்தனை செய்தபடி காரை விட்டான்!

கோவையை அடைந்ததும், முதலில் பங்களாவுக்குச் செல்லுவதா, மருத்துவ விடுதிக்குச் செல்லுவதா என்ற பிரச்னை எழுந்தது. எதற்கும் பங்களாவுக்குச் சென்று அப்பாவை அழைத்துச் செல்லலாம் என்று காரைப் பங்களாவுக்கே விட்டான்!

மரகத மாளிகையின் முன் அவனுடைய கெடிலாக் கார் நின்றபோது, பணிப் பெண் குழலி, 'ஐயா வந்துவிட்டார்!' என்று கத்திக்கொண்டே ஓடி

## புரட்சி எழுத்தாளர் தமிழ்வாணன்

வந்து, காரின் பின்சீட்டில் இருந்த பூச்செடிகளை அள்ளிச் சென்றாள்.

'குழலி, அந்தப் பூச்செடிகளை இப்படிக் கொடு! நானே அம்மாவிடம் அவைகளைக் கொடுத்து, அவைகளின் பெயர்களையும் சொல்ல வேண்டும்! ஹாலந்து நாட்டிலிருந்து வந்த புதிய பூச்செடிகள் இவை!' என்று அவன் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, அவள், 'அம்மாவிடம் பூச்செடிகளை நான் கொடுத்துவிடுகிறேன்! நீங்கள் வந்து பெயர்களைச் சொல்லுங்கள்!' என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டாள் அங்கு நிற்காமல்!

மாணிக்கம் கூடத்தை அடைந்தபோது, இன்பநாயகம் அவன் வரவை எதிர்பார்த்து உட்கார்ந்துகொண்டிருந்தார். 'மாணிக்கம், உன் பயணம் ஏதாவது பயன் தந்ததா?' என்றார் அவர்.

'ஓரளவு பயன் தந்தது என்று தான் சொல்ல வேண்டும். தேவமணி என்பவனைக் குன்னூரில் பார்த்தேன். ஆனால், அவனிடம் உலகையாவின் கார் இல்லை. அவன் ஒரு பெண்ணைத் துரத்திச் சென்றான். அந்தப் பெண் உலகையாவின் பெண்களில் ஒருத்தியாக இருப்பாளோ என்ற ஐயம் எனக்கு எழுந்தது. ஆனால், உறுதியாக இப்போது ஒன்றும் சொல்லுவதற்கில்லை!' என்றான் மாணிக்கம்.

'எது எப்படியானாலும் உடனே நாம் மருத்துவ விடுதிக்குப் போயாக வேண்டும்!'

'பரபரப்பு ஏன்?'

'உலகையா நிலைகொள்ளாமல் தவிக்கிறாராம். நர்சு இரண்டு மூன்று முறைகள் தொலைபேசியில் சொல்லிவிட்டாள்! இன்னும் சிறிது நேரத்தில் நாம் மருத்துவ விடுதிக்குப் போகாவிட்டால், உலகையாவே எழுந்து இங்கே ஓடிவந்துவிடுவார் போலிருக்கிறது!'

'அப்படியானால் வாருங்கள் போகலாம்' என்று உடனே புறப்பட்டான் மாணிக்கம். அதே காரில் இன்பநாயகமும் புறப்பட்டார்.

மருத்துவ விடுதியின் முன் காரை நிறுத்திவிட்டு, இன்பநாயகமும் மாணிக்கமும் அவர் அறைக்குள் சென்றபோது—

உலகையா படுக்கையிலிருந்து எழுந்து ஓடிவந்து கதவைச் சாத்தித் தாழிட்டார்!

'அவர் வெறிகொண்டுவிட்டாரா என்ன? ஏன் அவர் இப்படி பரபரப்படைந்திருக்கிறார்!' என்று எண்ணி வியந்தான் மாணிக்கம்.

உலகையா அவர்களை உட்காரும்படி சொல்லிவிட்டு, 'மாணிக்கம், நீ வருவாய் என்று பார்த்துப் பார்த்து என் கண்கள் சோர்ந்துவிட்டன! உன்னையும் காணோம், இன்பநாயகத்தையும் காணோம்!' என்றார்.

இன்பநாயகம் மெல்லச் சொன்னார்: 'மாணிக்கம் உங்கள் பெண்களைக் கண்டுபிடிக்க இரவு பகலாகச் சுற்றிக்கொண்டிருக்கிறான். உண்மை கொஞ்சம் தெரிந்ததும் இருவரும் வரலாம் என்று நினைத்தோம்!'

'பூமகளையும் கட்டழகியையும் கண்டுபிடித்து விடலாம் என்ற என் நம்பிக்கை உறுதியாகிக்கொண்டே வருகிறது. துன்பம் கொள்ளாதீர்கள்!' என்றான் மாணிக்கம்.

'மாணிக்கம், பூமகளையும் கட்டழகியையும் நான் பார்த்தேன்! நேரில் பார்த்தேன்!' என்றார் உலகையா.

'கனவு கண்டுகொண்டிருந்தாரா உலகையா' என்று எண்ணினான் மாணிக்கம் 'எங்கே பார்த்தீர்கள்? இங்கே வந்தார்களா?' என்று கேட்டான்.

'இங்கே அவர்கள் வரவில்லை! நானே அவர்கள் இருக்கும் இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்!'

'எங்கே சென்றீர்கள்? எவர் அழைத்துச் சென்றார்கள்?' என்று கேட்டான் மாணிக்கம்.

'என்னுடைய காரோட்டி திருமலை என் காரைக் கொண்டுவந்து எவருக்கும் தெரியாமல் என்னை அழைத்துச் சென்றான். ஆனால் அவன் எங்கே என்னை அழைத்துச் சென்றான் என்பதுதான் எனக்கும் தெரியவில்லை. அவன் என்னை அழைத்துச் சென்ற இடத்தில், பழைய பங்களா ஒன்றில் என் பெண்கள் இருவரும் இருந்தார்கள்!'

மாணிக்கமும் இன்பநாயகமும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்! அவர்கள் பார்த்துக்கொண்ட பார்வையிலிருந்து அவர்கள் இருவரும் உலகையா சொன்னதில் ஒரு சொல்லைக்கூட நம்பவில்லை என்பது பளிச்சென்று தெரிந்தது!

'மாணிக்கம், நான் சொல்லுவதை நீ நம்பவில்லையா? நான் சொல்லுவது அனைத்தும் நூற்றுக்கு நூறு உண்மை! என் கண்மணிகள் இருவரையும் சிறையிலிருந்து தப்பி வந்துவிட்ட கைதி ஒருவன் கடத்திச் சென்று ஒரு பங்களாவில் அடைத்து வைத்திருக்கிறான்! அவன் பெயர் வயிரவேல்! ஆயுள் கைதி அவன். கொலைக் குற்றத்துக்காக நான் நீதிபதியாக இருந்தபோது, அவனுக்குத் தண்டனை வழங்கினேன். அவன் உண்மையாகக் கொலை செய்யவில்லை என்றும்,



நீதி தவறி நடந்துகொண்ட என்னை வஞ்சம் தீர்த்துக்கொள்ளவே என் பெண்கள் இருவரையும் சிறைப்படுத்தியிருப்பதாகவும் சொன்னான். என்னுடைய காரோட்டி திருமலை அவனுக்குக் கையாளாக இருக்கிறான்.'

'நம்பவே முடியவில்லையே! நீங்கள் ஏதோ கற்பனை செய்துகொண்டிருக்கிறீர்கள் அல்லது கனவு கண்டிருக்கிறீர்கள் என்று எண்ணத் தோன்றுகிறது!' என்றான் மாணிக்கம்.

'எனக்குந்தான் நடந்ததெல்லாம் கனவைப்போல் தோன்றுகிறது. அந்தக் கைதியால் என் பெண்களுக்கு என்ன கேடு விளையுமோ என்று எனக்கு அச்சமாக இருக்கிறது! நான் மனம் புழுங்கிச் சாக வேண்டும் என்பதற்காகவே பூமகளையும் கட்டழகியையும் கடத்தி வந்ததாக அவன் சொன்னதும், நான் திடுக்கிட்டு மயக்கம் கொண்டேன்! விழித்துப் பார்த்ததும் இங்கே கட்டிலில் படுத்துக் கிடந்தேன்! மயக்கமுற்ற என்னை காரோட்டி திருமலை இங்கே கொண்டு வந்து போட்டுவிட்டுப் போயிருக்கிறான்!'

மாணிக்கத்துக்கு இன்னும் ஐயம் தீரவில்லை! அவன் எதையுமே நம்ப முடியாதவனைப்போல் உலகையாவை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்!

உலகையா தொடர்ந்து சொன்னார்: 'நான் ஒருவனைச் சுட்டுக் கொன்றுவிட்டதாகச் சொல்லிக்கொண்டிருந்தேன் அல்லவா? நான் சுட்டது வயிரவேலைத்தான்! அவன்மீது துப்பாக்கிக் குண்டு பட்டிருக்கிறதே தவிர, உயிர் தப்பிவிட்டான்! அந்த மனிதனைக் கொலை செய்துவிட்டதாக எண்ணி வீணாக நான் அஞ்சிக்கொண்டிருந்தேன்!'

'காரோட்டி உங்களை அழைத்துச் சென்றபோது மருத்துவ விடுதியில் எவரும் கவனிக்கவில்லையா?' என்று கேட்டான் மாணிக்கம்.

'இல்லை! எல்லாருமே உறங்கிக்கொண்டிருந்த நேரம் அது!'

'பூமகளும் கட்டழகியும் இருக்கும் இடத்துக்குக் காரோட்டி திருமலை, உங்களை அழைத்துச் சென்றதாகச் சொல்லுகிறீர்கள். சிறையிலிருந்து தப்பி வந்த கைதி ஒருவன் உங்கள் பெண்கள் இருவரையும் கடத்திச் சென்று தாய்ப் பசுவிடமிருந்து கன்றுகளைப் பிரிப்பதைப்போல், உங்களிடமிருந்து பிரித்து வைத்திருப்பதாகச் சொல்லுகிறீர்கள்! நீங்கள் சொல்லுவது முழுவதும் உண்மை என்றே வைத்துக்கொள்ளுவோம்! உங்களுக்குத் துன்பம் தர வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக இந்த மாதிரி இழிவுச் செயலில் இறங்கியிருக்கும் கைதி, குற்றமற்ற உங்கள் பெண்களுக்குக் கேடு எதுவும் விளைவிக்க மாட்டான்! போலீசில் சொல்லி எப்படியும் அவன் மறைந்திருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விடலாம்! அஞ்சாதீர்கள்!' என்றான் மாணிக்கம்.

'போலீசுக்குப் போனால் என்னுடைய பெண்களை மீண்டும் நான் உயிருடன் பார்க்க முடியாது! இதுபற்றி அவனே சொல்லிவிட்டான்!'

'தற்போதைக்கு நாம் போலீசாரிடம் போக வேண்டாம். அந்தப் பெண்கள் இருக்குமிடத்தை நானே கண்டுபிடிக்க முயலுகிறேன். அவர்களைக் கண்டு

பிடித்ததும் அவர்களுக்கு எந்த விதக் கேடும் விளைவிக்காத முறையில் கைதியைப் பிடித்துப் போலீசில் ஒப்படைக்க வழி செய்வோம்!'

'அதைத்தான் நானும் சொல்லுகிறேன்!'

'உங்களைக் காரோட்டி அழைத்துச் சென்றபோது வழியில் எங்குமே நீங்கள் எட்டிப் பார்க்கவில்லையா?'

'பார்த்தேன். எந்த இடத்தில் எந்தத் திக்கில் கார் செல்லுகிறது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை!'

'திரும்பி வரும்போது?'

'திரும்பி எப்படி நான் இங்கே வந்தேன் என்றே தெரியவில்லை!

ஒருகால் உலகையா சொல்லுவது உண்மையாக இருக்குமோ என்று எண்ணத் தொடங்கினான்







மாணிக்கம்! கனவுக்கும் நனவுக்கும் வேறுபாடு தெரியாமலா இவ்வளவு தெளிவாகப் பதில் கூறுகிறார்?

'நீங்கள் சொல்லுவது உண்மையானால், கார் மலைப் பாதையில் சென்றிருக்கும் என்று எண்ணுகிறேன்!'

'உறுதியாகச் சொல்ல இயலவில்லை! ஏன் அப்படி நினைக்கிறாய்?'

'பூமகளையும் கட்டழகியையும் குன்னூரில் கொண்டுபோய் அந்தக் கைதி மறைத்து வைத்திருப்பானோ என்று நான் எண்ணுகிறேன்! உங்களுடைய காரைக் குன்னூரில் கண்டதாக எனக்குச் செய்தி கிடைத்தது!'

'அப்படியா? நீ சொல்லுவது உண்மையானால், காரோட்டி என்னை அழைத்துச் சென்றது குன்னூராகத்தான்

இருக்கவேண்டும். இப்போதே நாம் குன்னூருக்குச் செல்லு வோம்!'

'நீங்கள் வேண்டாம்! நான்மட் டும் போகிறேன்!'

'ஏன் என்னை வர வேண்டாம் என்று தடுக்கிருய்?'

'உங்கள் உடல்நிலை இன்னும் நலன் பெறவில்லை!'

'பூமகளும் கட்டழகியும் மீண் டும் என்னிடம் திரும்பி வரும் வரையில் என் உடல் குணமடை யாது!'

'நீங்கள் சொல்லுவதை ஏற் றுக்கொள்கிறேன். மற்ருெரு காரணமும் அதற்கு உண்டு!'

'என்ன அது?'

'வயிரவேல் என்னும் அந்த வைர மனம் படைத்த கைதி. திட்டத்துடன் இந்தப் பணியில் இறங்கியிருக்கிருன்! அவனுக்கு உதவியாகப் பலர் இருக்கிருர் கள்!'

'சொல்லு மாணிக்கம்.'

'வயிரவேலின் ஆட்களில் ஒரு வன், உங்களுடைய செயல்களைக் கவனித்துக்கொண்டிருப்பான். ஆகையால், நீங்கள் அமைதி யுடன் மருத்துவ விடுதியில் இருப்பதுதான் மேல். உங்களைப் பார்க்க நானும் அப்பாவும் வரு வதுபோல், அடிக்கடி வருகி ருேம். வரும்போதெல்லாம் ஏதா வது செய்தி உண்டா என்று நீங் கள் அறிந்துகொள்ளுங்கள்!'

உலகையா சிறிது நேரம் சிந் தித்தார். பிறகு—

'மாணிக்கம், நீ சொல்லுவதும் உண்மைதான்! நீ என் பெண்கள் இருவரையும் பார்த்ததில்லையோ!' என்ருர்.

'இனிமேல் பார்க்காமல் இருப் பேனு?' என்ருன் மாணிக்கம்.

உலகையா தலையணையின் அடியிலிருந்து பணப் பையை யெடுத்தார். அதிலிருந்து அவர் ஒரு புகைப் படத்தை எடுத்து மாணிக்கத்திடம் நீட்டிருர். மாணிக்கம் அதை வாங்கிப் பார்த்தான்.

அதில்—

பருவமடைந்து பண்பே உரு வான பெண்ணுக மென்சிரிப் புடன் பூமகளும், குறும்பே உரு வான பெண்ணுகப் பற்கள் தெரி யும்படி சிரித்துக்கொண்டு, இரட்டைப் பின்னல் மார்பகத் தில் துவளக் கட்டழகியும் காட்சித் தந்தார்கள்!

'இரட்டைப் பின்னல் போட் டிருப்பவள்தான் இளையவள் கட் டழகி. மூத்தவளின் பெயர் பூமகள்' என்று அறிமுகப்படுத்தி ஞர் உலகையா.

அந்தப் படத்தை உற்றுப் பார்த்தான் மாணிக்கம். இரட் டைப் பின்னல் போட்ட அழ கியை அன்று காலையில்தான், சில மணி நேரத்துக்குமுன் அவன் பார்த்திருக்கிருன்!

படத்தை அவனே வைத்துக் கொண்டான். உடனே எழுந்து கொண்டு, 'அஞ்சாதீர்கள், எப் படியும் உங்கள் பெண்கள் இரு வரையும் நான் காப்பாற்றிக் கொண்டு வந்துவிடுகிறேன்!' என்ருன்.

இன்பநாயகமும் எழுந்து கொண்டார்.

'மீண்டும் எப்போது வரு கிறீர்கள்?' என்று கேட்டார் உலகையா.

'நாளை வருகிறேன்' என்று மாணிக்கம் சொல்லிவிட்டுத் தன் தந்தையுடன் பரபரப்புக் கொண்டு வெளியேறினுன்.



அவர்கள் சென்றதும் நீண்ட நேரம்வரையில் உட்கார்ந்த படியே சிந்தனையுள் ஆழ்ந்து விட்டார் உலகையா. அவர் சிந்தனைக்கு ஒரு முடிவு ஏற்படுவ தாகக் காணும்!

## 19

எங்கும் அமைதி நிலவியிருந்த அந்த இருட்டு வேளையில்—வெளியே கார் வரும் ஓசை கேட்டது.

காரின் ஓசையைக் கேட்ட துமே, அரைத் தூக்கத்திலிருந்த உலகையா எழுந்துகொள்ள முயன்றார்.

தளர்ச்சி அவர் கண்களை அழுத்தியது. அவரால் எழுந்திருக்க இயலவில்லை!

காரின் ஓசை அடங்கிவிட்டது. ஆனால்—

சற்று நேரத்துக்குமுன் கேட்ட ஓசை அவருடைய கார் எழுப்பும் ஓசையைப்போலவே இருந்தது!

'மீண்டும் திருமலை வந்திருக்கிறானா? மறுபடியும் உலகையாவை அழைத்துச் செல்ல வந்திருக்கிறானா?'

அச்சத்தின் காரணமாக அவர் விழித்துக்கொண்டார். எந்த வித ஓசையையும் காணுமே!

அவர் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். மணி அப்போது—

இரண்டு!

அவர் எழுந்து உட்கார்ந்து உற்றுக் கேட்டார். எந்தவிதமான ஓசையும் இல்லை!

மீண்டும் அவர் படுத்துக் கொண்டார். நேரம் ஓடிக்கொண்டிருந்தது. மறுபடியும் எந்தவிதமான ஓசையும் கேட்கவில்லை!

விடியும் நேரத்தில் அவர் எழுந்து பார்த்தார். சன்னல் பக்கமாக மெல்லிய வெளிச்சம் பரவி வந்தது. அவர் எழுந்து சன்னலின் பக்கம் போய்ப் பார்த்தார். மருத்துவ விடுதியின் பக்கத்தில், கார்க் கூடம் ஒன்று இருந்தது. டாக்டரின் காரை நிறுத்தி வைக்க அந்தக் கார்க் கூடத்தைக் கட்டிவிட்டிருந்தார் டாக்டர். பகலில்தான் அக் கார்க் கூடத்தில் டாக்டரின் கார் நிற்கும். இரவில் அக் கார்க் கூடம் காலியாக இருக்கும். இப்போது—

கார்க் கூடத்தில் ஏதோ ஒரு கார் நின்றிருந்தது. இலேசாக ஒரு கதவு திறந்திருந்தது. உள்ளே இருந்த கார்—

உலகையா வியப்புடன் வெளியே ஓடினார்! கார்க் கூடத்தின் அருகில் சென்றதும், கதவுகளைச் சரியாகத் திறந்து பார்த்தார்! உள்ளே நின்றிருந்தது—

அவருடைய பிளிமத் கார் தான்!

உலகையா விரைவாக நடந்து சென்று பார்த்தார். காரின் கண்ணாடிகள் ஏற்றப்பட்டிருந்தன. முன் சீட்டில், ஸ்டீரிங்கைப் பிடித்தபடி காரோட்டி திருமலை அப்படியே உறங்கிக்கொண்டிருந்தான்!

உலகையா முன்பக்கக் கதவைத் திறந்து, திருமலை என்று அதட்டியபடி அவனை உலுப்பினார்! அவன்—

தொப்பென்று வெளியே பிணமாக வந்து விழுந்தான்! அவனுடைய உடலில் எந்தவிதமான காயமும் இல்லை! ஆனால்—

அவன் உயிரற்ற பிணமாகக் கீழே விழுந்து அப்படியே துவண்டு கிடந்தான்!

(தொடரும்)



# மருந்து ஏதுக்கடீ?

கல்யாணம்




அன்றுதான் 'மெடிகல் எக்ஸிபிஷன்' ஆரம்பமானகையால் கூட்டம் சற்று அதிகமாகவே இருந்தது. பார்க்கும் இடங்களிலெல்லாம் பலவண்ணக் காகிதத்தினாலாகிய தோரணங்களும் வண்ண விளக்குகளும், ஆரோக்கியமாக வாழ்வதற்குத் தேவையான ஆலோசனைகளும் எழுதித் தொங்கவிடப்பட்ட போர்டுகளும் காட்சியளித்தன. தூயவெண்மை நிறத்திலே உடை உடுத்திய டாக்டர்களும், நர்சுகளும், மருத்துவக் கல்லூரி மாணவ மாணவிகளும் அங்கும் இங்குமாகச் சென்றுகொண்டிருந்த காட்சி கண்களுக்கு விருந்தாக இருந்தது. தனித்தனியே பிரித்துவிடப்பட்டிருந்த ஒவ்வொரு 'அறை'யாக பார்த்துக்கொண்டே 'க்யூ'வில் முன்னேறிக்கொண்டிருந்தேன். முதல் அறையின் கண் சம்பந்தமான வியாதிகள்—அதற்கு தேவையான மருந்துகள்—வாராமல் தடுக்கும் முறைகள், அடுத்த அறையிலே 'பல்' சம்பந்தமான விவரங்கள்—இப்படியாக ஒவ்வொரு அறையிலும் பலப [illegible] வியாதிகள் சம்பந்தமான வி[illegible]ரங்கள் பற்றியும் அவைகள் வா[illegible]மல் தடுக்கும் முறைகள், தேவை[illegible]யான மருந்துகள்பற்றியும் சி[illegible] கல்லூரி மாணவர்கள் விளக்கி[illegible] கூறிக்கொண்டிருந்தனர். சில

இடங்களிலே மருத்துவக் கல்லூரி மாணவிகளும் சிலர் இருந்தனர்.

எனக்கு முன்னால் நாலைந்து கல்லூரி மாணவர்கள் வரிசையில் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொரு அறையிலும் பலவிதமான சந்தேகங்களைக் கேட்டு மருத்துவக் கல்லூரி மாணவர்களைத் துளைத்தெடுத்தனர். அவர்கள் கேலிக்கும் கிண்டலுக்கும் இரையான மாணவிகள் பலர்.

'மெடர்னிடி' ப்ளாக்கைத் தாண்டிக் கடைசி அறையான 'தொற்று நோய்கள்' அறையை அடைந்தேன்.

ஒவ்வொரு படமாகப் பார்த்துக் கொண்டே வந்த என்னுடைய கண்கள் எதேச்சையாக எதிர் மூலையைக் கவனிக்கவிட்டு அங்கேயே 'நிலைகுத்தி' நின்றுவிட்டது.

அங்கே!

ஸ்னோவின் நிறத்துக்கு சவால் விடும் தூயவெண்மை நிறத்திலே, மெல்லிய வாயில் புடவை அணிந்த ஒரு இளம் மருத்துவக் கல்லூரி மாணவி நின்றுகொண்டு, அருகிலிருந்த சிலருக்கு ஏதோ விளக்கம் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

ஒரு வேளை டாக்டராகவும் இருக்கலாம் என எண்ணத் தோன்றியது அவள் புடவையின் மேல் அணிந்திருந்த கோட்டும், அதன்மேல் அவள் கழுத்தைக் 'கொடி'போல் சுற்றிக்கொண்டிருந்த ஸ்டெதாஸ்கோப்பும். மாநிறம்தான் இருக்கும். குழந்தைபோன்ற சின்னஞ்சிறிய உருண்டையான முகம். ஆனால், அதில் இளமை வழிந்துகொண்டிருந்தது. பொடிப்பொடியாக ஆங்காங்கே அப்பொழுதுதான் கிளம்பியிருந்த இரண்டொரு 'பருக்கள்' அவள் முகத்துக்கு தனியாகச் சோபை தந்தன. பார்ப்பவரை ஒரே நொடியில் ஈர்த்துவிடும் இரு விழிகள். அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன். எதேச்சையாகத் திரும்பிய அவளுடைய பார்வையும் என்னுடைய பார்வையும் கலந்தபோது அப்பப்பா! அந்த விழிகளின் கூர்மை தாங்காமல் பலியாகிவிட்டேன்.

'கப்' மெதுவாக நகர்ந்து அவள் இருக்குமிடத்தை நெருங்கியது. எப்படியும் அவளிடம் பேசிவிட வேண்டுமென்ற ஆவல் என் உள்ளத்தே எழுந்தது. ஆனால்? எதைப் பேசுவது? எப்படிப் பேசுவது? என்? ஏதேனும் சந்தேகம் கேட்டால்?...ம்... சந்தேகங்களே தோன்றவில்லையே? எல்லாவற்றையும்தான் விளக்கமாக எழுதித் தொங்கவிட்டிருக்கிறார்களே.

மின்னல் வேகத்திலே ஒரு சந்தேகம் மூளையில் உற்பத்தியாகியது. அதையே அவளிடம் கேட்க வேண்டியதுதான்.

அவளை நெருங்கிவிட்டேன்.

இதயம் 'படபட'வென்று அடித்துக்கொண்டது.

'க்ஷயரோகத்திற்குப் புதிதாக ஒரு மருந்து கண்டுபிடித்திருக்கிறார்களாமே?' எப்படியோ சமாளித்துக்கொண்டு கேட்டே விட்டேன்.

'ஆமாம்...'ஸ்டெப்டோமைஸின்' என்பது அதன் பெயர்' பதிலளித்தாள்...குரலா அது...பிடிலிலே தாழ்ந்த சுருதியில் இழைவது போலிருந்தது.



'அது பழைய மருந்துதானே?' என்றேன் பேச்சைத் துண்டிக்க விடாமல். உண்மையிலேயே மருந்து வகையில் அ, ஆ கூடத் தெரியாது எனக்கு.

'ஆமாம்...பழைய மருந்தையே தான் அதிக வீரியம் உள்ளதாக மாற்றியிருக்கிறார்கள். பெயரும் அதேதான்' என்றாள்.

பின்னாலிருந்த கூட்டத்தினால் தள்ளப்பட்டதால் 'தேங்ஸ்' என்ற வார்த்தையை அவளுக்கு அனுப்பிவிட்டு நகர வேண்டியதாகிவிட்டது. அன்று வீடு திரும்புவதற்குமுன் அந்தப் பகுதியையே நாலைந்து முறைகளாவது சுற்றியிருப்பேன்.

### இரண்டாவது நாள்

மற்ற பகுதிகளையெல்லாம் கண்ணெடுத்தும் பாராமல் நேராக 'தொற்று நோய்கள்' பகுதிக்குள் நுழைந்தேன். முதல் நாள் இருந்த அதே 'வேல்விழியாள்'தான் இன்றும் இருந்தாள்.

கூட்டம் அதிகமில்லாததால் நேராக அவளிருக்குமிடத்தை அடைந்தேன்.

'...ம்...க்ஷயரோகத்திற்குப் புதிதாக...'

'ஸ்டெப்டோமைஸின் என்ற பழைய மருந்தையே அதிக வீரியமுள்ளதாக மாற்றி, அதே பெயரையே வைத்திருக்கிறார்கள்' என்று இடையிலேயே வெட்டி பதிலளித்தாள்...ஆனால், குரலில் கிண்டல் கலந்திருந்தது. அவள் விழிகள் கேலி செய்தன. அவள் புரிந்துகொண்டிருக்க வேண்டும்.

'மூக்குடை' பட்டுத் திரும்பியதான் மற்றொரு பகுதியிலிருந்த 'அன்னபூரணி' கேண்டீனை அடைந்தேன். அங்கும் 'ஒரே' கூட்டம். எப்படியோ முண்டியடித்துக் கூட்டத்திலே புகுந்து பையிலிருந்த ஒரணாவைக் கௌண்டரிலே 'டிக்கெட்டாக' மாற்றி, அதையே 'டீ'யாக மாற்றிக் கொண்டு காலியான ஒரு இடத்தை அடைந்து 'ரசித்து' சாப்பிட ஆரம்பித்தேன்.

எதேச்சையாக நிமிர்ந்து நோக்கிய நான் திடுக்கிட்டேன்... அந்த 'வேல் விழி' என்னை நோக்கி வந்துகொண்டிருந்தாள்...இதயம் 'பக்பக்' என அடித்துக்கொண்டது. உடலெல்லாம் நடுங்கியது. கையிலிருந்த 'கப் அன் சாஸர்' ஒன்றோடு ஒன்று மோதி ஒலி செய்தன.

'மிஸ்டர்...' என்றாள்.

'ம்...' என்றேன்.




"மற்று மிகவும் அழகான ஒரு பெண்ணோடு போனாயே அது யார்?"

"நான் சொல்கிறேன், அதை என் மனைவியிடம் மட்டும் சொல்லிவிடாதே!!"

"சரி!"

"அது என் மனைவிதான்!"

'ஒரு சிறு உதவி செய்ய முடியுமா?' என்ருள்.

'என்ன... உதவியா...? என்ன வேண்டும்...?' என்றேன், நடுக்கம் ஓரளவுக்கு நின்றவனாய்.

'கூட்டம் அதிகமாய் இருக்கிறது. இரண்டு 'டீ' டிக்கெட்டுகள் வாங்கித் தருவீர்களா?' என்று கூறிக்கொண்டே, என்முன் ஒரு இரண்டணு நாணயத்தை வைத்தாள். கையிலிருந்த 'டீ'யைக் கீழே வைத்துவிட்டுக் கூட்டத்திலே புகுந்தேன்.

'காதலியர் கடைக்கண் காட்டிவிட்டால் விண்ணையும் சாடுவோம்' என்று படித்திருக்கிறேன், ஏதோ ஒரு புத்தகத்தில்...இந்த உதவிகூட செய்யக்கூடாதா என்ன?—என்று யோசித்துக்கொண்டே இரண்டு டிக்கெட்டுகளோடு வெற்றி வீரனுக கூட்டத்திலிருந்து வெளியே வந்தேன். அதை வாங்கிக்கொண்ட அவள் பதிலேதும் சொல்லாமல் 'டீ' வாங்கச் சென்றுவிட்டாள்.

'சீ...நன்றியில்லாதவள்... ஒரு 'தேங்ஸ்' கூடவா சொல்லக்கூடாது என்று மெதுவாக முணங்கினேன்.

'இந்தாருங்கள்...' என்று ஒரு கோப்பை டீயை என்னிடம் நீட்டினுள்.

'டீயா? ஹி...ஹி...எனக்கெதற்கு...? இப்பொழுதானே சாப்பிட்டேன்?' தடுமாறினேன் நான்.

'பரவாயில்லை...சாப்பிடுங்கள்... அந்த கூட்டத்தில் புகுந்து வெளி வந்திருக்கிறீர்கள் அல்லவா? மிகவும் களைப்பாக இருக்கும்' என்ருள்.

'டீ' சாப்பிட்டு முடிந்தவுடன், 'நேரமாகிவிட்டது; நான் வருகிறேன். தேங்ஸ்' என்று கூறிக்கொண்டே, தன் அறையை நோக்கி நடந்தாள்.

'புதுமையான பெண்' என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டே வீட்டை நோக்கி நடந்தேன்.

### மூன்ருவது நாள்

சரியாக ஐந்து மணிக்குத்தான் பார்வையாளர்கள் உள்ளே அனுமதிக்கப்படுவார்கள். இவர்கள் ஒவ்வொரு பகுதியாக பார்த்துக் கொண்டு வருவதற்கு எப்படியும் அரைமணி நேரமாவது ஆகும். இதை மனதில்கொண்ட நான், நேராகத் தொற்றுநோய் பகுதியில் நுழைந்தேன்.

படங்களையெல்லாம் பார்ப்பது போல் பாவனை செய்துகொண்டே 'அவளை' நெருங்கினேன்.

என்ன ஆச்சரியம்! என்னைக் கண்டதும் அவள் மரியாதையாக எழுந்து நின்றுகொண்டாள்.

'ஒரு சிறு சந்தேகம்...என்று இழுத்தேன். பின் எப்படித்தான் பேச்சை ஆரம்பிப்பது.

'எனக்குக்கூட ஒரு சந்தேகம்...'

'என்ன அது...கையில் வைத்திருக்கிற புத்தகத்திலா?' 'இல்லை... இல்லை...புத்தகத்தில் சந்தேகம் ஏதுமில்லை...அப்படியிருந்தாலும் உங்களிடம் விளக்கம் கேட்க எனக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை.'

'பின் என்னதான் சந்தேகம்...?'

'ஒங்க க்வாலிபிகேஷன்...?'

'எம். எஸ்ஸி. ஆமாம், இந்த சந்தேகம் ஏன்?'

'இல்லை...ஞாபகமறதி உள்ளவர்கள் எப்படி பாஸ் செய்தார்கள்?'

'ஞாபக மறதியா...? எனக்கா?'



'ஆம்...பின் என்ன? மூன்று நாட்களாக ஒரு மருந்தின் பெயரையே ஞாபகத்தில் வைத்துக் கொள்ள முடியவில்லையே!'

'சரியாய்ப் போச்சு! நான்தான் முதல் நாள் கேட்ட கேள்வியையே மறக்காமல் கேட்கிறேன். எதையும் ... 'யாரை'யும் ஒருதரம் பார்த்துவிட்டேன் என்றால் எந்நாளும் மறக்கவே மாட்டேன்.

'வேறுகேள்விகள் உதயமாக வேண்டிய 'மூளை' என்னும் உறுப்பு உங்களுக்கு இல்லையா?'

'மூளையா... இல்லையா...? இருக்கு... கேள்விகளை உற்பத்தி செய்து அனுப்பிக்கொண்டே இருக்கிறது. நீங்கள் பதில் சொல்வீர்களா என்பதுதான் சந்தேகம்.'

'கேளுங்கள்; தெரிந்தால் சொல்கிறேன்.'

'உங்கள் பெயர்?' வில்லிலிருந்து விடுபடும் அம்புபோல என் இதயதலத்திலிருந்து பறந்து வந்தது.

'உமா.'

'அழகான பெயர்.'

'பெயரை ரசிக்கச் சொல்லவில்லையே.'

'ரசிக்கக்கூடாது என்றும் சொல்லவில்லையே...வாய் நிறைய சுவைத்துக் கூப்பிட வேண்டும் என்றுதான் அழகான பெயரைப் பொறுக்கி வைக்கிருர்கள்.'



'சரி... வேறு கேள்விகள் ஏதே னும்...'

'எங்கு வேலை பார்க்கிறீர்கள்?'

'எதற்கு?'

'எதற்கா... தவறாக நினைக்கமாட்டீர் கள்... என் தங்கைக்கு வாரம் இரு முறையாவது 'காய்ச்சல்' வரும்... அம்மாவுக்கு 'பர்மெனன்ட்' ஆஸ்த்மா. என் தம்பி மாதம் ஒரு முறையாவது கையையாவது காலையாவது ஒடித்துக்கொண்டு வருவான்... எனக்கு... இருமல் அடிக்கடி ஏதாவது வரும்; எங்க குடும்பத்தையே உங்க டிஸ்பென் சரிக்கு மாற்றிட்டா, பணம் வேறு யாருக்கும் போகா தல்லவா?'

'இப்பொழுதுதான் கடைசி ஆண்டு படித்துக்கொண்டிருக் கிறேன்; படித்து முடித்ததும் விலாசம் தருகிறேன். உங்களைப் போன்றவர் ஆதரவுதானே எனக் கும் தேவை?'

'உங்களுக்கு... மணமாகி விட்டதா?' மென்று தின்று வார்த்தைகளை முழுங்கிக் கொண்டே கேட்டேன். முகத் தைத் திருப்பிக்கொண்டு, தலை யைக் குனிந்துகொண்டு விட் டாள்... அவள் முகம் 'கோவைப் பழமாக' சிவந்துவிட்டது. 'திரு மணம்' என்ற பேச்சைக் கேட் டாலே ஏன் பெண்களின் முகம் இப்படிச் சிவந்துவிடுகிறது' என்று யோசித்துக்கொண்டே வெளியே நடந்தேன்.

நான்காவது நாள்

வழக்கம்போல் ஐந்தாவது மணிக்கு உள்ளே நுழைந்த முத லாவது ஆள் நான்தான். உமா... ஆம்... அந்த 'வேல் விழி' தனி யாகவே இருந்தாள்.

என்னைக் கண்டதும் 'வாருங் கள்' என்று வரவேற்புரை கூறிக் கொண்டே எழுந்து நின்றாள். என்ன பேசுவது... ஒன்றும் தோன்றவில்லை எனக்கு... கையி லிருந்த 'பேண்ட்' பாக்கெட்டில் வாடிப் பிசைந்தவாறு 'சந்தோசம்...' என்று இருந்தேன்.

'இருங்கள்... உங்களுக்காக மருந் தை எழுதிய வைத்திருக் கிறேன்... இதோ இருங்கள். இதை வெளியே கொண்டு போய் படி யுங்கள்; கூட்டம் வந்துவிட்டது' என்று கூறிக்கொண்டே ஒரு மடித்த காகிதத்தை என்னிடம் கொடுத்தாள்.

வெளியே வந்து காகிதத்தைப் பிரித்தேன்.

நண்பரே,

'உங்களுக்குத் தேவை ஸ்டெப் டோமைசினே, வேறு மருந்தோ அல்ல. கண்டபடி பெண்கள் பின்னே சுற்றுவதை நிறுத்தி விட்டு, உங்கள் பெற்றோரிடம் சொல்லி மணமுடித்துக் கொள் ளுங்கள். எனக்கும் திருமணப் பேச்சுகள் நடந்துகொண்டிருக் கின்றன.'

உமா.

எனக்கு தலை சுற்றியது. அங்கி ருந்த 'பெஞ்சி'யில் உட்கார்ந்து கொண்டுவிட்டேன். சீ...சீ... இவ ளுக்கு... இவளைப் பார்ப்பதற்காக காபிக்கும், டிபனுக்கும் பஸ்ஸு க்குமாகப் பத்து ரூபாய் வரை செலவழித்தேன்... என்ன மடத் தனம்! பத்து ரூபாய் இருந்தால் ஒரு 'பேண்ட்' எடுக்கலாமே! அட கடவுளே! என் காதல் இப்படியா கருகிவிட வேண்டும்?' என் மனம் ஏதேதோ எண்ணமிட்டது.



கைகள் காகிதத்தை கசக் கின... அட... என்ன இது பின் புறம் ஏதோ எழுத்துக்கள் தெரி யவே பிரித்துப் பார்த்தேன்.

புத்தி கலங்கியிருக்கும் நண் பரே!

இந்தப்பக்கத்தை பார்த்ததற்காக நன்றி. உங்களுக்குத் தேவையான மருந்து இருக்குமிடம், புரொப ஸர் நாராயணன், 87, புது காலனி. —என்றிருந்தது.

'என்ன! புரொபஸர் நாரா யணன் பெண்ணா உமா?' விழுந்த டித்துக்கொண்டு நாராயணன் வீட்டை நோக்கி ஓடினேன்.

கடைசி நாள்

'உமா.'

'அடேடே! இன்றும் வந்து விட்டீர்களா? நேற்றுதானே எழு திக் கொடுத்தேன். கண்ட பெண் கள் பின்னால் சுற்றுதீர்கள் என்று.'

'...ம்...பொய் சொல்லாதே உமா. அப்படியா எழுதியிருந்தீர்கள்...? எனக்குத் தேவையான மருந்து... உமா... இருக்குமிடத்தையல்லவா எழுதியிருந்தீர்கள்.'

'மருந்து கிடைத்ததா?' ஆவ லால் உந்தப்பட்ட நிலையிலே கேட்டாள்.

'கிடைக்காம போகுமா... என்ன மருந்துக்குரியவர்? யார் தெரி யுமோ?'

'யாரு?'

'எங்கப்பாவின் மாமாவின் பிள்ளையின் மைத்துனர்.'

'அடே அப்பா...' ஆவென்று வாயைப் பிளந்தாள்.

'அதுமட்டுமா. எனக்கு பிஸிக்ஸ் புரொபஸரும்கூட.'

'அதுதான் தெரியுமே!'

'என்ன தெரியுமா? எப்படி?'

'நீங்க காலேஜிலே வாசிக்கும் போது பிஸிக்ஸ் கிளப் செக்ரெட் டரியா இருந்திருக்கிங்க இல்லையா?'

'ஆமா! அதெல்லாம் உனக்கெப் படித் தெரியும்?'

'நீங்களும் அப்பாவும் தனியா எடுத்துண்ட போட்டோ, எங்க வீட்டுக் கூடத்திலே தொங்குது. அப்பாவும் அடிக்கடி சொல்வார் 'பிரிலியண்ட் ஸ்டூடண்ட்' என்று.'

'அப்படி என்றால் என்னை தெரி ந்துகொண்டுதானே தெரியாத வள்போல பழகியிருக்கிறாய்?'

'என்ன...தெரியாதவளா இருந் தால் இப்படிக் கேட்ட கேள்வி க்கெல்லாம் பதில் சொல்லி, டீயெல் லாம் வாங்கிக் கொடுப்பேனா என்ன?'

'சரி அப்படின்னா...மத்த விஷய மெல்லாம் பேசி முடிவு செய்யச் சொல்ல வேண்டியதுதானே?'

'அது என்ன மத்த விஷயங் களெல்லாம்?'

'அதெல்லாம் இங்கே சொல்ல முடியாது. நாளை மாலை ஆறு மணிக்கு இந்த திருவாளர் ரமணி அவர்கள், அவரைப் பெற்ற வர்களுடன் குமாரி உமாதேவி அவர்களைப் பார்க்க நியூ காலனி க்கு விஜயம் செய்ய இருக்கிறார். அங்கே பேசிக்கொள்ளலாம்...ம்... வரட்டுமா...டாடா...என்று கூறிக் கொண்டே, வீட்டை நோக்கி நடந்தேன்.

# மாதர் மகா சபை



குங்குமம்

## 17

பார்த்தாயோல்லியோ போகிற டிக்கை?' என்று சொல்லிக்கொண்டே வந்து உட்கார்ந்தாள் கமலா பாட்டி.

'சினிமாவுக்குப் போகிற ஜோர்!' என்று பதில் சொல்லிக்கொண்டே அவளுடன் வந்த சாந்தாவும் உட்கார்ந்தாள்.

'இந்த உலகம் இருக்கிறதே அதனுடைய ஆச்சரியத்தைச் சொல்லியே முடியாது' என்றாள் கமலாபாட்டி.

'யாரைப்பற்றிச் சொல்கிறீர்கள்?' என்றாள் காமுப்பாட்டி.

'வரும்பொழுது வழியில் சுதாவைச் சந்தித்தோம். அவளைப்பற்றித்தான் பேசிக்கொண்டு வருகிறோம்' என்றாள் கமலாபாட்டி.

'எந்த சுதா?' என்றாள் காமுப்பாட்டி.

'சப் ஜட்ஜ் சந்தானத்தின் பெண் சுதா இல்லையோ?' என்று கமலாபாட்டி சொல்கையில், 'ஓகோ, அந்த ராங்கிக்காரி சுதாவா? கோடி வீட்டு சுதாவைப்பற்றித்தான் சொல்கிறீர்களோ என்று பார்த்தேன்' என்றாள் காமுப்பாட்டி.

'சேச்சே! அது உண்டு, அதன் வேலையுண்டு என்று கிடக்கிறது பாவம், அதைப்பற்றி என்ன சொல்ல இருக்கிறது? எல்லாம் அந்த ராங்கிக்காரி சுதாதான்' என்றாள் கமலாபாட்டி.

'ஆமாம். நேற்றுதான் கேள்விப்பட்டேன். அவள் இப்பொழுது தன்னுடைய அகமுடையானுடன் இருக்கிறாளாமே!' என்றாள் காமுப்பாட்டி.

'அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அகமுடையானுடன் சினிமாவுக்குப் போய்க்கொண்டிருக்கிறாள். சாதாரணமாகவா போகிறார்கள்? இப்பொழுது தான் கல்யாணமான புதுத் தம்பதிகள் போவார்களே, அது கெட்டது போங்கள், அவ்வளவு 'டீக்காக'ப் போகிறார்கள்' என்றாள் கமலா பாட்டி.

'ம்! இந்தத் தெய்வம் அடிக்கிற 'கூத்தை' என்னவென்று சொல்வது? அவளுக்கு இருந்த ஒரு அகங்காரம், மறுபடி தன் கணவனுடன் சேர்ந்து அவள் குடித்தனம் செய்வாள் என்று யாராவது எதிர்பார்த்திருப்பார்களா? இந்த ஞானோதயம் முதலிலேயே ஏற்பட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?' என்றாள் காமுப்பாட்டி.

,அப்படி ஏற்பட்டுவிட்டால் அப்புறம் உலகத்தில் என்ன இருக்கிறது? 'சப்' பென்று போய்விடாதா? நேற்று திருப்பாவை உபந்யாஸத்திற்குப் போயிருந்தேன். அப்பொழுது உபந்யாஸகர் கிளைக்கதை ஒன்று சொன்னார். அதைக் கேட்டவுடன் இந்த ராங்கிக்காரி சுதாவின் ஞாபகம்தான் வந்தது எனக்கு' என்றாள் கமலாபாட்டி.

'ஆமாம். யார் அந்த சுதா? அவளைப் பற்றி என்ன விசேஷம்?' என்றாள் கோகிலா.

'பரவாயில்லையே! அந்த ராங்கிக்காரியைப்பற்றித் தெரியாதவர்களும் இருக்கிறார்கள் போலிருக்கிறது!' என்று சொல்லிவிட்டுச் சுதாவைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தாள் கமலா பாட்டி. சப் ஜட்ஜ் சந்தானத்துக்கு சுதா ஒரே பெண். நல்ல அந்தஸ்தில் ரொம்பவும் செல்லமாக வளர்ந்துவிட்டவள். சுபாவத்திலேயே கொஞ்சம் அகங்காரம் உள்ளவ்ள். அத்துடன் பிடிவாத குணமும் உள்ளவள். கல்யாண காலம் வந்தது. சுதாவுக்கு ஏழெட்டு வயதிலேயே அவளுடைய தாயார் இறந்துவிட்டாள். ஒரே பெண்ணானதால், சுதாவுடன் அவளுடைய அகமுடையானும் தன் வீட்டிலேயே இருந்துவிடக்கூடிய ஓர் வரனைத் தேடினார் சப் ஜட்ஜ். இதற்கு, சம அந்தஸ்துள்ள வரனைத் தேடினால், தனது எண்ணத்திற்குச் சரிப்பட்டு வராது என்று கொஞ்சம் சுமாரான ஸ்திதியும், நல்ல படிப்பும் உள்ள ஓர் வரனைத் தேடினார் சப் ஜட்ஜ். இந்த வகையில் ரங்கராஜன் என்ற வரன் பிடித்திருந்தது அவருக்கு. இதைத் தேர்ந்தெடுத்து சுதாவின் கல்யாணத்தை முடித்து வைத்தார்.

'ரங்கராஜனும் தனது பெற்றோர்களுக்கு அவன் ஒரே பிள்ளை. அத்துடன் தனது அந்தஸ்து, செல்வாக்கு காரணமாக ரங்கராஜனை, சுதா மதிப்பிலேயே வைக்கவில்லை. அவள் ஒரு சர்வாதிகாரியாகவே வாழ்ந்து வந்தாள். இந்தப் போக்கு ரங்கராஜனுக்குப் பிடிக்கவில்லை. படித்த பிள்ளையாயிற்றே. தன்மானம் என்று ஒன்று இருக்குமல்லவா? அத்துடன் வயது வந்த பெற்றோர்களைத் தனிமையில் விட்டுவிட்டு, மாமனார் வீட்டிலேயே இருந்துகொண்டிருக்க ரங்கராஜனுடைய மனது இடந்தரவில்லை. கொஞ்சகாலம் புக்ககத்தில் வந்து இருக்கும்படி ரங்கராஜன் சுதாவைக் கூப்பிட்டான். சுதா மறுத்துவிட்டாள். இது பொருத்தமில்லாத விவாகமாக இருக்கிறதே, எப்படியிருக்கப்போகிறதோ என்று நாங்கள் பயந்ததுண்டு. நாங்கள் பயந்த மாதிரியே ஆகிவிட்டது. ரங்கராஜன் மாமனார் வீட்டினின்றும் வெளியேறித் தனது பெற்றோர்களிடம் வந்துவிட்டான். சுமாரான உத்தியோகம்தான். இருந்தாலும் அவனுடைய 'குடும்ப காலக்ஷேபத்துக்கு' அது போதுமானதாக இருந்தது.

'சொத்தும், செல்வாக்கும் இருக்கிற அகங்காரத்தில், சுதா தனது பிறந்தகத்திலேயே இருந்துவிட்டாள். எல்லாம் நாம் நினைக்கிறபடி ஆகிறதா? சப் ஜட்ஜ் சந்தானம் 'ரேஸ் பித்து' உள்ளவர். 'பித்து' என்றால் சாதாரண பித்து இல்லை. அளவுகடந்த 'பித்து' பிடித்தவர். அதன் காரணமாக

சொத்தை இழந்தார். உத்தியோகத்தை இழந்தார். அவமானம் தாங்கமுடியாமல் ஒருநாள் விஷத்தை அருந்தி உயிரை மாய்த்துக்கொண்டார். ஆனால், சீதாவின் பிடிவாதத்தால் சிறிதும் மாறுதல் ஏற்படவில்லை. ரங்கராஜனும் இவளைப்பற்றி மனதாறக்கூடச் சிந்திக்கவில்லை.

'இந்த ஸ்திதியிலேயே ஐந்தாறு வருஷ காலம் கழிந்தது. ஆனால் தகப்பனார், கடைசியாகக் கட்டி முடித்த ஒரு பங்களாவும், பதினையாயிரம் ரூபாய் பெறுமான நகைகளும் சீதாவுக்கு இருந்தன' என்று கமலாபாட்டி சொல்லி வருகையில், 'பின்னே என்ன? அதான் பழைய 'திமிரேலேயே' இருக்கிறாள். பங்களாவை வாடகைக்கு விட்டுவிட்டு, அதிலேயே ஒரு 'போர்ஷனில்' அவளும் இருந்துகொண்டிருந்தால், ஒரே ஜீவன்தானே! ஒருத்தர் தயவின்றி காலத்தைக் கழித்துவிடுகிறாள். அது தவிர பதினையாயிரம் ரூபாய்க்கு நகை




"சார் எங்கிட்ட இருக்கிற கொசு மருந்திலே ஒரு பொட்டலம் வாங்கி உங்க வீட்டில் போட்டீங்கன்னு கொசுவெல்லாம் பத்து வீடு தள்ளியிருக்கிற வீட்டிற்கு போய்விடும்..."

"அப்போ ரெண்டு பொட்டலம் கொடுங்க; எங்க மாமியார் வீடு இருபது வீடில்ல தள்ளி இருக்கு......"



இருக்கவே இருக்கிறது' என்றாள் கோகிலா.

'அந்த எண்ணத்தில்தான் சீதாவும் இருந்தாள். ஆனால், நாம் எண்ணுகிறபடியே எல்லாம் நிறைவேறிவிடுகிறதா?' என்று சொல்லிவிட்டு கமலாபாட்டி மேலும் சொன்னாள்:

'அந்த பங்களாமீது அவ்வளவு கடன் இருக்கும் என்று சீதாவுக்குத் தெரியாது. ஏதோ சிறிது கடன் உண்டு என்று எண்ணியிருந்தாள். முன் அடமானம், பின் அடமானம், அது இது என்று புற்றிலிருந்து ஈசல் கிளம்புகிற மாதிரி கடன்காரர்கள், முற்றுகை இட ஆரம்பித்துவிட்டார்கள். சரி, நகைகளையும், வெள்ளிப் பாத்திரங்களையும் விற்று ஓரளவு கடன்காரர்களுக்கு வாய்ப்பூட்டு போட்டு வைப்பது என்று முடிவு செய்தாள் சீதா. ஆனால், அங்கேகூட விதி குறுக்கே வந்து நின்றுவிட்டது.

'ஒருநாள் நகைகளை விற்பனை செய்வதற்கு, பூர்வாங்கமாக அவற்றின் மதிப்பை அறிந்துவர, தனக்குத் தெரிந்த ஓர் அடகுக் கடையை நோக்கிச் சென்றாளாம் சீதா. என்ன காரணமோ தெரியவில்லை. திடீரென்று எதிர்பாராமல் வழியில் மயக்கமுற்று ரோட்டின் நடை பாதையில் விழுந்துவிட்டாளாம். மயக்கம் தெளிந்து கண்ணைத் திறந்து பார்க்கும்போதுதான் ஆஸ்பத்திரியில் இருப்பது தெரிய வந்ததாம் அவளுக்கு. ஒரு நகைகூட இல்லையாம். அவள் மயக்கம் போட்டு விழுந்திருந்தபோது அவற்றை யாரோ 'தட்டிக்கொண்டு' போய்விட்டார்கள். இப்பொழுது தன் கணவனைத் தவிர, அவளுக்கு வேண்டியவர்கள் என்று சொல்லிக்கொள்ளக்கூடியவர்கள் யாரும் இல்லை. கொஞ்சம் நெருங்கிய பந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளக்கூடியவர்கள் ஓரிருவர் பம்பாயிலும் டில்லியிலும் இருக்கிறார்கள். இங்கு தனக்கு ஒருவாய் அன்புடன் கஞ்சி கொடுப்பதற்கு, அவளது பங்களாவில் குடித்தனம் இருப்பவர்களைத் தவிர, வேறு யாரும் கிடையாதாம். இந்தச் சமயத்தில் தனது கணவனை நினைத்தாளாம் அவள்' என்று கமலாபாட்டி சொல்கையில் 'இருக்குமோல்லியோ பாவம்!' என்றாள் காமுப்பாட்டி.

'மேலே சொல்லுங்கள்' என்றாள் கோகிலா.

கமலா பாட்டி மேலும் சொன்னாள்:

'இதற்குள் இந்தத் தகவலை யாரோ ரங்கராஜனிடம் எட்டவைத்து, இந்த சமயத்தில் போய் பார்க்காமலிருப்பது நன்றாக இராது' என்று சொன்னார்களாம். அவனுடைய பெற்றோர்களும் சீதாவைப் பார்த்துவிட்டு வரும்படி ரங்கராஜனிடம் சொன்னார்களாம். ரங்கராஜன் ஆஸ்பத்திரிக்குச் சென்றானும், அவனைப் பார்த்ததுதான் தாமதம். ஓவென்று அழுதுவிட்டாளாம் சீதா. மயக்கம் போட்டுக் கீழே விழுந்த வேகத்தில் மண்டையில் காயம்பட்டுவிட்டதாம். அதற்காக மருந்து போட்டு கட்டு கட்டியிருந்தார்களாம். அவளுடைய நிலைமையைப் பார்த்ததும் ரங்கராஜனுக்கும் கண்களில் நீர் தத்தளித்துக்கொண்டிருந்ததாம்.

'யாரோ நல்லவர்கள் பாவம், பிரிந்த இவ்விருவரையும் மீண்டும் கூட்டி வைப்பதற்கு, இந்த சூழ்நிலையை உபயோகப்படுத்திக்கொண்டார்கள். இரண்டு பேருக்கும் இதத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவ்வளவுதான். உலகில் என்னதான் சொத்து சுதந்திரமிருந்தாலும், ஒரு பெண்ணுக்குத் தனது கணவனைத் தவிர வேறு கண் கண்ட தெய்வம் கிடையாது என்ற ஞானோதயம் ஏற்பட்டு, ஆஸ்பத்திரியிலிருந்து 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்டதும் நேராகத் தனது கணவனுடன் தனது புக்ககத்திற்குச் சென்றாளாம் சீதா. எப்படியிருக்கிறது வேடிக்கை?' என்றாள் கமலாபாட்டி.

'நகைகள் விஷயம் என்ன ஆயிற்று அப்புறம்?' என்றாள் காமுப்பாட்டி.

'ஆவதென்ன, அரோஹராதான்' என்றாள் கமலாபாட்டி.

'பாவம்!' என்றாள் காமுப்பாட்டி.

'பாவமாவது! அதுதான் அவளுக்குப் புண்ணியமாக இருந்து, அவளுக்கு



நல்லதைச் செய்திருக்கிறது' என்றாள் கமலாபாட்டி சிரித்துக்கொண்டே.

'உங்கள் வேதாந்த விஷயங்களைப் பற்றி அப்புறம் பேசிக்கொள்ளலாம். திருப்பாவை உபந்யாஸத்தில் கேட்டகிளைக் கதையைச் சொல்லுங்கள் முதலில்' என்றாள் கோகிலா.

கமலாபாட்டி சொன்னாள்:

'பழைய கதைதான். உஞ்சவிருத்தி செய்து வந்த ஒருவர் உஞ்சவிருத்தி பாத்திரத்துடன் ஓர் வீட்டு வாசலில் போய் நின்றாராம். அப்பொழுது அந்த வீட்டுக்கு உரியவர் உரலில் நெல்லைப் போட்டு, அதைக் குத்திக்கொண்டிருந்தாராம். உஞ்சவிருத்தி செய்பவரைப் பார்த்ததும் அவர் ஒன்றும் கிடையாது. போய்ச் சேரும்' என்றாராம். 'உரலில் அரிசி இருக்கும்பொழுது ஒன்றுமில்லை என்று சொல்கிறீர்களே' என்றாராம் உஞ்சவிருத்திக்காரர். 'வீண் பேச்செல்லாம் பேசாதேயும் போகப் போகிறீரா இல்லையா?' என்று கையிலிருந்த உலக்கையை உஞ்சவிருத்திக்காரர் பக்கம் நீட்டினாராம் வீட்டுக்காரர். உடனே உஞ்சவிருத்திக்காரர் அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டாராம்.

'உஞ்சவிருத்திக்காரர், மற்ற வீடுகளுக்கும் சென்று விட்டுக் கடைசியில் அன்று கிடைத்த அரிசியைக்கொண்டு வீட்டில் அதிதிகளுடன் போஜனம் செய்தாராம். சில நாட்களுக்கெல்லாம், உஞ்சவிருத்திக்காரரை நோக்கி உலக்

கையை நீட்டி விரட்டிய பேர்வழி இறந்துவிட்டானாம். உடனே யமகிங்கரர்களுக்கு இவனை எங்கே அழைத்துச் செல்வது என்ற சந்தேகம் வந்து விட்டதாம். யமனிடம் சென்று கேட்டார்களாம். 'ஆமாம்! ஆமாம்! யோசிக்க வேண்டிய விஷயம்தான். எதற்கும் அவனையே கேட்டுவிட்டால் போகிறது' என்று சொல்லிவிட்டு 'அப்பனே! நீ ஏராளமான பாபத்தைச் செய்தவன். இருந்தாலும் அவ்வளவு பாபத்துக்கிடையே கொஞ்சம் புண்ணியத்தையும் செய்திருக்கிறாய்?' என்று யமன் சொல்கையில், இந்தப் பேர்வழிக்கு ஒரே ஆச்சரியமாய் இருந்ததாம். 'நாம் பாபம் தவிர நமது ஜன்மத்தில் புண்ணியம் என்பதை மனதாற்கூட நினைத்தது கிடையாதே. அப்படியிருக்க நான் கொஞ்சம் புண்ணியம் செய்திருப்பதாக யமன் சொல்கிறானே! வேறு யாரோ என்று நினைத்துக்கொண்டு சொல்கிறானோ?' என்ற சந்தேகம் வந்தவனாய் 'நானா புண்ணியம் செய்திருக்கிறேன்?' என்று யமனை நோக்கிக் கேட்டானாம். 'ஆமாம். நீதான் செய்திருக்கிறாய், அன்றொருநாள் நீ நெல் குத்திக்கொண்டிருக்கையில், உஞ்சவிருத்திக்காரரிடம் உலக்கையை நீட்டினாயல்லவா? அப்பொழுது உலக்கையில் ஒட்டிக்கொண்டிருந்த நாலைந்து அரிசி உஞ்சவிருத்திக்காரரின் பாத்திரத்திற்குள் போய் விழுந்து, பாத்திரத்தில் இருந்த மற்ற அரிசியுடன் கலந்துவிட்டது. அன்று அவர் இட்ட போஜனத்தை உண்ட அதிதிகளின் வயிற்றில் உன்னுடைய அரிசியும் சென்றிருக்கிறது. இந்த வகையில் நீ கொஞ்சம் புண்ணியத்தைச் செய்தவனாகிவிட்டாய். ஆகையால் இந்த புண்ணியத்திற்கு உண்டான பலனையும் நீ அனுபவிக்கவேண்டியவனாக இருக்கிறாய். நீ முதலில் புண்ணியத்திற்கான சிறிது பலனை அனுபவித்துவிட்டு, பிறகு பாபத்திற்கான பலனை அனுபவிக்கிறாயா? அல்லது பாபத்திற்கான பலனை முதலில் அனுபவித்துவிட்டுப் பிறகு புண்ணியத்திற்கான பலனை அனுபவிக்கிறாயா?' என்று யமன் கேட்டானாம். முதலில் புண்ணியத்திற்கான பலனை அனுபவிப்பதாக அந்தப்பேர்வழி சொன்னானாம்.

'இந்தப் புண்ணியத்திற்கு, சுவர்க்கத்தையும், அங்குள்ள பகவானின் திருவடிகளையும் காட்டுவதுதான் பலனாம். அதன்படி இவனை சுவர்க்கத்திற்கு அழைத்துச் சென்று, அங்குள்ள பகவான் அருகில் சென்று, அவரது திருவடிகளை இவனுக்குக் காட்டினார்களாம் யமகிங்கரர்கள். அப்பொழுது, புண்ணியவசத்தால் திடீரென்று ஞானோதயம் வரப்பெற்றவனாய், அந்தப் பேர்வழி, பகவானின் திருவடிகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டுவிட்டானாம். தன்னை இனி நரகத்திற்குப் போவதினின்றும் காத்தருளுமாறு பகவானை வேண்டிக்கொண்டானாம். சரணாகதி என்று தன்னை வந்து அடைந்தவர்களைக் கைவிடாது காத்தருளும் பகவான், இவனது முறையீட்டுக்குச் செவிசாய்த்து இவன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்து வைத்தாராம். யமகிங்கரர்கள் வெறும் கையுடன் திரும்பினார்களாம்' என்றாள் கமலாபாட்டி.

'ஆமாம்! இந்தக் கதையை உபந்யாஸகர் சொன்னவுடன் உங்களுக்கு சீதாவின் ஞாபகம் வருவானேன்?' என்றாள் கோகிலா.

'இந்தப் பேர்வழிக்கு, அவனையறியாது, உலக்கையிலிருந்து சிதறி விழுந்த அரிசி, அவன் பாபத்தினின்றும் மீள்வதற்கு உதவியாக இருந்தது. அதேபோல, சீதாவுக்கு வந்த மயக்கத்தில், அவளையறியாது பறிபோன நகைகள், அவள் தனது கணவனை அடைந்து அவனுடன் உலகத்தாரைப் போல் 'குடியும் குடித்தனமுமாக' இருப்பதற்கு உதவியாக இருந்ததல்லவா?' என்றாள் கமலாபாட்டி.

'பிரமாதம்! பிரமாதம்!' என்று எல்லோரும் ஏககாலத்தில் கரகோஷம் செய்தார்கள்.

'சுத்த மோசம்.'

'என்ன ராஜி என்னையா வைகிறாய்.'

'உங்களை ஏன் வைகிறேன். கீழ் போர்ஷனிலே இருக்கிறாரே அவர் மனிதர் தானா?'

'ஏன் திடீர் என்று உனக்கு சந்தேகம்.'

'ஒழிவில்லாமல் என்ன, மனுஷன் ஆபீஸ் விட்டதும் ஆறு மணிக்கே வீட்டுக்கு வந்தாகுகிறது. புறா கூண்டில் அடைவது மாதிரி காமிரா உள்ளே பூந்துக்கிறார்.'

'ஆபீஸ் வேலைகளைப் பார்க்க இருக்கும்.'

'சேச்சே ஒரு நாளைக்கு மனைவியை அழைச்சிண்டு டிராமாவுக்குப் போறார், ஸினிமாவுக்குப் போறார்னு உண்டா. கிடையாது. மனுஷரா இவர்.'



# உள் உணர்வு

"ஸ்ரீவத்ஸன்"

'சேச்சே மனிதரா அவர். மனிதரே இல்லை.'

'என்ன செய்தார் அவர்.'

'கீழ் போர்ஷனுக்கு குடிவந்து ஒரு மாதம் ஆகிறது. மனுஷன் ஒரு நாளைக்காவது தன் மனைவியை ஜாலியா, பீச், பார்க், சினிமா என அழைத்துப் போனது உண்டா. சேச்சே.'

'அவருக்கு ஓய்வு இருந்திருக்காது. அதனால் என்ன?'

'அப்படிச் சொல்லாதே ராஜி. சினிமாவுக்கும் டிராமாவுக்கும் கைகோர்த்துக்கொண்டு மனைவியை அழைச்சிண்டு போவதனால்தான் பிரியம் என்றில்லை. சில பேருக்கு அது பிடிக்கும். சிலபேர் கூச்சப்படுவா அவ்வளவுதான். அதனாலே பிரியம் இல்லேன்னு சொல்லிவிட முடியாது.'

'கட்சி பேசாதீங்கோ. அப்போ மனைவியோடே ஜாலியா கைகோர்த்துக்கொண்டு போகிறவா.

ளுக்கு எல்லாம் பிரியமில்லைன்னு அர்த்தமா?'

'அதில்லே. பிரியத்தை காண்பித்துக்கொள்ள கடற்கரையும் சினிமா கொட்டகையும், பார்க்கையும்விட வீடுதான் சிறந்த இடம் என்று நினைக்கிறவாளும் இருக்கா இல்லியா?'

'எதுக்கும் கோணக்கட்சி பேசறதுதான் உங்க சுபாவம். சரிசரி, நாம் இன்னிக்கு இங்லீஷ் பிக்சருக்குப் போகணுங்கிறது நினைப்பில்லையா?'

'காலையிலேயே ப்யூனைவிட்டு டிக்கெட் வாங்கி வைத்துவிட்டேனே.'

'நான் ரெடி.'

'நானும் ரெடி.'

அவர்கள் சினிமாவுக்குப் புறப்பட்டார்கள்.

கீழ் போர்ஷனில் இருக்கும் மாலாவும் ராகவனும் இதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

'தினம் தினம் எங்கேதான் போவாளோ' மாலா சொன்னாள்.

'சினிமா, பீச், பார்க் இப்படித்தான். போகட்டும் பாவம். கொஞ்சநாள் ஆச்சுன்னா வரவர குறைஞ்சு போய்விடும். குழந்தைன்னு ஒண்ணு பிறந்ததுன்னா.'

'ஏன் நீ பீச்சுக்கும் பார்க்குக்கும் உன் கணவனுடன் போகவில்லை என்று தினமும் என்னைக் கேட்கிறாள் அந்த ராஜி.'

'நீ என்ன பதில் சொன்னே.'







'வீட்டு வேலை தான் சரியாய் இருக்கேன்னு சொன்னேன்.'

'அதுக்கு என்ன பதில் சொன்னா?'

'அறுபது நாழியுமா வீட்டு வேலைன்னு கேட்டாள்.'

'இன்னும் என்ன சொன்னா?'

'உங்களுக்கு என்னிடம் பிரியமே இல்லையாம் அதனால்தான் ஓரிடத்துக்கும் அழைத்துப் போவதில்லையாம்.'

'ரொம்ப கண்டா இவ.'

'சொல்லிட்டுப் போகட்டுமே. நமக்கென்ன கோவிலுக்குப் போய் சனீஸ்வர பகவானுக்கு இந்த எண்ணெயை விட்டுவிட்டு வாங்கோ.'

மேல் மாடியில்.

ராஜியும் அவள் கணவன் குமாரும் வசித்து வந்தார்கள். குமாருக்கு ஒரு பாங்கியில் ஏஜண்ட் உத்தியோகம். ராஜி இண்டர் வரை படித்தவள். பெரிய மனிதர் வீட்டுப் பெண். நாகரீகத்தின் உச்சாணிக்கிளையில் ஏறிவிட்டவள். கல்யாணமாகி நான்கு வருடங்களாகியும் குழந்தை இல்லை.

தினமும் அவர்கள் நாள் தவறாமல் சினிமா, பீச், பார்க் என்று போய் வருவார்கள். எங்கு கிளம்பிப் போனாலும் ஜோடியாகவே போவார்கள். அவர்களைப்போல ஆதர்ச தம்பதிகள் இல்லை என்று அந்த தெருவே அதிசயப்பட்டது.

அந்த வீட்டின் கீழ் போர்ஷனில்தான் ஒரு மாதம் முன்பு மாலாவும் ராகவனும் குடி வந்தார்கள்.

ராகவனுக்கு ஒரு கம்பெனியில் வேலை. அவனும் மாலாவும் ரொம்பவும் கோப்பியமாக குடும்பம் நடத்தி வந்தார்கள். ஆடம்பரமே கிடையாது.

ஆபீஸ் விட்டதும் ராகவன் நேரிட வீட்டிற்கு வந்து காமிரா உள்ளில் ஏதாவது புஸ்தகம் புரட்டிக்கொண்டிருப்பான். அவனையும் அவன் மனைவியையும் சேர்த்து தெருவில் யாருமே பார்த்ததில்லை. ஊரிலிருந்து வந்த அன்றுகூட அவள் ரிக்ஷாவில் வந்து இறங்கினாள். அவன் பிறகு நடந்து வந்தான்.

மாடியில் இருந்த ராஜிக்கு அவர்கள் ஒருநாள்கூட சேர்ந்து வெளியே கிளம்பாதது ஆச்சரியமாக இருந்தது. மாலாவும் தன்னை ஒத்தவளாக இருந்தும் கணவனுடன் ஜாலியாக கிளம்பாததிலிருந்து அவள் கணவனுக்கு அவளிடம் பிரியமில்லை என்று முடிவு கட்டிவிட்டாள்.

ஒரு வாரம் சென்றது.

'ராஜிக்கண்ணு' என்று கூப்பிட்டபடியே வந்த குமார் கட்டிலில் படுத்திருந்த மனைவியைப் பார்த்தான்.

லேசாக அவளுக்கு ஜுரம்.

வரவர ஜுரம் அதிகமாகி டாக்டர் வந்து பார்க்கலானார். பத்து நாட்களாகியது.

டாக்டர் ஊசி போட்டதில் ஜுரம் குறைந்தது. அந்த சமயம் தான் குமாருககுப் பதவி உயர்வு கொடுத்து பம்பாய்க்கு மாற்றினார்கள்.

'ராஜீ, பதவி உயர்வை இப்போது விட்டுவிட்டால் பிறகு மூன்று வருடத்துக்குக் கிடைக்காது. நான் போகட்டுமா' என்றான்.

'எனக்கு உடம்பு இப்படி இருக்கே, அவன் தன்னை தனியாக விட்டுப் போகிறானே' என்றிருந்தது அவளுக்கு.

'ஜுரம்தான் குறைந்துவிட்டதே. டாக்டரிடம் சொல்லியிருக்கேன். ஆபீஸ் ப்யூனிடம் சொல்லியிருக்கேன். வந்து கவனித்துக்கொள்வான். ஒரே மாதம்' என்றான்.

அவள் 'சரி' என்றாள், அரை மனதுடன்.

அவன் புறப்பட்டுப் போய் ஒரு வாரமாகிவிட்டது.



ஒருநாள் இரவு மாடியில் தூக்கம் பிடிக்காமல் வராண்டாவில் உலவிக்கொண்டிருந்தாள்.

கீழே அழுகுரல் கேட்டது. யாரோ விம்மி அழுதுகொண்டிருந்தார்கள்.

மெதுவாக மாடிப்படியில் இறங்கி வந்து கவனித்தாள்.

கீழே இருந்த மாலாவுக்கு மூன்று நாட்களாக ஜுரம் என்பது மட்டும் அவளுக்குத் தெரியும். ஒருவேளை அவளுக்கு அதிகமாகிவிட்டதா.

கடைசிப் படியில் நின்றபடி பார்த்தாள்.

மாலா படுத்திருந்தாள். அவள் தலைமாட்டில் உட்கார்ந்தபடி விம்மிக்கொண்டிருந்தான் ராகவன்.

'என்ன இவ்வளவு கோழையாய் இருக்கேளே. எனக்கு என்ன வந்துவிட்டது. இப்போ எதுக்காக அழறேள்.'

'இல்லை மாலா எனக்கு திகிலா இருக்கு உனக்கு ஏன் ஜுரம் வந்தது?'

'இது ஒரு கேள்வியா. ஜுரம் சாதாரணம்தான். ஜுரம் வருவதில்லையா. அதுக்காக மூணு நாளா ஆபீசும் போகாமல் சாப்பிடமாட்டேன்னு பிடிவாதம் செய்துகொண்டு அழுதால் என்ன செய்வது. எனக்கு ஒண்ணுமில்லே. போய் சாப்பிடமாட்டேளா.'

'எனக்கு சாதமே உள்ளே செல்லமாட்டேங்கிறது மாலா. நீ கஞ்சியும் வெந்நீரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது எனக்கு எதுக்கு சாப்பாடு. என்னைத் தவிக்க விட்டுவிட்டுப் போயிடுவியோன்னு அழுகை அழுகையாய் வறது. நான் வேண்டிக்காத சாமி இல்லே.'

'கவலைப்படாதீங்கோ. ஏன் மறுபடியும் அழறேள், யாராவது பாத்தா சிரிக்கமாட்டாளா. சாயங்காலம் ஆபீஸ் மானேஜர் கூப்பிட்டார்னு போனீர்களே ஏன் கூப்பிட்டார் ஏன் லீவு எடுத்தேன்னு கோவிச்சிண்டாரா.'

'அதெல்லாம் இல்லே. மதுரைக்கு பிரமோஷன்லே போகிறாயா. ஒரு மாத பிரமோஷன். அதுக்கு போய் வந்தால் இனிமே கூடிய சீக்கிரம் பதவி உயர்வு வரும்னு சொன்னார். இப்ப போகாட்டா அப்புறம் ஒரு வருடத்துக்கு பிரமோஷன் வராது என்று சொன்னார்.'

'ஒத்துக்கொண்டு விட்டீர்களா இல்லையா?'

'இப்ப பிரமோஷன் வேண்டாம்னுட்டேன்.'

'ஏன்?'

'உனக்கு உடம்பு இப்படி இருக்கச்சே எனக்கு எதுக்கு பிரமோஷன். உன் உடம்புதான் முக்கியம். உன்னைத் தனியா விட்டுட்டு போனா எப்படி நிம்மதியா என்னாலே வேலை செய்யமுடியும். அதுனாலேதான் வேண்டாம்னு சொல்லிட்டேன். செவத்தை வச்சிண்டுதான் சித்திரம் எழுதணும்.'

'இப்படி யாராவது இருப்பாளா. உங்க கோழை மனசும் நீங்களும்.'

'கோழை மனசு இல்லே மாலா. உங்கிட்டே எனக்கு உள்ள அபிமானம் மாலா.'

அவ்வளவுதான். வந்த சுவடே தெரியாமல் மாடிக்கு போய் படுக்கையில் வீழ்ந்தாள்.

அவள் உள்உணர்வு அவளுடன் பேசியது.

'அடி ராஜி. பேதைப் பெண்ணே. தினமும் மனைவியுடன் கைகோர்த்துக்கொண்டு பார்க், பீச், சினிமா என்று போனால்தான் கணவனும் மனைவியும் பிரியமாக இருக்கிறார்கள் என்று அர்த்தமில்லை. பலர் அறிய பிரியத்தைக் காட்டினால்தான் அது பிரியத்தைக் காட்டுவதாக அர்த்தமில்லை. அடக்க ஒடுக்கமாக வீட்டிற்குள்ளேயே பிரியத்தைக் காட்டமுடியும். நீ எதிர் பார்க்கும் பிரியம் மத்தாப்பு வெளிச்சம். வீட்டுக்குள்ளேயே பிரியத்தைக் காட்டிக்கொள்வது தான் குத்துவிளக்கு வெளிச்சம். மத்தாப்பு வெளிச்சம் பகட்டானாலும்கூட குத்துவிளக்கு வெளிச்சம்தான் கண்ணுக்கு குளிர்ச்சியை நெடுநேரம் காட்டக்கூடியது. நீ மத்தாப்பாய் இருக்க ஆசைப்படாதே. குத்துவிளக்காகவே இருக்க ஆசைப்பட்டால் போதும்.'

✱




சூரிய வெளிச்சத்தில் பார்க்க முடியாதது ஏதாவது இருக்கிறதா?
இருக்கிறது சார்!
என்ன அது?
"இருட்டு"!


துப்பறியும் டைகர்
3 குமார், மிக வருத்தத்துடன் டைகரைக் கூட்டிக்கொண்டு பல தெருக்களைக் கடந்து, ஊரின் எல்லையோரத்தை அடைந்தான்.
இரவு நேரம். எங்கும் ஒரே இருட்டு. மணி சுமார் பன்னிரெண்டு இருக்கும். எதிரேயிருந்த பெரிய ஏரியில், அலை பாயும் தண்ணீர் நட்சத்திர ஒளியில் அவ்வப்பொழுது மின்னிக் கொண்டிருந்தது. அதன் கரையில் தன் நாயை அணைத்தபடி, போய் உட்கார்ந்தான் குமார்.
அதே சமயம், ஒரு கார் வரும் சப்தம் கேட்டு, அருகிலிருந்த ஒரு மதில் சுவரின் கீழ் பதுங்கிக் கொண்டான்.
கார் நேராக ஏரிக்கரையருகில் வந்து நின்றது. அதிலிருந்து இரு மனிதர்கள் இறங்கினர். தாங்கள் கொண்டுவந்த ஒரு பெரிய மூட்டையை ஏரியை நோக்கி எடுத்துச் சென்றனர்.




ஏரியில் இறங்கி அதை நடுத் தண்ணீரில் வீசினர்.
பிறகு அதே பேர்வழிகள், மற்றொரு பெரிய பெட்டியைத் தூக்கிக் கொண்டு, ஏரியின் கரையோரமாகவே, மற்றொரு புறத்திற்கு நடந்து சென்றனர்.
அதையும் தண்ணீருக்குள் போட்டுவிட்டுத் திரும்பினர்.
மறுபடியும் காருக்குள் ஏறிக் கொண்டு வந்த வழியே காரைச் செலுத்தினர். இவைகளைக் கவனித்துக் கொண்டிருந்த குமாருக்குப் பெருத்த ஆச்சரியம் உண்டாயிற்று.
தொடரும்



# "அணைத்த கை"

"ஆருத்ரா"

குயிலியைவிட ஆனந்தமானவர்கள் அந்த நாடோடிக் கூட்டத்தில் எவருமே இருக்க முடியாது. அன்றுகூடக் கனிமொழி சொன்னாள், 'உனக்கு ஆண்டவன் அள்ளிக் கொடுத்திருக்கிறான்' என்று.

'எதை?' என்று குயிலி கேட்டாள். தன்னைப் பிறர் புகழ்வதை எல்லா விஷயங்களையும்விட அதிகம் விரும்புபவள் அவள்.

'உன் அழகை…உன் கண்களை…உன் முகத்தை…உன்னைப் பார்க்கும் எவனும் இரண்டாவது தடவை பார்க்காமல் போக முடியுமா?…'

குயிலிக்கு அது உண்மை என்பது தெரியும்…கூட்டத்தில் உள்ளவர்கள் அவளுக்கு எத்தனை மணிமாலைகள் வைத்திருக்கிறார்கள். எவர் வந்தாலும் அவள் பாட்டை விரும்பிக் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கூடாரத்தில் ஒரு தரம் பார்த்தாலும், அந்தப் படத்தில் வரும் பாட்டுக்களை அப்படியே திருப்பிப் பாடி விடுவாள்…

'எனக்கு இருபத்தைந்து பாசி மணி மாலை இருக்கிறது…எத்தனை வளையல்கள் பார்?…நேற்று கூடக் கிள்ளித் தாத்தா புதுப் பாவாடை வாங்கி வந்தார்…' இவ்வாறு சொல்லிக்கொண்டே தான் கட்டியிருந்த ஒட்டுப் போட்ட பாவாடையைக் காண்பித்தாள் குயிலி. யாரோ ஒரு பெண் கிழவன் போட்ட சப்தத்தைப் பொறுக்க முடியாமல் வீசி எறிந்த கந்தல் அது…

'ஆனால், கனிமொழி!…' குயிலி பெருமூச்சு விட்டாள்.

கனிமொழி அவள் தோழி. வேறொரு தோழியும் அவளுக்கு உண்டு. பெயர் முத்து நகை. பித்தளை நகைகளை அணிந்து கொண்டு எண்ணெய் கண்டிராத





கேசத்துடன் நிறம் மாறிய காவிப் பற்கள் வெளியே தெரிய பார்க்கவே அருவருப்பானவள். குயிலியின் இயல்பான அழகு மற்றவர்களின் சூழ்நிலையில் பன்மடங்கு பிரகாசித்தது.

'உனக்கு அறிவு இருக்கிறது...' என்றாள் முத்துநகை. குயிலி சிரித்துக்கொண்டாள். பக்கத்து தெரு முதல் வீட்டில் பள்ளிக் கூடத்துக்குச் செல்லும் ஆறு வயசு சிறுமிக்குத் தெரிந்தது கூட அவளுக்குத் தெரியாது.

அந்த ஊரில் அவர்கள் முகாமிட்டு 2 மாதங்கள் ஆகின்றன. பிச்சையெடுப்பதும், ஊசி, மணி விற்பதும் அவர்கள் தொழில். குயிலிக்குத் தாயார் கிடையாது. தகப்பனார் யார் என்பதும் அவளுக்குத் தெரியாது. தன் தாய் தன்னைப் பிரசவித்தவுடன் இறந்துவிட்டாள் என்றும் அன்று கூட்டத்தை விட்டுப் போன தகப்பன் என்ன ஆனான் என்பது யாருக்கும் தெரியாது என்பதையும் அவள் அறிந்திருந்தாள்.

அந்த நாடோடிக் கூட்டம் அவளை வளர்த்து விட்டிருந்தது. நாளாக நாளாக அவள் அழகு சுடர்விட்டு மிளிர்ந்தது. வாழ்க்கையின் வசந்த காலம் அவளைத் தழுவியிருந்தது. கூட்டத்தில் பெண்கள் அணிந்திருந்த உடைகள் போதுமானவை அல்ல. குயிலியின் வனப்பு அந்தக் கூட்டத்தில் உள்ள காளைகளைக் கிறங்கச் செய்தது.

கனிமொழியும் முத்துநகையும் ஆசையையும் காதலையும் கல்யாணத்தைப் பற்றியும் மணிக்கணக்கில் பேசுவார்கள். குயிலிக்கு ஒன்றும் விளங்காது.



'எதற்காகக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்?' என்று கனிமொழியைக் குயிலி கேட்டாள்.

'ஆசை நிறைவேற...' என்று சுருக்கமாக பதில் வந்தது.

'ஆசை–கல்யாணம் செய்து கொள்ள விருப்பமாயிருக்கிறது– என்பது எப்படி நமக்குத் தெரியும்?' என்றாள் குயிலி. அவ்வளவு அப்பாவி அவள்.

முத்துநகை மணமானவள். சிறிது நேரம் யோசித்துவிட்டு அவள் சொன்னாள் :

'இருதயத்தில் மிளகாய் கொட்டினது போல் எரிச்சல்–ரத்தத்தில் மீன்கள் நீந்துவது போல் பரபரப்பு–இது ஏற்பட்டால் ஆசையாயிருக்கிறது என்று தெரியும்' என்றாள் முத்துநகை.

குயிலி யோசித்துப் பார்த்தாள். ஒரு நாளும் அவளுக்கு அப்படி இருந்ததில்லை. தாத்தாவைக் கேட்டால் தெரியும் என்று அவளுக்குத் தோன்றியது. கேட்டும் விட்டாள்.

'தாத்தாவும் யோசித்தார். கடைசியில் 'ஒரு வண்டை எடுத்து உன் கையில் மூடிக் கொள். நீ பத்து எண்ணுவதற்குள் அது உன்னைக் கொட்டாமலிருந்தால் உனக்கு எதிரில் உள்ள ஆடவன் பேரில் நீ ஆசைப் படுகிறாய் என்று அர்த்தம்' என்றார் அவர். அந்த சமூகத்தில் நிலவி வந்த ஒரு மூடநம்பிக்கையையே அவர் விவரித்தார்.

❧ ❧ ❧

பக்கத்து ஊரில் திருவிழா. குயிலியும் தன் தோழிகளுடன் வியாபாரம் செய்யப் போயிருந்தாள். ரோஷமான கோழிச் சண்டை ஒரு மூலையில் ஏற்பாடாகியிருந்தது. குயிலியும் மற்றவர்களும் இமை கொட்டாமல் வேடிக்கை பார்த்தனர்.

கனிமொழி திடீரென்று குயிலியை உலுக்கினாள். 'அதோ பார்!...அந்த இளைஞன் உன்னைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறான், பார்!'

குயிலி தன் தலையை நிமிர்த்தி பார்த்தாள். எத்தனையோ இளைஞர்களைப் பார்த்திருக்கிறாள், பேசியிருக்கிறாள். இவனைப் பார்த்தவுடன் என்னவென்று தெரியவில்லை. தலையைக் குனிந்து கொள்ளக் கால் கட்டை விரல் தரையில் கோடுகளை இழுத்தது.

கோழிச் சண்டை முடிந்தது. அந்த இளைஞன் இவர்களைப் பார்த்துவிட்டு சிரித்தான். பிறகு நெருங்கி வரலானான்.

கனிமொழியும் முத்துநகையும் குயிலியின் கைகளைப் பிடித்து இழுத்தும் அவள் நகரவில்லை. அந்த வாலிபன்–சிங்கன்–அவனும் நாடோடிதான். மலைக்கு அந்த பக்கம் அவனுடைய கூட்டம் வந்திருந்தது. குயிலியை அவன் தினைப்புனத்தில் வேலன் வள்ளியைக் கண்டவுடன் தோன்றிய கனிவுடன் நோக்கினான்.

முத்துநகையைப் பார்த்து 'இவள் உங்கள் மகளா?' என்று குயிலியைக் காட்டியவாறு சிங்கன் கேட்டான்.

முத்துநகைக்குக் கோபம் வந்துவிட்டது. தன்னை வயதானவள் என்று சொல்லிவிட்டானே என்ற ஆத்திரம். கனிமொழியின் கையை இழுத்துக்கொண்டு அங்கிருந்து அகன்றாள்.

'என்னோடு பேசமாட்டாயா?...' என்று சிங்கன் ஆரம்பித்தான்.

'உம்...' என்று தலையை ஆட்டினாள் குயிலி.

சிங்கன் தன் தோளின் மேலிருந்த குரங்கைக் காட்டினான்,

'இன்று காலையிலிருந்து கொஞ்சம்கூட வருமானமில்லை. திரும்பி வெறுங்கையுடன்தான் போக வேண்டும்' என்று அலுத்துக் கொண்டான்.

குயிலி தன் இடுப்பிலிருந்து இரண்டணாவை எடுத்து நீட்டினாள்.

சிங்கன் அதை வாங்கிக் கொள்ளவில்லை. 'உன் பெயரை எனக்கு சொல்லமாட்டாயா?' என்று ஆதுரத்துடன் கேட்டான் சிங்கன்.

'குயிலி...' என்றாள் அவள்.

'மலைக்கு அந்த பக்கம் என் குடிசை இருக்கிறது. நீ ஏன் இங்கு கஷ்டப்படவேண்டும்?... என்னோடு வருகிறாயா?...'

குயிலி பேசாமல் தலையைக் குனிந்து கொண்டாள். அவள் காலின் அருகே ஒரு வண்டு இருப்பதைப் பார்த்தாள். சட்டென்று அதைக் கையிலெடுக்க எண்ணி ஒரு அடி எடுத்து வைத்தாள். நீண்ட கருவேல முள் ஒன்று அவள் காலில் 'சரக்' என்று ஏறியது. 'ஐயோ' என்ற சப்தத்துடன் அவள் கீழே உட்கார, இளைஞன் அவளைத் தாங்கிக்கொண்டான். குயிலியின் உடல் புல்லரித்தது...நெஞ்சில் மிளகாய் கொட்டிய வேதனை இல்லையில்லை–இன்ப உணர்வு. ஆமாம் ரத்த ஓட்டத்தில் என்ன கிளுகிளுப்பு?...முத்துநகை சொன்னது சரி!...இவனைக் கல்யாணம் செய்துகொள்ள ஆசைப் படுவதை அவள் உணர்ந்தாள்.

சிங்கன் சகஜமாகக் கீழே உட்கார்ந்து கொண்டு அவள் காலைத் தன் துடையின்மேல் போட்டுக் கொண்டான். ஒரு நீண்ட ஊசியினால் காலில் உள்ள முள்ளைத் தோண்டி எடுக்கலானான்.

குயிலி தன் கையை நீட்டி அருகில் கிடந்த வண்டைக் கையில் எடுத்து கையையும் இறுக மூடிக்கொண்டாள். அவள் பார்வை சிங்கத்தின் இளம் மீசையிலும் அவன் திரண்ட தோள்களிலும் நிலைத்திருந்தது. பத்து என்ன, இருபது எண்ணி முடிந்த பிறகு கூட வண்டு அவளைக் கொட்டவில்லை. கையைத் திறந்தவுடன் 'ஙொய்' என்ற சப்தத்துடன் அது பறந்து சென்றது. குயிலிக்குத் தன் கணவன் யாரென்று புரிந்துவிட்டது. அவளுடைய இடுப்பைச் சுற்றி தன் கையைக் கொடுத்து குயிலியைத் தாங்கியபடியே நடத்தி தன் வீட்டிற்கு சிங்கன் அழைத்துப் போனான்.

வழியில் ஒரு பெரிய ஆலமரம். சுகமான தென்றல் காற்று வீசியது. சிங்கனின் மடியில் சாய்ந்தபடியே குயிலி அவன் முகத்தை நோக்கினாள். குயிலியின் அழகிலே மதியிழந்த சிங்கனும் தன்னை மறந்தான். அவள் அவனுக்கு உடைமையானாள்.

ஃ ஃ ஃ

சிங்கனின் குடிசை அழகான ஒரு இடத்தில் நன்றாகக் கட்டப்பட்டிருந்தது. கூரையின்மேல் பசுங்கொடிகள் தவழ்ந்து ஓடின. நாற்புறமும் மலர் செடிகள் வனப்பு மிக்க வகையில் வளர்ந்திருந்தன. கடுங்கோடையிலும் வெய்யிலின் உக்கிரம் தெரியாத நிழல் பிரதேசத்தில் குடிசை அமைக்கப்பட்டிருந்தது.

உவகை பொங்க உள்ளே குதித்தோடிய குயிலியை 'யார் அங்கே?' என்ற குரல் அதட்டி நிறுத்தியது. அச்சத்துடன் சிங்கனைத் திரும்பிப் பார்த்தாள் அவள்!

'பயப்படாதே!...அது என் பாட்டி!...தைரியமாக வா!' என்று சிங்கன் சொன்னபோதிலும் அவன் குரலில் தொனித்த நடுக்கத்தையும் பயத்தையும் குயிலி கவனிக்கத் தவறவில்லை.

கருத்துக் கூன் விழுந்த தேகம்; நரைத்த தலை. சுருக்கம் விழுந்த முகம். ஆனால் குரல் மட்டும் கம்பீரமானது. இதுதான் சிங்கனின் பாட்டியைக் குறித்து சொல்லக்கூடியது. சுற்று வட்டாரத்தில் உள்ளவர்கள் கிழவியைக் கண்டு—அல்ல, அவள் வாயைக் கண்டு அஞ்சினார்கள்.

தன்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல், திருவிழாக் கடையில் பொம்மை வாங்குவதுபோல் ஒரு மனைவியைத் தன் பேரன் கொண்டு வந்தது அவளுக்கு சற்றும் பிடிக்கவில்லை.

குயிலியை ஏற இறங்கப் பார்த்த கிழவி ஒரு பெருமூச்சு விட்டாள். 'இதைப் போய்க் கூட்டி வந்திருக்கிறாயே, இதோடு எத்தனை நாள் வாழ்க்கை நடத்த முடியும்?...முதல் பிரசவமே தாங்காது...' என்று ஆசீர்வதித்தாள்.

குயிலியும் சிங்கனும் தனித்திருக்கும் சமயம், குயிலிக்குக் கிழவியின் கூரிய கண்கள் தங்களைக் கவனிப்பது போல் தோன்றியது. சிங்கனிடம் விஷயத்தைச் சொன்னபோது, 'கிடக்கிறாள், வயதானவள்! விடு!' என்று சமாதானப்படுத்தினான்.

காலையிலிருந்து மாலைவரை அவளுக்கு வீட்டு வேலை சரியாக இருந்தது. சிங்கன் இரண்டு ஆடுகள் வாங்கியிருந்தான். அவற்றைக் கறந்து பாலைக் கொண்டு போய் விற்பது, கோழிகளுக்கு ஆகாரம் போடுவது, தூரத்துக் குளத்திலிருந்து நீர் மொண்டு வருவது ஆகிய வேலைகள் அவ





"கல் எத்தனை வகைப்படும் என்னை?"

"ஸ்வீட்'டில் சர்க்கரைப் பொங்கல் என்ற ஒரே வகையும் தவிர, ரவா பொங்கல், வெண் பொங்கல், ஸேமியா பொங்கல் என்றும் பலவிதமான கல் உண்டு!"

ளுக்கு சிரமத்தைக் கொடுக்கவில்லை. இரவு நேரங்களில் சிங்கனின் இதமான கரங்களின் அன்பு அரவணைப்பு அவளை ஸ்வர்க்கத்திற்கே அழைத்துச் சென்றது.

சிங்கனுக்குக் குரங்கை ஆட்டுவிப்பதினால் வருமானம் ஒன்றுமில்லை. பக்கத்து ஊரில் ஆரம்பித்துள்ள அணைக்கட்டில் வேலை செய்யலானான். நாளாக நாளாக சூழ்நிலையில் அவனுக்குப் புதிய பாடங்கள் கற்றுத் தரப்பட்டன. நேரத்தில் வீடு திரும்புவதில்லை. சம்பாதிக்கும் வருமானம் குறைவு; அதிலும் பெரும் பகுதி வேறு வழிகளில் செலவாயின. இரவு வெகு நேரம் வரையில் அவனுக்காகக் காத்திருக்கும் குயிலி அவன் வந்தவுடன் சண்டை பிடிக்கவேண்டும் என்று காத்திருப்பாள். அவளை நாடி வரும் அவனுடைய கண்கள் அவள் நினைவுகளை மறக்க அடித்துவிடும்.

எதையும் பொறுத்துக் கொள்ளும் சக்தியை அவள் பெற்றுவிட்டாள். ஆனால், கிழவியின் பிடுங்கல்கள் சகிக்க முடியாத நிலையை அடைந்துவிட்டன. சுத்தம் செய்யப்பட்ட வீட்டில் ஆட்டைக் கொண்டு கட்டுவாள். தொலைவிலிருந்து கொண்டு வந்த பானை நீரையும் ஒரு நொடியில் சாய்ப்பாள். எரியும் அடுப்பை அணைப்பாள். குயிலி ஏதேனும் சொன்னாலோ, விரல் நகங்களின் வடு தெரியும்படி அழுத்திக் கிள்ளி விடுவாள்.

குயிலிக்கு பொறுக்க முடியாத நிலை ஏற்பட்டது. கையில் காய்கறி நறுக்கும் கத்தியை எடுத்துக்கொண்டு கிழவியிடம் போனாள். 'இனி இந்த மாதிரி ஏதேனும் செய்தாயானால், ஓரே சீவு, ஆமாம்!...' என்று கத்தினாள்.

கிழவிக்கு உண்மையிலே நடுக்கம் ஏற்பட்டது. மருமகளின் காலிலேகூட விழுந்திருப்பாள். ஆனால் அந்த சமயம் பார்த்துதானா சிங்கன் வரவேண்டும்? உள்ளே நுழைந்த பேரனிடம் இல்லாததும் பொல்லாததுமாக கிழவி பாட ஆரம்பித்தாள். அலுத்துக் களைத்து வந்திருந்த சிங்கன் குயிலியின் வார்த்தைகளைக் கேட்கத் தயாராயில்லை. கையில் உள்ள குறுந்தடியால் அவளை நையப் புடைத்துவிட்டான்.

குயிலி அழவில்லை. கண்ணீர் ஒரு பொட்டுகூட சிந்தவில்லை. ஏனென்றால் சிங்கன் தன்னை அடித்த ஒவ்வொரு அடியும் அவன் உள்ளத்தில் பட்ட வடுக்

கள் என்பதை அவள் உணர்வாள். அடிபட்ட இடங்கள் கன்னிப் போயின. இருந்தபோதிலும் அவனுடைய அன்புக் கரங்கள் காயங்களை அன்று இரவு தடவிக் கொடுத்தபோது, குயிலி அடிபட்டதையே மறந்து போனாள்.

மறுதினம் முதல் கிழவி அவள் பேச்சுக்கு வருவதில்லை. அவள் சமைத்ததை சாப்பிடுவதில்லை. வீட்டில் இருந்த அமைதி பறி போயிற்று. சிங்கன் வீட்டில் நடக்கும் கலவரங்களை மறக்க மதுவை நாடினான். ஸ்வர்க்கமாக இருந்த அந்தக் குடில் நரகமாகியது.

ஒரு நாள் அந்தக் கிழவி இறந்து போனாள்.

அக்கம்பக்கத்திலுள்ளவர் கள் கூடினார்கள். நாய்கள் போல் ஊளையிட்டார்கள். கைகளால் தலையில் அறைந்து கொண்டார்கள். துக்கம் கொண்டாடும் கலையைத் திருப்திகரமாக நடித்துக் காட்டிவிட்டு போனார்கள்.

குயிலிக்கு மிகவும் சந்தோஷம். தன் வாழ்வில் ஒரு திருப்பம் ஏற்பட்டுவிட்டதாக அவள் நினைத்தாள். அந்த வீடு இனி அவளுடையது. சிங்கன் அவளுடையவன். ஒருவரும் அவள் வாழ்க்கையில் குறுக்கிட முடியாது.

பேதை நினைத்தது சரியாகவில்லை. இரவு நேரங்களில் சிங்கன் நேரம் கழித்தே வந்தான். தான் ஏற்படுத்திக்கொண்ட புதிய பழக்கத்தை நிறுத்தவில்லை. குயிலி ஏதேனும் கேட்டால் அவளுக்குக் கிடைத்த பரிசு, உதை திட்டு இவைதான்.

இரவில் குயிலிக்கு அந்த வீட்டில் தனியாக இருப்பது பயமாக இருந்தது. கிழவியின் கூரிய கண்கள் இருட்டில் தன்னைக் கூர்ந்து கவனிப்பதாக அவளுக்குத் தோன்றியது. அவளுடைய சதைப்பற்றற்ற கரங்கள் தன் குரல்வளையைப் பிடிப்பது போலத் தென்பட்டது.

அன்றும் அப்படித்தான். இரவு முழுவதும் தூக்கம் பிடிக்காமல் புரண்டு கொண்டிருந்தாள் குயிலி. விடியற்காலையில் தள்ளாடியபடியே சிங்கன் வந்து சேர்ந்தான். ஆத்திரத்தில் சற்று வரம்பு மீறியே பேசிவிட்டாள் அவள். சிங்கனின் கோபம் உச்ச நிலையை அடைந்தது. கை வலிக்குமட்டும் அவளைப் புடைத்தான். இழுத்து வந்து மரத்தோடு மரமாகப் பிணைத்தான்.

'இப்படியே கிட, நாயே!... சோறு தண்ணி இல்லாமல் செத்துத் தொலை!...' என்று சொல்லி விட்டு குடிசை முழுவதும் தேட்டை போட்டு கிடைத்த சில்லறையை எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

அழுது அழுது தாங்க முடியாமல் குயிலி நின்றபடியே தூங்க ஆரம்பித்தாள்.

ஃ ஃ ஃ

'இந்த அக்கிரமத்தைப் பார்த்தாயா, கனிமொழி!'

'அயோக்யன், பூவைக் கசக்கி விட்டானே கிராதகன்' பரிச்சயமான குரல்கள். குயிலி கண் விழித்தாள். பழைய முகாமிலிருந்து கனிமொழியும், முத்துநகையும் இவளைப் பார்க்க வந்திருக்கின்றனர்.

'என் கட்டுகளை அவிழ்த்து விடு!...கனிமொழி!...உங்களைக் கட்டி அணைத்துக்கொள்ள வேண்டும் போலிருக்கிறது!...' என்று அரற்றினாள் குயிலி.

கனிமொழி கட்டுகளை அவிழ்த்து விட்டாள். கைகால்களை நீட்டி முறித்து விட்டுக் கொண்டாள் குயிலி.



'இந்த முரடன் இப்படியா செய்கிறான்!...என் முன்னால் வரட்டும், பார்த்துக் கொள்கிறேன்!' என்று வீராப்பு பேசினாள் முத்துநகை.

'எப்படி அடித்திருக்கிறான் பார், முத்துநகை!... தாத்தாவிடம் சொல்லி தோலை உரிக்கச் சொல்லவேண்டும்' — கனிமொழியின் வாயிலிருந்து வெடித்துக் கொண்டு வந்த வார்த்தைகள் இவை.

குயிலி சிரித்தாள். 'எப்பொழுதும் என்னை அடிப்பதில்லை. கட்டிப்போடுவதுமில்லை ... இன்று ஏதோ கோபம்...தப்பு என்பேரில் ...' என்றாள்.

'அடிப்பதென்றால் மாட்டைப் போட்டு அடிப்பது போலல்லவா செய்திருக்கிறான், கிராதகன்!' என்றாள் கனிமொழி.

'இதற்கு அவன் பதில் சொல்லி ஆகவேண்டும்!' என்று ஒத்து ஊதினாள் முத்துநகை.

'வாருங்கள், என் வீட்டைக் காண்பிக்கிறேன்!...' என்று குயிலி அவர்களைக் கூட்டிக் கொண்டு போனாள்.

'எப்பொழுதும் குளிர்ச்சியாகவே இருக்கும்!...இதெல்லாம் அவுங்க வளர்த்த செடிங்க. குழந்தைக்குமேலே பாசம் வச்சிருக்காங்க!...' என்றாள் குயிலி.

கனிமொழி அர்த்த புஷ்டியுடன் குயிலியை மேலும் கீழும் பார்த்தாள். குயிலியின் நாணம் அவள் நினைப்பது சரி என்று ஊர்ஜிதப்படுத்தியது.

'அடப்பாவி! பிள்ளைத்தாச்சிப் பெண்ணைப் போட்டு இப்படி அடித்திருக்கிறானே!...' என்று இருவரும் அங்கலாய்த்தார்கள்.

'சரி, நேரமாகிறது!...மூட்டையைக் கட்டிக்கொள்...நம் வீட்டிற்குப் போவோம்!...' என்றாள் கனிமொழி.

'நம் வீடா?...என் வீடு இது தானே!...' என்றாள் குயிலி.

'தெரிகிறது! அதன் லக்ஷணம்!.. அவன் வருவதற்குள் போய்விடலாம்!...'

'போனால் மட்டும் என்ன?... என்னை வந்து கூட்டிக்கொண்டு போக அவுங்களுக்குத் தெரியாதா?'

'வரட்டுமே!...உன்னை அவன் நெருங்குவதற்குள் நம் ஆட்கள் அவன் எலும்பை எண்ணி விடுவார்கள்.'

குயிலிக்கு உடம்பு சிலிர்த்தது.

'அவர்மேல் யார் கை வைத்தாலும் என்னாலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது...அவர் திரும்பி வந்து நான் இல்லையென்றால் எவ்வளவு வேதனைப் படுவார்?'

'படட்டுமே! வேண்டியது தான்!...'

'சரி, குயிலி சற்று படுத்துக் கொள்ளட்டும்!...நாமே மூட்டையைக் கட்டுவோம்.'

படுத்தபடி குயிலி யோசனையில் ஆழ்ந்திருக்க, அவள் தோழிகள் துரிதமாக சாமான்களை சேகரித்தார்கள். பிறகு 'என்ன, புறப்படுவோமா?' என்று கேட்டார்கள்.

ஏதோ தீர்மானத்திற்கு வந்தவள்போல் குயிலி இடத்தை விட்டு எழுந்தாள். அவர்கள் சேகரித்த சாமான்களைத் திருப்பி அவைகளுக்குரிய இடத்தில் வைத்தாள். முத்துநகையும் கனிமொழியும் வாய் மூடாமல் அவளைப் பார்த்துக்கொண்டேயிருந்தனர்.

'நீங்கள் எனக்கு வேண்டியவர்களாயிருந்தால், தயவு செய்து

நான் சொல்கிறபடி செய்யுங்கள்...' என்றாள் குயிலி.

'என்ன வேண்டும் உனக்கு?...' என்றாள் கனிமொழி.

'நான் எப்படிக் கட்டப்பட்டிருந்தேனோ அதேமாதிரி என்னைக் கட்டிவிட்டு நீங்கள் போய் விடுங்கள்...' என்றாள் அவள்.

'உனக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?...' என்று வெகுண்டாள் முத்துநகை.

'இல்லை...உங்களுடன் வந்தால் எனக்கு என்றும் அமைதி இல்லை...இங்கு இருந்தால் எவ்வளவு கஷ்டம் இருந்தாலும் இடையிடையே இன்பலோகத்தின் இமயத்திற்கே நான் சென்று விடுகிறேன்...தயவு செய்யுங்கள்!' என்று கெஞ்சினாள்.

'என்னால் அந்தக் காரியத்தை செய்ய முடியாது!...' என்று உறுதியாகக் கூறினாள் முத்துநகை.

குயிலியின் தீர்மானத்தை மாற்ற முடியாது என்று கண்ட கனிமொழி அவளை அதே மரத்தில் அதேமாதிரி பிணைத்தாள். முத்துநகையும், கனிமொழியும் துக்கம் தொண்டையை அடைக்க, விடை பெற்றுக்கொண்டு அகன்றனர். குயிலி ஆனந்தத்துடன் கையை ஆட்டினாள். சிங்கம் தன் அன்புக்கரங்களால் பூட்டப்பட்ட தளையை அவிழ்க்கும் நேரத்தை ஆவலுடன் எதிர்பார்த்தாள்.

❧ ❧ ❧

சிங்கன் தான் வழக்கமாக மது அருந்தும் சாவடிக்கு விரைந்தவன் திடுக்கிட்டான். சாவடியில் இருந்தவர்கள் எல்லோரும் போலீஸாரால் கைது செய்யப்பட்டு இழுத்துப் போகப்படுவதைக் கவனித்தான். உள்ளம் சுருக்கென்றது. தான் செய்த தவறு அவனுக்குப் புலப்பட்டது. வீடு நோக்கி விரைந்தான்.

அவன் செல்லக்கிளியை முதலில் விடுவிக்க வேண்டும், கொஞ்ச வேண்டும் என்ற ஆசையில் ஓடோடி வந்தான். தலை தொங்க, துவண்ட கால்களுடன் மூச்சுக் காற்று போன உடல் போலக் குயிலி அங்கு நின்றிருந்தாள்.

சிங்கன் தலையில் கைகளால் அறைந்துகொண்டான். விம்மினான்; குயிலியை மரத்திலிருந்து அவிழ்த்து மடியில் கிடத்திக் கொண்டான்.

'உன்னைக் கொன்றுவிட்டேனே, என் பட்டுக் கிளியே! என்னை மன்னிப்பாயா?...' என்று கதறினான்.

அவன் கண்களிலிருந்து விழுந்த நீர்த் துளிகள் குயிலியின் கன்னங்களை நனைத்தன. மீண்டும் தன் நெற்றியில் அறையப் போன அவன் கரங்களைத் தடுத்து நிறுத்தியது ஒரு வளையல் கை.

'என்மேல் அவ்வளவு ஆசை வைத்திருக்கிறீர்களா?' என்று கேட்டது அந்தக் கற்கண்டுக் குரல்.

சிங்கன் குயிலியை வாரி அணைத்துக்கொண்டான். 'என்னை அலற வைத்துவிட்டாயே' என்று அன்பாகக் கடிந்துகொண்டான்.

அவன் அரவணைப்பிலிருந்து விடுபட்ட குயிலி மீண்டும் ஏதோ காதோடு சொல்ல அவன் முகம் மேலும் மலர்ந்தது.

மரத்தின்மீது தாவிய குரங்கினுடைய கால்கள் மரத்தை அசைக்க பாரிஜாத மலர் மாரியாகப் பொழிந்தது.

★





# நான்கு கடிதங்கள்

ரா. வேங்கடசாமி

'கதை உலகம்' ஆசிரியர், எப்படியும் அடுத்த மாதம் ஒரு புதுத் தொடர்கதையை ஆரம்பித்து விடவேண்டும் என்று பிரபல எழுத்தாளர் பாஸ்கரனிடம் சொல்லிவிட்டார். பாஸ்கரன், ஆசிரியருக்கு பலவிதத்தில் கடமைப்பட்டவர். அதனால் கதையை எழுதியே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. உள்ளூரில் இருந்தால் பல தொல்லைகள். நிச்சயம் கதையை எழுதமுடியாது. போதாத குறைக்கு எப்போது கல்யாணப் பேச்சு தொடங்கலாம் என்று அவர் தந்தை உயிரை வாங்கிக்கொண்டிருப்பார். பாஸ்கரனின் மனதை அறிய, அவர் முயற்சி எடுத்துக் கொள்ளவே இல்லை. அதையெல்லாம் சொல்லப் போனால், அதுவே பெரிய கதையாகிவிடும். கதையை எழுதி முடிக்க சரியான இடம் தனது பாட்டி இருக்கும் கிராமந்தான் என முடிவு செய்து, அந்த ஊருக்குப் பயணமாகிவிட்டார், பிரபல எழுத்தாளர், அவர் விருப்பத்திற்கு யாருமே குறுக்கே நிற்காததினால்!

எப்போதும் வராத பேரன் வந்திருப்பதால் பாட்டி காமாட்சியின் உபசாரமும் அதிகமாகத்தான் இருந்தது. பாஸ்கரன் எதிர்பார்த்ததுபோல் இரண்டே நாட்களில் உபசாரமெல்லாம் முடிந்துவிட்டது.

ஆனால் எதிர்பார்க்காத ஒரு தொந்தரவு அங்கேயும் ஆரம்பமாகிவிட்டது—

'ஏண்டா பாஸ்கர்...இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் இப்படியே ஒண்டிக்கட்டையாக காலம் தள்ளுவதாக உத்தேசம்? நான் கண்ணை மூடுவதற்குள் ஒருத்தியின் கழுத்தில் தாலியைப் போடப்போகிறாயா இல்லையா?' பாட்டியின் இந்த பயங்கரமான தாக்குதலுக்கு ஆதாரம் எதுவென்று பாஸ்கருக்குத் தெரியும். இருந்தாலும் பாட்டியை சமாளித்தாக வேண்டுமே...இல்லாவிட்டால் எழுத்து வேலை திருப்திகரமாக ஓடாதே...?

'கல்யாணந்தானே பாட்டி... அப்பா பார்த்த பெண் ஒருத்தியைக்கூட எனக்குப் பிடிக்கவில்லை...நீ ஒரு பெண்ணைப் பார்...கண்களை மூடிக்கொண்டு தாலியைக் கட்டிவிடுகிறேன்...' இதைச் சொல்லும்போது பாஸ்கரனுக்கு ஒரு தைரியம். இக்கிராமத்தில், நமக்கு ஜோடியாகப் பெண் எங்கே இருக்கப் போகிறாள்? இருந்தாலும் பாட்டிக்குப் பிடிக்காதப் பெண்ணாகத்தான் இருப்பாள் என்ற எண்ணங்கள் தான் அத்தைரியத்திற்குக் காரணம். மேற்கொண்டு பதில் பேசாமல் காமாட்சிப் பாட்டி உள்ளே போய்விட்டது வேறு இந்த எண்ணத்தை உறுதிப்படுத்துவதாக இருந்தது. ஆனால்...! எழுத்தாளரின் கற்பனைக்கப்பால் இருக்கும் நடப்பு உலகில் எதிர்பார்க்காததெல்லாம் நடந்துவிடுகின்றன அல்லவா? காமாட்சி அம்மாளின் நடவடிக்கைகளும் அப்படித்தான் இருந்தன. மூன்று நாட்கள் பாஸ்கருக்கு வேலை செய்ய அவகாசமிருந்தது. அதாவது பாட்டியின் தொல்லை இல்லாமல் இருந்தது.

நான்காவது நாள் காலை, போர்க்களத்தில் வெற்றிகண்டு விட்ட படை வீரனைப்போல், பெருமிதம் ஜொலிக்க, பாட்டி பேரன் முன் ஆஜராகிவிட்டாள். பேச்சும் ஆரம்பமாகிவிட்டது, மடை திறந்த வெள்ளம்போல! 'உனக்காக இந்த கிராமத்தில் ஒரு பெண் இருக்கிறாள் பாஸ்கரா! அதை நேற்றுதான் கண்டுபிடித்தேன். என் மனதிற்கு அவள் எல்லாவிதத்திலும் பிடித்திருக்கிறாள். நீ பார்த்து 'சரி' என்றால் போதும்; மேற்கொண்டு எல்லா காரியங்களும் தானாக நடக்கும். நல்லவிதமாகச் செய்வார்கள் என்றுகூடத் தெரிகிறது. அந்தப் பெண் நீ எழுதும் கதைகளையெல்லாம் படிப்பாளாம்—பெயர் மல்லிகா. என்ன சொல்கிறாய்? எப்போது பெண் பார்க்கப் போகலாம்?'

எழுத்தாளருக்கு இது எக்கச்சக்கமான நிலைமை. கற்பனைக்கு உருகொடுப்பதா...இல்லை பாட்டி சொற்படி நடந்து கவலைக்கு அஸ்திவாரமிடுவதா? பாட்டி எதிரில் நிற்கும்போது எந்தவிதமான யோசனைக்கும் மனம் இடம் கொடுக்கவில்லை. 'அப்படியா சந்தோஷம். எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடேன். யோசனை செய்து பதில் சொல்கிறேன்.... யோசிக்காதே! உன் விருப்பத்திற்கு எதிராக நான் நடந்து கொள்ளவேமாட்டேன்' பாஸ்கர் நிதானமாகப் பேசினார்.

பாட்டி விட்டுக் கொடுத்தாள். 'சரி நாளைக்குப் பதில் சொல் போதும்' என்று கூறிவிட்டு, அவள் போய்விட்டாள்.

மூச்சு விட்டார் எழுத்தாளர். அடுத்தபடியாக அவர் செய்ய



வேண்டிய வேலை பாட்டியின் மனதை கொஞ்சங்கொஞ்சமாக மாற்ற வேண்டியது. நெஞ்சை அள்ளும் சிறுகதைகளுக்கும், திடுக்கிடும் சம்பவங்களோடு கூடிய தொடர்கதைக்கும் இடமளிக்கும் அவர் மனதில் கேவலம் ஒரு கிழவியை மாற்றத்தானா வழி தோன்றாது? ஒரு மணி நேரம் யோசனை செய்த பின்னர் ஒரு காகிதத்தை எடுத்து, நிறுத்தி நிதானமாக ஒரு பெண் எழுதிய கடிதம்போல, எழுதத் தொடங்கினார். கடிதம் இதுதான்—

'அன்பே, உங்கள் பிரிவால் என் மனம் ஒரு நிலையில் இல்லை. என்னால் இந்நிலையை நீடித்து அனுமதிக்கமுடியாது. ஆதலின் விரைவில் ஊர் வந்து சேருங்கள். என் அப்பாவிடம் நம் காதலைப்பற்றிச் சொல்லி, உடனே திருமணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன். கணவன்—மனைவி என்ற உறவுக்கு இருக்கும் மதிப்பே அலாதிதான் இல்லையா? அன்பரே விரைவில் வாருங்கள்.

அன்புள்ள உங்கள் காதலி,

கமலா.'

இக்கடிதத்தைப் பாட்டி பார்த்தால், அவள் வேகம் நிச்சயம் கொஞ்சம் தடைப்படும். அதனால் அவள் வந்து பார்க்கும் இடத்தில் கடிதம் வைக்கப்பட்டது. எல்லாவற்றையும் சோதனை போடும் அவள் கண்களுக்கு இக்கடிதம் எங்கே தப்பப் போகிறது? முடிவை இப்போதே ஊகித்துவிட்டு, ஆனந்தமடைந்தார் எழுத்தாளர்.

எழுதுவதில் இருந்த கவனம் இப்போது பாட்டியைக் கண்காணிப்பதில் இருந்தது. கமலா எழுதியதாக இருக்கும் கடிதத்தை அவள் படித்துப் பார்த்த



'மாமா! யானைக்கு கரும்பு பிடிக்கும்ன்னு என் புஸ்தகத்திலே போட்டிருக்கு. அப்படின்னா உங்களுக்கும் பிடிக்குமோன்னோ!''

பின், என்ன மாறுதல் ஏற்படுகிறது என்பதை எழுத்தாளர் அறிய வேண்டாமா?

காமாட்சி கடிதத்தை எடுத்துப் பார்த்தாள். பிறகு எடுத்த இடத்திலேயே வைத்தும் விட்டாள். அவள் முகத்தில் சலனமில்லை. பாஸ்கருக்கு ஒரே ஏமாற்றம். அவள் ஏதாவது பேசுவாள் என்றல்லவா எதிர் பார்த்தார்?

இரண்டு மூன்று நாட்கள் எவ்வித நிகழ்ச்சிகளுக்கும் இடம் கொடுக்காமல் ஓடி மறைந்தன. பாஸ்கர் வந்த வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தார். மறுநாள் பதில் சொல்லு என்று கெடு வைத்துவிட்டுப் போன பாட்டியே பேசாமல் இருக்கும்போது தான் ஏன் அவசரப்பட்டு பேச வேண்டும் என்று பாஸ்கர் எண்ணிக்கொண்டார். பாட்டியின் மனமாற்றத்திற்கு தன் கடிதம்

காரணமாக அமைந்திருந்தால், அதையே உறுதிப்படுத்திவிடுவோம் என்று அவர் நினைத்துக்கொண்டு, மூன்று தினங்களுக்குப்பின், காதலி கமலா எழுதியதைப்போல இன்னொரு கடிதத்தையும் எழுதி வைத்தார். காமாட்சிப் பாட்டி அதையும் பார்த்தாள். அக்கடிதத்தில் இருந்த விஷயம் இதுதான்.

'அன்புள்ளவரே,

உங்கள் கடிதம் கிடைத்தது. உங்கள் பாட்டி சொல்கிறார் என்பதற்காக நீங்கள் வேறு ஒரு பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டினால் நான் கிணற்றில் விழுந்துவிடுவேன். என் தந்தை சம்மதிக்காவிட்டால், நான், நீங்கள் இருக்குமிடத்திற்கு ஓடி வந்துவிட முடிவு செய்திருக்கும்போது, உங்கள் பாட்டியைக் காரணமாகக் காட்டி நீங்கள் ஏதாவது செய்துவிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் அனுமதி தந்தால் நானே உங்கள் பாட்டியிடம் வந்து பேசுகிறேன்.

உங்கள் அன்பான கமலா.'

இரண்டாவது கடிதம் முதல் கடிதத்தைவிட அதிகமாக பயனளித்திருக்க வேண்டும். ஏனெனில் காமாட்சிப் பாட்டி, ஆரம்பத்தைப்போல் பாஸ்கரை கவனிப்பதைக்கூட விட்டுவிட்டாள். ஏதோ தன் கடமையைச் செய்தோம் போனோம் என்று இருந்தாள் அவள். பாஸ்கருக்கு இந்நிலை ஒருவிதத்தில் நிம்மதியாக இருந்தாலும், இன்னொரு விதத்தில் பாட்டியின் மனதைப் புண்படுத்திவிட்டோமே என்ற வருத்தமும் இருந்தது. ஆனால் எழுத்தாளர் திட்டம் போட்டதுபோல் எல்லாமே நடந்துவிட்டால் எப்படி?

## 2

ஆற்றங்கரை ஓரத்தில் அவளைச் சந்தித்தார் பாஸ்கர். கபடு சூதில்லாமல் அவள்தான் முதலில் பேசினாள்.

தன் பெயர் 'மல்லிகா' என்றாள்.

பாஸ்கர் திடுக்கிட்டார்.

இப்படிப்பட்ட கிராமத்து மோகினியை தனக்காகப் பாட்டி பார்த்திருக்கிறாள் என்று அவருக்குத் தெரியாதே? தெரிந்திருந்தால் காதல் கடிதங்கள் ஏன் உற்பத்தியாகின்றன?

'என் பாட்டியைக்கூட உனக்குத் தெரியும்போலிருக்கிறதே!' பாஸ்கர் அறிமுகத்தை சிநேகமாக வளர்த்துக்கொள்ள விரும்பினார். 'பாட்டியை மட்டுமா, உங்களைப்பற்றியும் எனக்குத் தெரியும்—உங்கள் கதைகளை ஒன்று தவறாமல் எல்லாவற்றையும் படித்திருக்கிறேன். சென்னையிலிருக்கும்' போது அது சாத்தியமாக இருந்தது. இப்போது முடியவில்லை. புதிதாக ஏதாவது இருந்தால் கொடுங்களேன். படித்துப் பார்க்கிறேன்.'

'அவசியம் தருகிறேன். இப்போதுகூட ஒரு நாவல் எழுதத்தான் இங்கு வந்திருக்கிறேன்... உம்...நீ சென்னையில் என்ன செய்துகொண்டிருந்தாய்?'

'கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன்' பாஸ்கர் இந்தப் பதிலைக் கேட்டவுடன் திடுக்கிட்டார். இக்கிராமத்தில் கல்லூரியில் படித்த பெண்ணா? அவசரப்பட்டு என்ன காரியம் செய்துவிட்டோம் என்று அவர் மனம் வருத்தப்பட்டது.





இப்படி ஆரம்பித்த சந்திப்பு தொடர்ந்து பல இடங்களில் நடந்தது. ஒரு தடவை பாஸ்கர் மல்லிகாவின் வீட்டிற்கும் விஜயம் செய்தார். அவளுடைய பெற்றோருக்கு பரமதிருப்தி—ஆனால், பாட்டியை இப்போது சமாதானப்படுத்த வேண்டுமே...அவள் முயற்சி எடுக்காவிடில் திருமணம் எப்படி நடக்கும்?

கற்பனை பழைய வழிக்கே போகச் சொல்லியது. இரண்டு கடிதங்களினால், ஒரு காதலியை உண்டாக்கிக்கொண்ட பாஸ்கர், மூன்றாவது கடிதத்தினால், அக்காதலியை பாட்டியின் மனதிலிருந்து விரட்டிவிடத் தீர்மானித்தார்.

மல்லிகாவைப்போன்ற ஒரு பெண்ணை, மனைவியாக அடையக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே. அதற்காக எவ்வளவு முயற்சிகள் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ள பாஸ்கர் தயாராக இருந்தார் மூன்றாவது கடிதம் உருவாகியது.

'அன்புள்ள பாஸ்கருக்கு,

வணக்கம். இப்படி ஒரு கடிதம் எழுதி உங்கள் மனதை நோகச் செய்ய நான் விரும்பவில்லை. இருந்தாலும் எழுதியே தீர வேண்டும் என்ற நிலை. அதனால் எழுதுகிறேன். என் அப்பாவிடம் நம் காதலைப்பற்றிச் சொன்னபோது அவர் கோபித்துக்கொள்

ளாமல் சாந்தமாக காதலைப்பற்றி விவாதித்தார். பணம் இருந்தால் தான் காதல் செழித்து வளரு மாம். உங்களைப்போன்ற எழுத் தாளர்களைக் கட்டிக்கொண்டால், பணம் நிறையக் கிடைக்கும் என்று சொல்ல முடியாதாம். வறுமையில் உழலுவதால் யாரு க்கு என்ன லாபம்? அதனால் உள் ளத்து உணர்ச்சிக்கு அதிக முக் கியத்துவம் கொடுக்காமல், என் தாய் தந்தையர் பார்த்து வைக் கும் பணக்கார மாப்பிள்ளையைக் கட்டிக்கொள்ள நான் தீர்மானி த்துவிட்டேன். ஆதலால் தயவு செய்து என்னை மறந்துவிடுங்கள், வேறொரு பெண்ணை மணந்து சுக மாக வாழுங்கள்.

இப்படிக்கு

கமலா'

இக்கடிதத்தைப் பாட்டி படி த்து விட்டாள் என்பதை அறிந்த வுடன், அவளிடம் மல்லிகாவைப் பற்றி பேசி திருப்திகரமான முடிவைக் காணவேண்டும் என்று பாஸ்கர் முடிவு செய்து கொண் டார்.

## 3

நான்காம் நாள். பாஸ்கர் சாப் பிட உட்கார்ந்தார்.

'பாட்டி.'

'என்ன?'

'என் கல்யாண விஷயமாக ஏதோ ஏற்பாடு செய்கிறேன் என் றாயே அது என்னவாயிற்று?'

'ஒன்றும் ஆகவில்லை...அப் படியேதான் இருக்கிறது.'

'ஏன்?'

'உனக்கு கிராமத்துப் பெண் கள் சரிப்பட்டு வரமாட்டார்கள். பட்டணத்துப் பெண்தான் லாயக்கு.'

'என்ன பாட்டி அப்படிச் சொல்லிவிட்டாய்? நீ பார்த்துச் செய்தால் நான் வேண்டாமென்று சொல்லிவிடப் போகிறேன்?'

இதற்கு காமாட்சியிடமிருந்து பதில் இல்லை. அன்றைக்கு அதோடு நிறுத்திக்கொண்டார். ஆனால், அன்றைக்கு சாயங்காலம் அவரது மேஜையின்மீது ஒரு கடிதம் கிடந்தது. அது உண்மை யிலேயே ஒரு பெண்ணினால் எழு தப்பட்டிருந்தது. அதில் இருந்த விஷயம் இதுதான்—

'மிஸ்டர் பாஸ்கர்,

உங்கள் மனம் எனக்கு இப் போதுதான் தெரிந்தது. பாட்டி சொல்லி இருக்காவிட்டால் நான் உண்மையில் ஏமாந்துதான் போயிருப்பேன். ஒரு பெண் உங் களை உதறித்தள்ளிய பின்தான் நீங்கள் என்னை மணக்க முன் வருகிறீர்கள் என்பதை அறிந்த போது என் மனம் எவ்வளவு வேதனைப்பட்டது தெரியுமா? அவள் உங்களை உதறியதுபோல், நீங்களும் என்னை உதறி எறிந்து விடக்கூடும் காலத்தின் மாறுதலி னால்! அதனால் நம் சிநேகத்தை வெறும் சிநேகமாகவே நினைத்து என்னை மறந்துவிடுங்கள். நானும் எச்சிற்பட்ட பழத்தை சுவைக்க விரும்பவில்லை.

இப்படிக்கு

மல்லிகா.'

பாஸ்கர் இடிந்து போய் உட் கார்ந்துவிட்டார். உண்மையைத் தெளிவாக்க, இப்போது அவர் காமாட்சிப் பாட்டியைத் தேடிக் கொண்டு கோவிலுக்கு ஓடியிருக் கிறார்.

★






ஆஸ்பத்திரி கடிகாரம் நாலு முறை அடித்து ஓய்ந்தது. வெயி லின் உக்கிரமும் சற்று குறைந்தி ருந்தது. நாலாவது முறையாக வேலன் குழாயடிக்குச் சென்று சூடான குழாய் ஜலத்தை அள்ளி அள்ளி குடித்துவிட்டு முகத்தை யும் கழுவிக்கொண்டு வேப்பமரத் தடிக்கு வந்து உட்கார்ந்தான். முகம் கழுவியதனால் அவன் தொழிலை அதாவது 'குருவி ஜோசியம்' சொல்லும் தொழிலை— விளம்பரப்படுத்திக்கொண்டி ருந்த அவன் நெற்றியிலிருந்த சந்தனப்பொட்டு — அழிந்துவிட் டது. நெற்றியை கையால் துடை த்தவாறு மரத்தில் சாய்ந்து உட் கார்ந்தான்.

காலையிலிருந்து இதுவரையில் ஒன்றுமே சாப்பிடவில்லை. குழாய் ஜலத்தால் தன்னை திரு ப்திபடுத்திக்கொண்டிருந்தான் வேலன். வரவர ஜனங்களுக்கு ஜோசியத்திலும் நம்பிக்கை குறைந்துவிட்டதோ என்றுதான் அவனுக்குத் தோன்றியது. ஜேபியை துழாவினான். ஒரு ஓட்டை காலணா கிடைத்தது. பக் கத்து கடையிலிருந்து, ஒரு வாழைப்பழம் வாங்கி கூண்டைத் திறந்து குருவிகளுக்கு போட்டு விட்டு, ரஸ்தாவில் தன் கவ னத்தை செலுத்தினான். வண்டி, ரிக்ஷா, கார் என்று வாகனங்கள் துரிதமாக ஓடிக்கொண்டுதான் இருந்தது. பஸ் நிறைய ஜனங்கள் சலவை மடிப்பு கலையாத உடை யுடன், பகட்டாகப் போகும் ஆபீஸ் ஊழியர்கள். பட்டாம் பூச்சியைப்போல், பலவித நிற புடவைகளில், பளபளக்கும் காலேஜ் மாணவிகள், இப்படி எத்தனையோ, அவன் கண்களு க்குப் புலப்பட்டது.

ஹோட்டல்களில் ஒரே கூட் டம். சினிமா தியேட்டர்களிலும் கூட்டம். எல்லோரும் உல்லாச வாழ்வு வாழ்கிறவர்கள். கண் ணாடி கிளாஸ்களில் குளிர்ந்த பானங்களைச் சாப்பிடுகிறார்கள்.

வாசனை புகையிலை வெற்றிலை என்று குதப்புகிறார்கள். விலை உயர்ந்த சிகரெட்டை, புகைக்கிறார்கள். தெருவோரங்களில், சாத்துக்குடி பழம், மலைப்பழம், திராட்சைப் பழம் என்று அடுக்கி வைத்திருக்கிறார்கள் விற்பனைக்கு. எங்கேயும் சுபிட்சமும் சந்தோஷமும்தான். நன்றாக அனுபவிக்க பிறந்தவர்கள் அனுபவித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். கஷ்டப்பட பிறந்தவர்கள்— ஏன்; தன்னையே உதாரணமாக சொல்லலாமே— சுகமென்பதையே அறியாமல், ஜீவனம் பண்ணுகிறேன் என்று நினைத்து தன்னையே நொந்துகொண்டான்.

சற்று தூரத்தே, கிழவி தோசை வார்க்கும் வாசனை காற்றில் மிதந்து வந்து மூக்கைத் துளைத்தது. 'ஜோசியம் பார்க்கலையா? குருவி ஜோசியம்' என்று கத்தக்கூட அவனுக்குத் தெம்பு இருக்கவில்லை. மரத்தில் சாய்ந்து அப்படியே உட்கார்ந்துவிட்டான்.


உலகத்தில் உள்ள கஷ்டங்களை ஒன்றுமே லட்சியம் செய்யாமல் கூண்டினுள் குருவிகள் தன் அலகால், வாழைப் பழத்தை கொத்தித் தின்றவாறு, கீச்கீச் என்று கத்திக்கொண்டு, சந்தோஷமாக இருப்பதைக் காண அவனுக்கு வியப்பாக இருந்தது. அந்தக் குருவிகள் என்று மனிதனால் பிடிக்கப்பட்டனவோ அன்றிலிருந்தே தங்கள் சுதந்திரத்தை இழந்து, அடிமை வாழ்வுதான் வாழுகின்றன. மனிதனுக்கு பூமிதான் சொந்தம். பூமியில்தான் நடமாடமுடியும். ஆனால் குருவிகளுக்கு நீலவானத்தில், மேலே மேலே இஷ்டப்படி பறக்கலாம்.

அவைகளுக்கு உயர்வு, தாழ்வு என்ற வித்தியாசம் கிடையாது. நாளைக்கு வேண்டுமே என்ற கவலையும் கிடையாது. ஆனந்தமாக கிடைத்ததை தின்று கவலையில்லாமல், உலகமே நம்முடையதுதான் என்று உல்லாசமாக இருந்த குருவிகளைப் பிடித்து ஓரடி விஸ்தாரமுள்ள சிறு கூண்டில் அடைத்துவிடுகிறான் மனிதன். அத்துடன் நினைத்தபோதெல்லாம், 'ஹேய், அய்யாவுக்கு ஜோசியம் சொல்லு சுபமான தாளை எடு' என்று குச்சியால் தட்டினால் கூண்டிலிருந்து வெளியே வந்து கோணியில் பரப்பியிருக்கும் கார்டில் ஒன்றைக் கொத்தியெடுக்க வேண்டும். இது ஒரு தொல்லையான வேலை. குருவி, பறந்து போகாமல், அதன் காலில் ஒரு நூல் வேறு கட்டியிருக்கும். இதையெல்லாம் பொருட்படுத்தாமல் இந்த கூண்டினுள் சந்தோஷமாக குலவி மகிழும் இந்த குருவிகளை பார்த்துதான் மனிதன் இருப்பதை வைத்துக்கொண்டு சந்தோஷமாக இருக்கவேண்டும். இல்லாததை நினைத்து வருத்தப்படக்கூடாது என்ற பாடத்தை படிக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டான். இப்படி நினைத்ததும், சோர்ந்து உட்கார்ந்திருப்பது அவனுக்கே வெட்கமாக இருந்தது. நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு 'ஜோசியம் குருவி ஜோசியம்' என்று கத்தினான் கம்மிய குரலில்.

பக்கத்திலிருந்து 'கலீர்' என்ற சிரிப்பு எழுந்தது. திரும்பிப் பார்த்தான் வேலன். சிரித்தவள் தெய்வானைதான். முறத்தில் விற்றதுபோக, மீதியிருந்த பொரி உருண்டையை 'ஈ' வராமல் கழியால் சுழற்றி பாதுகாத்துக் கொண்டே. 'என்னாங்க இது? ஜனங்க வயித்துபாட்டுக்கே கஷ்டப்படும்போது, எப்படீங்க ஜோசியத்துக்கு துட்டு செலவு பண்ணமுடியும்? இந்தத் தொழிலை விட்டுவிட்டு வேறு ஏதாவது பாருங்கன்னா கேட்கமாட்டேன் என்கிறீங்க' என்றாள் சிரித்தவாறு.

வேலனுக்கு அவள் சிரிப்பதை பார்க்கவே பிடிக்கவில்லை. காலையில் முறம் நிறைய வெல்லம் போட்ட பொரி உருண்டையை அடுக்கிவிடுவாள். மடமடவென்று மூன்று மணிக்குள் எல்லாம் விற்றுப் போய்விடும். நல்ல லாபமான வியாபாரம்தான். விற்ற பணத்தை சுருக்கு பையில் முடிந்துகொண்டு, ஓரணாவுக்கு கதம்பம்கூட வாங்கி கொண்டையில் வைத்துக்கொண்டு, நாலுமணிக்கெல்லாம் வீட்டுக்கு புறப்பட்டுவிடுவாள். குடிசையில் அவளும் அவள் தாயும்தான். தாய் பொரி உருண்டை பிடித்து கொடுத்துவிடுவாள். நல்ல முகராசி; கெட்டிக்காரப் பெண். அவளுக்கு வியாபாரமாகிவிட்டது என்ற திமிறில்தானே இப்படிச் சிரிக்கிறாள் என்று நினைத்து பொறுமினான் வேலன்.

'சிரிக்கமாட்டாயா? நன்றாக சிரி. காலையிலே வூட்டிலே பழைய சோறு, பகல்லே ஆயாகிட்டே ரண்டு தோசை, சட்டினி. மாலையிலே டீ இப்படி குஷியாக சாப்பிட்டிருக்கே சிரிக்கமாட்டாயா? என்னைப் பாரு. நாலு தடவை குழாய்த் தண்ணி அவ்வளவுதான். இந்த தொழிலை வேறே விடச் சொல்லறே. ஒரு கை முடமானவனுக்கு வேறு என்ன வேலை கிடைச்சிடும்? எல்லாம் இந்த வாயில்லா உயிர்கள்தான் என்னை காப்பாற்றுகிறது' என்று குருவிக் கூண்டை காட்டினான் வேலன் மனோவேதனையுடன்.



''போராட்டம்!...போராட்டம்னு சொன்றதைக் கேட்டு இந்த ஜனங்களுக்குக் காது இன்னும் புளிக்கலியே!''

''புளி விக்கிற விலைக்கு எப்படிங்க புளிக்கும்!''

தெய்வானைக்கு இதைக் கேட்க சங்கடமாக இருந்தது. இரக்கம் மேலிட 'இந்தாங்க; ஒரு பொரி உருண்டை' மீதி இருக்கு சாப்பிடறீங்களா?' என்றாள். வேலனுக்கு சிரிப்பு வந்துவிட்டது. 'யானைப் பசிக்கு சோளப்பொரி' என்று இந்தப் பொரி உருண்டையைத் தின்றால் என் வயிறு நிறைந்துவிடுமா? வேண்டா- அம்மே தவிரவும் ஒருவரிடம் கைநீட்டி வாங்க, எனக்கு பிடிக்காது' என்றான் துடுக்காக. தெய்வானைக்கு முகம் தொங்கிவிட்டது. 'இந்த ஜம்பப் பேச்சிலே ஒண்ணும் குறைச்சல் இல்லே என்று அவள் முணுமுணுத்தது நன்றாக வேலன் காதில் விழத்தான் செய்தது.

முறத்தை தட்டி எடுத்துக்கொண்டு அந்த ராங்கிக்காரி சென்றுவிட்டாள். வேலனுக்கு

தன் ஊனக் கையை நினைக்க நினைக்க கவலையாக இருந்தது. லேசாக இருள் பரவ ஆரம்பித்தது. ஒரு கையால் குருவிக் கூண்டை தூக்கிக்கொண்டு, கவலை நிறைந்த மனதுடனும், ஒழிந்த வயிறுடனும், வீட்டை நோக்கி நடந்தான். தெருமுனை, அங்காளி அம்மன் கோயில் அருகே வந்ததும், அவன் மனம் சுருக்கென்றது. தினமும் வீடு திரும்பும்போது, உண்டியலில் காலணா போட்டுவிட்டுத்தான் போவான் வேலன். இன்று அதற்கும் பஞ்சம் வந்துவிட்டதே என்று நினைத்தபொழுது அவனுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. நாளைக்கு எப்படியும் அரைஅணாவாக உண்டியலில் போட்டுவிட வேண்டும் என்ற தீர்மானத்துடன் மேலே நடந்தான்.

குடிசைக்குள் நுழைந்ததும் தாய் தம்பி ஷண்முகத்துக்கு சோறு போட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்தான். சுடு சோற்றையும், வெங்காயக் குழம்பையும் பார்த்து அவன் வாயில் ஜலம் ஊறியது. தம்பி ரசித்து சாப்பிட்டுக்கொண்டிருந்தான். தாயும் பரிவுடன் பரிமாறிக்கொண்டிருந்தாள். வேலனைப் பார்த்ததும், 'பார்த்தாயா—வேலா—உன் தம்பிக்கு கல்யாணம் செஞ்சு வைக்கணுமாம். ஒரு பொண்ணைப் பார்த்து வச்சிட்டு வந்திருக்கான். என்ன இருந்தாலும் மூத்தவன் தீ கட்டிக்கிட்ட பிறகுதான் இளையவனுக்கு கல்யாணம். அது தானே முறை' என்றாள் தாய்.

வேலனுக்கு எரிச்சலாக வந்தது. 'ஆமாம் மூத்தவன் சம்பாதிக்கிறேன் பாரு, கை நிறைய. இங்கே சோத்துக்கே லாட்டரி. இதிலே கல்யாணம் வேறே கேட்குது. ஒண்ணும் வேண்டாம். தம்பிக்கு சோடா பாக்டரியிலே வேலை. சம்பாத்தியம் இருக்கு. அவன் கட்டிக்கட்டும்' என்றான் அழுத்தமாக.

சம்பாத்தியம் இல்லாதது மட்டும்தானா தன்னிடமிருக்கும் குறை? இந்த ஊனக் கையை என்ன செய்வது? நொண்டிப் பிள்ளையை எந்தப் பெண்தான் விரும்புவாள்? இந்த நினைப்பே அவனுக்கு வேம்பாகக் கசந்தது.

'சரி, சாப்பிட வா—அப்புறம் கலியாணத்தைப்பற்றி யோசிக்கலாம்' என்று தட்டை வைத்தாள் தாய்.

கை, கால் கழுவிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தான் வேலன். எதிரே உட்கார்ந்திருந்த தம்பி ஷண்முகத்தை நிமிர்ந்து பார்த்தான் வேலன். அந்த சிம்மிணி விளக்கின் வெளிச்சத்தில் ஷண்முகத்தின் சுருண்ட தலைமயிரும், பிரகாசமான கண்களும், பலம் வாய்ந்த கைகளும், பார்க்க மிகவும் அழகாயிருந்தது. நாளெல்லாம் உழைத்துவிட்டு, 'லபக் லபக்' என்று சோற்றை விழுங்கிக்கொண்டிருந்தான் ஷண்முகம். அவன் அழகைப் பார்த்தாலே எந்தப் பெண்ணும், கலியாணம் செய்துகொள்ள சம்மதித்துவிடுவாள். தனக்கு அழகில்லை என்பதையும் அவனால் நினைக்காமலிருக்க முடியவில்லை. தட்டில் வைத்த சோற்றை, நல்ல பசியிருந்தாலும் அவனால் ருசித்துச் சாப்பிட முடியவில்லை. இன்று தான் ஒன்றும் சம்பாதிக்கவில்லை, தம்பியின் சம்பாத்தியத்தால் சாப்பிடுகிறோம் என்று மனம் வேறு குத்திக் காட்டிக்கொண்டிருந்தது.

கிண்ணத்தால் தண்ணீரை எடுத்து குருவிக் கூண்டினுள் வைத்துவிட்டு, குடிசை திண்ணையில் வந்து உட்கார்ந்தான் வேலன். 'தம்பி இன்னிக்கி ஏதாவது துட்டு கிடைத்ததா?' என்றாள் தாய். 'இல்லை. இன்று எதுவும் கிடைக்கவில்லை. காலணா கூட என்னிடம் கிடையாது' என்றான் எரிச்சலுடன் வேலன்.

ஷண்முகம், எப்பவுமே, காரியவாதி. அதிகமாக பேசமாட்டான். வேலைக்கு போவது, கிடைத்த பணத்தைத் தாயிடம் கொடுப்பது, இதைத் தவிர, வீட்டுக் கவலைகள் எதுவும் அவனுக்கு கிடையாது. அண்ணனிடமும் அதிகமாகப் பேசமாட்டான்.

மறுநாள் ஒருவித புது உணர்ச்சியுடன் இன்று எப்படியும், எட்டணாவாவது சம்பாதித்துவிட வேண்டும் என்ற உறுதியுடன், வேப்ப மரத்தின் முன்னால் கோணியை விரித்து ஏடுகளைப் பரப்பினான். அன்று யார் முகத்தில் விழித்தானோ. எட்டு மணிக்குள் ஒன்று, இரண்டு என்று நாலு பேர் ஜோசியம் பார்த்துவிட்டார்கள். நாலணா வரும்படி. வேலனின் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது. அன்று குருவிகளுக்கு கொய்யா பழம் வாங்கிப் போட்டான். திரும்பிப் பார்த்தான் வேலன். அப்பொழுதுதான் பொரி உருண்டைக் கூடையுடன் தெய்வானை வருவது தெரிந்தது. 'என்ன அம்மே, இத்தனை நாழி. சீக்கிரம் வியாபாரத்தை ஆரம்பி' என்று விரட்டினான் குஷியுடன். 'உங்களுக்கு இன்னிக்கி நல்ல ராசிபோலிருக்கிறது' என்றாள் தெய்வானை; முறத்தில் பொரி உருண்டைகளை பரப்பியபடி. 'எப்படித் தெரிந்தது' என்றான் வேலன் வியப்புடன்.

'தெரியாதா பின்னே. காலை எட்டு மணிக்கே, கண்ணாடி கிளாஸில் சூடான டீயை சாப்பிடறீங்களே. வரும்படி இல்லேன்னா பச்சைத் தண்ணிகூட சாப்பிட மாட்டீங்களே' என்று சிரித்தாள் தெய்வானை. பேச்சுக்கிடையே இரண்டு பேர் ஜோசியம் பார்க்க வந்துவிட்டார்கள். வேலனுக்கு உலகமே சந்தோஷமயமாகத் தோன்றியது.

திடீரென்று மழை பிடித்துக்கொண்டது. குருவிக் கூண்டை தூக்கிக்கொண்டு பக்கத்திலிருக்கும் மண்டபத்துக்கு விரைந்தான் வேலன். தெய்வானையும் பொரி உருண்டைகளை அள்ளி கூடையில் போட்டுக்கொண்டு மண்டபத்துக்கு ஓடினாள். அவள் மழையில் நன்றாக நனைந்துவிட்டிருந்தாள். புடவைத் தலைப்பால் தலையைத் துடைத்துக்கொண்டாள். மண்டபத்தில், மழைக்காக ஒதுங்கியிருந்தவர்கள், வேலனையும் குருவி கூண்டையும் பார்த்ததுமே, பொழுதாவது போகுமே என்று ஜோசியம் பார்த்தார்கள். வேலனிடம் துட்டு சேர்ந்தது. இடையே 'பொரி உருண்டை' என்று தன் வியாபாரத்தையும் ஆரம்பித்தாள் தெய்வானை.

யாரோ ஒருவர் வாங்கி தின்று விட்டு, 'ஐயே—நமுத்து போச்சுது. இந்த மழையிலே பொரி நன்றாக ஜில்லிட்டுவிட்டது' என்று தமது அபிப்பிராயத்தை தெரிவித்தார். அதன் பிறகு யாரும் அந்தப் பொரி உருண்டையை கண்ணெடுத்தும் பார்க்கவில்லை.


ஒருவாறாக மழை ஓய்ந்தது. மண்டபத்திலிருந்து வேலனையும் தெய்வானையையும் தவிர, மற்றவர்கள் எல்லோரும் போய்

விட்டார்கள். வேலன் தூணில் சாய்ந்து உட்கார்ந்திருக்கும் தெய்வானையை உற்றுப் பார்த்தான். அவள் பச்சை கண்டாங்கி சேலையும், உடலைப் பிடிக்கும் சிவப்பு ரவிக்கையும், அவள் அழகு முகமும், சீவி முடிந்த கொண்டையும் அவன் உள்ளத்தில் புகுந்து கிளுகிளுப்பை உண்டாக்கியது. 'தெய்வானை, என் தம்பிக்கு கலியாணம் நடக்கப்போவுது. அதற்கு முன்னால் என்னைக் கலியாணம் கட்டிக்கச் சொல்லறாங்க எங்க அம்மா' என்று வேலன் பேச்சை ஆரம்பித்தான்.

தெய்வானைக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. 'நல்ல பொண்ணாகப் பார்த்துக் கட்டிக்குங்க. கலியாண விருந்துக்கு நானும் வந்திடறேன்' என்றாள் சுரத்தில்லாமல். 'நல்ல பெண்ணாக, எனக்கு உன்னைவிட யாரையும் தெரியாது' என்றான் வேலன் கபடமில்லாமல். தெய்வானை வெகுண்டு எழுந்தாள். 'என்ன சொன்னீங்க? என்னையா கலியாணம் செய்துகொள்ள ஆசைப்படறீங்க. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதை உங்களுக்கு தெரியுமா? அந்தமாதிரித்தான் உங்கள் நினைப்பும். எனக்கு கலியாணம் நிச்சயமாகிவிட்டது. வேறு மாப்பிள்ளையும் பாத்தாச்சு. உங்க எண்ணத்தை மறந்திடுங்க. உங்கள் கை ஊனத்துக்குச் சரியா—ஒரு கால் நொண்டி பெண்ணைப் பார்த்துக் கட்டிக்குங்க' என்றாள் கேலியாக. இந்த வார்த்தைகளை, அதுவும் தன் ஊனத்தை ஒரு பெண் சுட்டிக் காட்டிப் பேசியதை அவனால் பொறுக்கவே முடியவில்லை. கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல், என்ன சொன்னாய்? என்னையா கேலி செய்கிறாய்? என்று கூறியபடியே அசுர வேகத்துடன் எழுந்து தெய்வானையின் தாடையில் ஒரு அறை விட்டான். அவள் 'ஓ' என்று அழுதாள். இந்த கலாட்டாவில் பொரி உருண்டைக் கூடை வேலனின் கால் பட்டு உருண்டது. உருண்டைகள் நாலாபக்கமும் சிதறி ஓடின. 'அப்படி உங்களை என்ன சொல்லிவிட்டேன். என்னை அடிச்சதுக்கு உங்களை என்ன பாடுபடுத்தறேன் பாருங்க. கேட்க ஆள் இல்லை என்று நினைச்சிட்டீங்களா?' என்று வீறிட்டாள் தெய்வானை.

'சீ, வாயை மூடு. ஒரு பெண்ணுக்கு என்ன கர்வம்? என்ன ஆணவம்? உன்னைவிட அழகியே இல்லை என்று நினைத்து இப்படி துள்ளுகிறாய். இந்தப் பேச்சுக்கு நீ, ஒரு கால் நொண்டிக்குத்தான் மனைவியாகப் போகிறாய் பாரு. இது என் இதயத்திலிருந்து எழுந்த வார்த்தை. பார்த்துக் கொண்டே இரு' என்று சொல்லிவிட்டு, விடுவிடென்று குருவிக் கூண்டை எடுத்துக்கொண்டு நடந்தான். நன்றாகத் தூறிய மழையைக்கூட அவன் பொருட்படுத்தவில்லை. சற்று தூரம் சென்ற பிறகுதான் அவனால் யோசிக்க முடிந்தது. அவளைத் தொட்டு அடித்தது பெரும் குற்றம் என்றுதான் அவனுக்குத் தோன்றியது. அவள் நிஜத்தைதானே சொன்னாள். அவளுக்கு எப்படியும் நான் ஜோடி இல்லைதான். எனக்கு இப்படி ஆத்திரமே வந்திருக்கக் கூடாது என்று தன்னையே நொந்துகொண்டான்.

வீட்டுக்கு வந்ததும் கிடைத்த காசை தாயின்முன் போட்டுவிட்டு, பசியில்லை, சாப்பாடு வேண்டாம் என்று சொல்லி படுத்துவிட்டான். கண்ணை மூடினால், தெய்வானையின் கண்ணீர் வழியும் முகம் அவன் கண்முன் தோன்றியது. சுமுகமாக ஆரம்பித்த பேச்சு, இப்படி சண்டையில் வந்து முடியும் என்று அவன் நினைக்கவே இல்லை. நாளை எப்படியும் அவளிடம் மன்னிப்புக் கேட்டுவிட வேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டான். வாசல் திண்ணையில் தாயார், 'இன்னும் உன் தம்பி சாப்பிட வரவில்லையே. அம்மா-முருங்கைக் கீரை பொரியல் செய்து வை என்று ஒரு கட்டு முருங்கை கீரையைக் கொண்டுவந்து போட்டுவிட்டு போனானே. அவனுக்குப் பிடித்த சீரக ரசம் வேறு செய்திருக்கிறேன். எல்லாம் ஆறி அவலாகப் போய்விடும். மணி ஒன்பது அடிச்சாச்சு. இப்படி சாப்பிடாமல் எங்கே போயிருப்பான்' என்று அரற்றிக்கொண்டிருப்பது வேலனின் காதில் விழுந்துகொண்டுதான் இருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் விர்ரென்று ஷண்முகம் அறைக்குள் வந்தான். 'ஏண்டா இத்தனை நாழி?' என்று தாய் கேட்பதையும் கவனியாமல் 'அண்ணா நீ எதற்காக தெய்வானையை அடித்தாய்? பதில் சொல்' என்று அதட்டினான் அவன் முகம் கோபத்தால் சிவந்திருந்தது.



வேலன் துள்ளி எழுந்தான். 'அது என் சொந்த விஷயம். அடித்தேன் அதை நீ யாரு கேட்பதற்கு?' என்று இரைந்தான்.

'உன் சொந்த விஷயமா? நீ ஒரு நொண்டியைத்தான் கலியாணம் செய்துகொள்ளப் போகிறாய் என்று தெய்வானைக்குச் சாபம் வேறு கொடுத்தாயாமே. அப்படி உன் குருவி ஜோசியம் சொல்லுதோ? மஹா ஜோசியரு, வருங் காலத்தைச் சொல்லிட்டாரு' என்றான் கேலிக் குரலில் ஷண்முகம்.

'அடே. என் தொழிலைப் பழிக்காதே. இந்த விஷயத்தில் நீ தலையிட வேண்டாம்' என்று வேலன் கூறுவதற்குள் 'தலையிடத்தான் செய்வேன். கலியாணமாகாத ஒரு பெண்ணைத் தொட்டு அடிக்க உனக்கு வெட்கமாயில்லை?' என்றான் ஷண்முகம்.

'நீ யாரடா—என்னைக் கேட்பதற்கு?' என்று ஒரு அறை விட்டான் வேலன் ஷண்முகத்தின் தாடையில். ஷண்முகத்தின் முரட்டுக் கரம் சும்மா இருக்கவில்லை. திரும்ப இரண்டு கொடுத்தான். 'ஏண்டா இப்படி அடிச்சுக்கறீங்க' என்ற தாயின் குரலை இருவரும் லட்சியம் செய்யவே இல்லை.

'நான்தான் தெய்வானையைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறேன். அதனால்தான் உன்னைக் கேட்டேன். இனிமேல் நான் ஒரு நிமிஷம் இந்த வீட்டில் உன்னுடன் தங்கமாட்டேன்' என்று கூச்சலிட்டான் ஷண்முகம்.

இந்த வார்த்தைகள் வேலனின் தலையில் ஓங்கி அடித்ததுபோலிருந்தது. 'ஷண்முகமா தெய்வானையைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறான்!' என்று நினைத்ததும், அடிபட்ட கன்னத்தை மெதுவாக தடவிக்கொண்டே 'தம்பீ, நீ போக வேண்டாம். ஷண்முகம், நானே போகிறேன். தெய்வானை உனக்கு மனைவியாகப் போகிறாள் என்பது எனக்குத் தெரியாது. நீங்கள் சந்தோஷமாக வாழுங்கள்' என்று புறப்பட்டுவிட்டான்.

'இப்போ ஆசி கூறுறரு. உங்க ஆசி இங்கே யாருக்கும் தேவை இல்லை. போகிறபோது உங்க சொத்தையும் தூக்கிட்டு போங்க' என்று அறையின் ஓரத்தில் இருந்த குருவிக் கூண்டைத் தூக்கி முற்றத்தில் எறிந்தான் ஆத்திரம் தணியாத தம்பி.

குருவிக் கூண்டு தலைகுப்புற முற்றத்தில் விழுந்தது. பதட்டத்துடன் கூண்டைக் கையிலெடுத்துக்கொண்டு வெளியே வேகமாக நடந்தான் வேலன். 'அட மவனே எங்கேடா போறே' என்று பிரலாபித்த தாயின் குரலையும் அவன் கவனிக்கவில்லை. மறுநாள் காலை வரையில் பாழடைந்த மண்டபத்திலே உட்கார்ந்திருந்தான். பலவிதமாக யோசித்துக்கொண்டிருந்தான். காலையில் சண்டையின்போது சிந்திய பொரி உருண்டைகளில் மொய்த்துக்கொண்டிருந்த எறும்பு இடையிடையே கடித்துக்கொண்டிருந்தது. அந்த இருட்டிலும் விஷயம் தெரியாத குருவிகள் 'கீ—கீ' என்று கத்திக்கொண்டிருந்தது.

விடியற்காலை பஸ்ஸில் ஊரை விட்டுப் புறப்பட்டுவிட்டான் வேலன். காலை வெளிச்சத்தில் பார்த்தவுடன்தான், ஷண்முகம் கூண்டைத் தூக்கி எறிந்ததன் பயனாக தனது அருமை குருவிகளில் ஒன்றின் கால் ஊனமாகிவிட்டிருப்பதையும், அது நொண்டி நொண்டி நடப்பதையும் கவனிக்க முடிந்தது வேலனால். அவன் கண்ணிலிருந்து நீர் வழிந்தது. மேல் துண்டால் கண்ணைத் துடைத்துக்கொண்டான். பஸ் ஓடிக்கொண்டே இருந்தது.

நாட்கள் ஓடின. ஊரைவிட்டு வேலன் நல்ல நேரத்தில் புறப்பட்டான் என்றுதான் சொல்ல வேண்டும். ஆலமரத்தடி குருவி ஜோசியனையும் அவன் நொண்டிக் குருவியையும் அறியாதவர்கள் அந்த ஊரில் யாருமே இல்லை என்றால் அது பொய்யாகாது. கடவுள் கிருபையால் வேலன் சொல்லும் ஜோசியமெல்லாம் பலித்துக்கொண்டிருந்தது. அவன் நல்ல காலம் என்றுதான் சொல்ல வேண்டும். கையில் நிறைய பணம் புரண்டுகொண்டிருந்தது. வருடங்கள் ஓடி மறைந்தன. வேலன் கையில் இப்பொழுது ரொக்கமாக ஐநூறு ரூபாய் சேர்ந்துவிட்டது. ஊருக்குப் போய்த் தன் கிழத் தாயாரையும், தம்பியையும் பார்க்க வேண்டும் என்ற ஆசை எழுந்துகொண்டேதான் இருந்தது அவனுக்கு. ஒரு நாள் துணிந்து புறப்பட்டுவிட்டான்.

உடலில் வெள்ளைச் சட்டை இடையில் பட்டுக்கரை வேஷ்டி சற்று பருத்த உடல், இப்படி பஸ்ஸிலிருந்து இறங்கிய வேலனைப் பார்த்து யாரும் 'குருவி ஜோசியன் வேலன்' என்று சொல்ல மாட்டார்கள். தன் பழைய குடிசைக்கு முன் வந்து நின்றான் வேலன். வெளியே யாரையும் காணவில்லை. தன் தாய் இருக்கிறாளோ, இறந்துவிட்டாளோ என்ற சந்தேகம் அப்பொழுதுதான் அவனுள் எழுந்தது. எதற்கும் 'அம்மா' என்று குரல் கொடுத்தான். ஒரு பெண் வெளியே வந்தாள். உடல் இளைத்து வயிறும் பிள்ளையுமாக நிறை மாத கர்ப்பிணி அவள். கந்தல் உடையும், எண்ணெய் போட்டு வாரப்படாத அவள் தலை மயிரும், இளைத்த உடலும் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது. 'இதுதானே ஷண்முகத்தின் வீடு' என்றான் வேலன். 'ஆமாமுங்க. உள்ளே வாருங்கள்' என்றாள் அவள். வேலன் அறைக்குள் நுழைந்தான். உடம்பு இளைத்து நோயாளியாக, கந்தல் பாயில் படுத்திருந்த ஷண்முகத்தைப் பார்த்ததும் 'தம்பி, ஷண்முகம்' என்று கதறிவிட்டான்.

'அண்ணா நீங்களா? அய்யோ உங்களை வருத்தப்படுத்தியதன் பலனை அனுபவித்துவிட்டேன். உங்களை வீட்டைவிட்டு துரத்தியபின் ஒரு நாள்கூட நான் சுகமாக இருக்கவில்லை. நம் தாய் இறந்துவிட்டாள். நான் தெய்வானையைக் கலியாணம் செய்துகொண்டேன். மறு வாரமே, சோடா வண்டி ஒரு லாரியில் இடித்து, விபத்து நேர்ந்துவிட்டது. என் ஒரு காலை இழந்துவிட்டேன். இப்பொழுது நான் நொண்டி' என்று கதறினான் ஷண்முகம். 'தம்பி, என் வாயில் சனிதான் இருந்திருக்க வேண்டும். நான் இட்ட சாபம் இப்படியா பலிக்க வேண்டும்' என்று தம்பியை கட்டிக்கொண்டு அழுதான் வேலன். தெய்வானையும் இந்தக் காட்சியைப் பார்த்து கண்ணீர் விட்டாள். வெகு நேரம் வருந்திய பிறகு, சகோதரர்கள், ஒருவரை ஒருவர் தேற்றிக்கொண்டார்கள்.

ஷண்முகத்துக்கு தண்டும் சிண்டுமாக நாலு குழந்தைகள் இருப்பதையும், குடும்பம் தரித்திரத்தில் தவிப்பதையும், காலை இழந்த கணவனையும், குழந்தைகளையும் காப்பாற்ற தெய்வானை தோசை வியாபாரம் செய்கிறாள் என்பதையும் தெரிந்துகொண்டான் வேலன். அன்று அழகியாகத் திகழ்ந்த தெய்வானையா இவள்? என்றுதான் நினைக்கத் தோன்றியது.

அன்று இரவு எத்தனையோ, நாட்களுக்குப்பிறகு அண்ணனும், தம்பியும் தெய்வானை சமைத்துப் போட்ட சோற்றையும், கத்தரிக்காய் குழம்பையும் ரசித்து சாப்பிட்டார்கள். 'அண்ணு, நீ இனிமேல் இங்கேயே இருந்துவிடு' என்றான் தம்பி ஆசையுடன். 'ஆகட்டும்' என்றான் வேலன். இரவு வெகு நேரம் கயிற்றுக் கட்டிலை, முற்றத்தில் போட்டுக்கொண்டு இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு வேலன் திண்ணையில் படுத்தான். அண்ணனைக் கண்ட மன நிறைவுடன், எத்தனையோ நாட்களுக்குப் பிறகு குறட்டைவிட்டு, குடிசைக்குள் தூங்கினான் ஷண்முகம். பொழுது விடிந்ததும், சூடான காப்பியுடன் திண்ணைக்கு வந்த தெய்வானை 'அய்யோ, உங்க அண்ணனைக் காணவில்லையே' என்று குரல் கொடுத்தாள். ஷண்முகம் பதறிப் போய் வெளியே வந்து பார்த்தான். வேலனின் 'பை' அங்கேயே இருந்தது. அதில் ஒரு கடிதம் சொருகியிருந்தது.

தம்பி, உங்கள் இருவர் வாழ்க்கையும் பாழானதற்குக் காரணம், என் ஆத்திர புத்திதான் என்று என் உள்ளம் கூறுகிறது. இதற்கு நீயும், தெய்வானையும் என்னை மன்னித்துவிட வேண்டும். மனிதனுக்கு ஆத்திரமே கூடாது. அப்படி ஆத்திரமில்லாமல் அமைதியாய் வாழ, நான் என் வாழ்நாளை சன்னியாச மார்க்கத்தில் திருப்பிவிடப் போகிறேன். என் பையில் ஐநூறு ரூபாய் வைத்திருக்கிறேன். அதை வைத்து ஒரு பெட்டிக் கடை வைத்து உட்கார்ந்தவாக்கில் வியாபாரம் செய்து பிழைத்துக்கொள். நான் எங்கிருந்தாலும், என் ஆத்ம திருப்திக்காக அனுப்பும் பணத்தை, தயவு செய்து பெற்றுக்கொண்டு, என் மனதை மகிழச் செய். குழந்தைகளுக்கு என் அன்பு. என்னைத் தேட வேண்டாம்' என்று இருந்தது.

ஒரே நாளில், வந்த அண்ணன் மறைந்ததை நினைத்து ஷண்முகம் கண்ணீர் விட்டான். தெய்வானையும் முந்தானையால் கண்ணைத் துடைத்துக்கொண்டாள்.

ஊருக்குப் போய்விட்டு வந்த பிறகு, குருவி ஜோசியர் திடீரென்று கூண்டைத் திறந்து, இரண்டு குருவிகளையும் பறக்க விட்டதன் ரகசியம் தெரியாமல் விழித்தார்கள். ஜோசியரைச் சுற்றி நின்றவர்கள். அதேபோல் திடீரென்று நொண்டி ஷண்முகம், பெட்டிக் கடை வைத்து, முதலாளியாகிவிட்டதையும் அவனுக்கு மாதம் தவறாமல் இருபது, முப்பது என்று மணியார்டர் வருவதன் காரணத்தையும் தெரிந்துகொள்ள முடியாமல் விழித்துக்கொண்டு இருந்தார்கள் ஷண்முகத்தின் அண்டை வீட்டுக்காரர்கள்.

158641



[illegible] ஸ்டேஜ் குழுவினர் 'வடிவேலு வாத்தியார்' நாடகத்தை [illegible] எழுதிய ஸ்ரீ தி. ஜானகிராமனுக்கு [illegible] டாக்டர் மு. வரதராசனார்.



ஸ்ரீராமபக்த தியாக பிரும்ம தனுர்மாத பஜனை சபையார் மயிலாப்பூரில் ஸ்ரீ கபாலீச்வரர் மாடவீதிகளில் தனுர்மாதம் முழுவதும் பஜனை நடத்தினர்.

---

Printed and published By N. Rajagopalan at The "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor : C. R. Srinivasan, B. A.

Regd No 2514 Registered as a Newspaper in CEYLON

மாசற்ற பூப்போன்ற
மேனி அழகிற்கு......




கவர்ன்மெண்ட் சோப் தொழிற்சாலை, பெங்களூர்-3.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |